பெரிய எழுத்து

# சூவல்லி சூவல்லி

கதை

ஆர்.ஜி.பதி
கம்பெனி

ஸ்ரீ

புகழேந்திப் புலவர் இயற்றிய

# ஆரவல்லி சூரவல்லி

## கதை

[ படங்களுடன் ]




பிரசுரித்தவர் :

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

4, வெங்கட்ராமய்யர் தெரு,

(மின்ட் போஸ்ட்)

இதன் விலை]   சென்னை-1.   [ரூபாய் 1-75

வாகீஸ்வரி அச்சகம்,
சென்னை - 1,
1976

ஸ்ரீ

ஸ்ரீ மகா பாரதத்திலிருந்து
புகழேந்திப் புலவரருளிச்செய்த

# ஆரவல்லி சூரவல்லி கதை

## விநாயகக் கடவுள் துதி

### கலிவிருத்தம்

வாலைச்சந்திரன் போலும்தனங்காண்
வேரையேற்கும் வீரைபூரையாரையா
வாலைதன்னை வழுத்தமிகவும்வெட்
பாலையானைமுகனைப் பணிகுவாம்
ஆரைசூரை யென்னுமாயிழை
மாரையல்லி மகாராஜன்போர்புணர்
சீரைகூறைத் திருச்செந்தூர்கந்தனின்
பேரைவாழ்த்தியே பேசலுற்ருமரோ.

### ஓரடிச் செந்துறை

முந்திமுந்திவிநாயகனே முக்கணருர்தன்மகனே
சத்திக்கணபதியே தையநல்லான்புத்திரனே
கந்தருக்குமுன்பிறந்த கணபதியேமுன்னடவாய்
என்றுயர்தீர்த்தருளு வெம்பிரான்தன்மகனே
வித்தைக்குவல்லவனே வேழமுகத்தோனே
சத்திக்கணபதியே சண்முகற்குமூத்தவனே
அத்திமுகத்தோனே அருள்சடையாள்புத்திரனே
செல்வக்கணபதியே செங்கண்மால்தன்மருகா
ஆலடிப்பிள்ளையரரே அரசடிவிநாயகனே
எடுத்துப்பலகார மின்பமுடன்நான்படைப்பேன்
கசகசபணியாரங் கற்கண்டுசர்க்கரையும்
அவல்கடலைபொறியுண்டை அதிரசமுந்தேன்குழம்பும்
கொப்பரைத்தேங்காயும் கோதுபடாசர்க்கரையும்
வாழைப்பழமும் வகைக்கொருசெங்கரும்பும்
அப்பமுடன்தோசை ஆனசுகிவடையும்
இந்தப்பலகார மின்பமுடனமுதுசெய்வோம்

கூட்டியமுதுசெய்வாய் குளக்கரையிற்பிள்ளையாரே
பாரதத்தைஎழுதிவைத்த பார்வதியாள்புத்திரரே
ஐவரிடநற்கதையை யுன்பாகபாடுதேற்கு
எனக்குவரந்தருவாய் ஈஸ்வரியாள்புத்திரனே
பஞ்சவர்கள்நற்கதையைப் பாடவரமருள்வாய்
நாவுதவருமல் நல்லோஸ்சநீதருவாய்
ஏடுதவருமல் எழுத்தாணிசாயாமல்
உன்பாதஞ்தஞ்சமென்று உச்சரித்தேன்புத்தியிலே
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
கொண்டுமேநான்சொரிந்து கோலமுடிசாய்த்தேன்
நெஞ்சுதனில்நீயிருந்து நின்றிருக்கும்பிள்ளையாரே
வருந்தினேனுன்பாதம் மலர்தூவிதெண்டனிட்டேன்
அருந்தமிழாலாரவல்லி யழகானகதைபாட
வாணிசரஸ்வதியே மனதில்குடியிருந்து
நாவில்தரியுமம்மா நான்முகனுர்தேவியரே
வேதநூல்சாஸ்திரங்கள் விளங்குந்தயாபரியே
தஞ்சமம்மாவுன்பாதம் தாயேபராபரியே
பஞ்சவர்கள்தங்கைமகன் பாலனென்னுமல்லிமுத்து
அல்லிமுத்துவீரியத்தை யன்பாகப்பாடுகிறேன்
வல்லியென்னும்ரெட்டிப்பெண்கள் வாய்த்தபெருமைதன்னை
மறவாமல்சொல்லுதற்கு மாதாவேமுன்னடவாய்
குருவினுடசீர்பாதங் கொண்டேன்சிரசுதன்னில்
கற்றவர்கள்சீர்பாதம் கைதொழுதேனிப்போது
வித்துவனுர்பாதம் மேதினியில்யான்பணிந்தேன்
நல்லோர்கள்சீர்பாதம் நன்ருய்வணங்கிநின்றேன்
பெரியோர்கள்சீர்பாதம் போற்றிவணங்கிநின்றேன்
அடியேன்நான்பாடுதற்கு அருந்தமிழைக்கேட்போர்கள்
பிழைகளிருந்தாலும் புலவர்பொருத்தருள்வீர்
சொற்குற்றம்முண்டானுல் தொல்புவியோர்பொருத்தருள்வீர்
தாரார்புகழுடைய தர்மருடபாரதத்தை
பத்திலொருகூறு பாங்குடனேசொல்லுகிறேன்
துரியோதிரனுர்க்கும் சீரானபஞ்சவர்க்கும்
சூதுபொருத்துமுன்னே சுகமானவாழ்க்கையிலே
பகைகள்வராதமுன்னே சிட்டணத்திலிருக்கையிலே

உயுத்தியம்பொருந்துமுன்னே உத்தமர்களைவருந்தான்
ஐவர்தனியே அர்சுசெலுத்துகையில்
தாரார்புகழுடைய தருமர்கொலுதனிலே
வீமன்விஜயன் விதமாய்கொலுவிருக்க
பத்தினியாள்துரோபதையும் பாங்காய்க்கொலுவிருக்க
மாயர்சகாயன் மனமகிழ்ந்துபார்த்திருக்க
சந்தோஷமாக தானிருக்கும்வேளையிலே
மந்திரிராஜாக்கள் மனமகிழ்ந்துவீற்றிருக்க
தருமருடநாடு தழைத்துமிகவாழ்ந்திருக்க
ஆயன்பெருமாளிப்போ ஒருவதிசயத்தைதானினைந்து
துவாரகைவிட்டுத் தோற்றமுடன்மாயவரும்
தர்மர்பக்கல்வந்தாரே தரணியளந்தோனும்
ஆரவல்லிசூரவல்லி அழகானவீரவல்லி
ஒவ்வேலுமுத்துச்சாலை எவ்வேலுமிந்தசாலை
வெவ்வேலுமுத்துசாலை இவ்வேலுநாகதாளி
அக்காளுந்தங்கையுமாய் ஆண்டிருப்பார்பட்டணத்தை
ஏழுபேர்ரெட்டிபெண்கள் இணைபிரியாதிருப்பார்கள்
அந்த-பெண்களைவெற்றிகொள்ள யார்கையிலாகுங்காண்
குற்றங்கள்பேசிதான் கூறியேபோனவர்கள்
இவ்வளவுயென்றுசொல்லி யெண்ணமுடியாது
போனவர்கள்மெத்தவுண்டு பூவுலகில்மன்னவர்கள்
வெற்றிகொண்டுசெயித்து மீண்டுவந்தபேர்களில்லை
அப்படிக்கொத்த ஆரவல்லிபட்டணத்தை
நீங்கள்போய்வெற்றிகொண்டால் நீணிலத்தில்பேராமே
என்றுசொல்லிமாயவரும் எடுத்துரைத்தார்பஞ்சவர்க்கு
அப்போதுபாண்டவர்கள் ஆயனுக்கேதுசொல்வார்
வாருமையாசுவாமி வன்மையுள்ளமாயவரே
எங்களை-ஆரவல்லிபெண்கள் ஆகடியஞ்சொன்னதில்லை
குருகுலத்துமன்னர்கொரு கொடுமைகளைச்சொன்னதில்லை
பஞ்சவருக்காகவொரு பந்தயங்கள்சொன்னதில்லை
விருதென்றுதாமுரைத்து வேந்தனங்கேபோனுக்கால்
வழியில்கிடந்த வாளதனைத்தானெடுத்து
கால்மேலேபோட்டுக்கொண்ட கதையொக்குமாயவரே
என்றுசொன்னபஞ்சவர்களேதுசொன்னார்மாயவரும்

பாண்டவர்கள்வீரியம் பாருலகில்கிட்டாது
ஐவரிடவீரியம் யாருமில்லைவையமத்தில்
வலிமையுள்ளபஞ்சவர்கள் வையகத்தில்கிட்டாது
உபாயமுள்ளபஞ்சவர்க் கொருவருமெதிரில்லை
அருச்சுனன்வீமனுக்கு யாருமெதிரில்லை
விருதுகள்பறித்திடுவார் வெற்றிகொண்டுவந்திடுவார்
எதிர்த்ததொருமங்கையரை இரக்கடிப்பார்தப்பாது
குருகுலமன்னவர்க்கு குவலயத்தேயெதிருமுண்டோ
வலுமையில்மிகுந்தவன் வண்மையுள்ளபோர்வீமன்
பலத்தில்மிகுந்தவன் பேர்பெரியமதவீமன்
மாயவருமிவ்வார்த்தை மகிழ்ந்துமேபஞ்சவர்கள்
போற்றியொருவார்த்தை புகழுவாரப்போது
உலகம்பதினாலும் உண்டதொருமாயவரே
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆதிகிருஷ்ணநாராயணரோ
இவ்வுலகிலுன்னருளால் எதிர்த்தவரைச்சங்கரிப்போம்
வலிமையாலொருவரை மண்ணுலகில்மெத்தவுண்டு
இவ்வார்த்தைகேட்டு எம்பெருமாள்மேகவர்னர்
வந்தசண்டைவிடுவதில்லை வலியசண்டைபோவதில்லை
பெண்கள்மேல்படையெடுத்து போவரோராஜாக்கள்
அல்லவென்றுபோனாலும் அரசர்நகைப்பார்கள்
பூவுலகிலரசர்க்குப் பொருந்துமோமாயவரே
மண்டலத்துராஜாக்கள் மதிப்பாரோநம்மையிப்போ
இப்படியாக எடுத்துரைப்பார்பஞ்சவர்கள்
கேட்டந்தமாயவரும் கிருபையுடனேதுரைப்பார்
வீமனை நோக்கி விளம்புவாரொருவசனம்
ஆரவல்லிசூரவல்லி அழகானபெண்களுந்தான்
விருதினால்வல்லவர்கள் வேந்தர்களைத்தோற்கடிப்பார்
இவ்வுலகில்ராஜாக்கள் யாவரையும்வெல்லவென்று
விருதுகளைப்பறிக்கவென்று வேந்தர்கள்போனதுண்டு
வெற்றிகொண்டுவந்ததில்லை மீண்டும்பிழைத்ததில்லை
இறந்ததோர்ராஜாக்கள் எண்ணமுடியாது
மாண்டுபோனராஜாக்கள் வையகத்தில்மெத்தவுண்டு
செத்தவர்போகச் சாகாமலிருந்தவர்கள்
அடிமைதனஞ்செய்தவர்கள் அளவிடப்போகாது

தொண்டுபட்ட ராஜாக்கள் தொல்லுலகில்மெத்தவுண்டு
பெண்கள்வெற்றிகொண்டு பிரபலமாய்பேருலகில்
இருக்கிறார்பெண்கள் எல்லவர்க்கும்வல்லவராய்
இவர்களுக்கெதிரியுண்டோ என்றுசொல்லிபெண்களுக்கு
ஆங்காரந்தானிருந்து அரசாளும்பெண்களுந்தான்
அவர்களையும்வெற்றிகொண்டா லவனிதனிலெவருக்கும்
பேருபெருமையும் பிரபலமாய்நடக்குமென்றார்
மதவீமனப்போது வாய்திறந்தேதுசொல்வான்
குருகுலத்துமன்னர்கள் குற்றமதுவில்லாமல்
படையெடுத்துப்போவதில்லை பாரளந்தமாயவரே
என்றுரைத்தான்மதவீமன் எடுத்துரைப்பார்ரகுராமர்
அவ்வசனங்கேட்டு ஆயன்பெருமாளும்
மர்மமதைமனதிலெண்ணி மாயவருமப்போது
வீமனைமெள்ளச் சிக்கவைக்கவேணுமென்று
போகும்படிக்கொரு புதுமையைத்தான்நினைத்தார்
எண்ணிமனந்தனிலே ஏதுசொல்வாரெம்பெருமாள்
துவாரகைக்குபோறேனென்று தோற்றமுடனெழுந்திருந்து
நடந்தாரேகிருஷ்ணதேவர் நானிலத்தோர்தாமறிய
மாயவரும்போனபின்பு மன்னவர்களெவருந்தான்
சிங்காதனத்தில் சேரவேகொலுவிருந்தார்
மாயவனார்சொன்ன வசனத்தைமனதில்வைத்து
இருக்குமந்தவேளையிலே ஏற்றதொருமதவீமன்
பொய்கையிலேநீராடிப் புட்பமதுதானெடுத்து
கொண்டுவந்தவீமன் கொற்றவனார்தருமருக்கு
பாதம்விளக்கிப் பணிவிடைகள்செய்தபின்பு
பூவும்புதுமலரும் போதவேதான்சொரிந்து
அண்ணரிடசீர்பாதம் அடிபணிந்துதெண்டனிட்டு
கைதொழுதுநித்தியங் காவலனும்வீற்றிருந்தான்
தருமர்கொலுவிருக்கத் தம்பிமார்வீற்றிருந்தார்
சிங்காதனமேறிச் சீராகவீற்றிருந்தார்
எல்லோருமனமகிழ்ந்து இருக்குமந்தவேளையிலே
ஊரைவிட்டுப்போனபின்பு உலகளந்தமாயவரும்
நெல்லூருபட்டணத்து நேராகத்திசைநோக்கி
நடந்தாரேமாயவரும் நல்லதளங்கூட்டி


ஆரவல்லிகோட்டை அரண்மனைக்காவலுக்குள்
மதிமயக்கமுண்டுபண்ணி மாயவரும்முன்புகுந்து
ஆரவல்லிதான்வளர்த்த அழகரனசாவலுக்கு
சாவலுக்குபதேசம் தான்மொழிந்தாரெம்பெருமாள்
என்னவென்றுபதேசம் எடுத்துரைத்தாரன்னேரம்
ஆண்பிள்ளையாய்ப்பிறந்து அரிவையர்க்குநீபிறந்து
பூனையைப்போலொடுங்கி பூமிகளையாளுகிறீர்
மூக்குமுனையில்லாத மூளியல்லோநீங்களென்று
ரோஷங்களுண்டானால் நொடிக்குள்ளேவாங்களென்று
கூவியழையுமென்று கோபாலர்தாமுரைத்து
துவாரகையைத்தானேக்கித் துரிதமுடன்புகுந்தார்
அப்போதுமதவீம னண்ணருக்குபூசைசெய்ய
கோழிகூவுநேரமதில் கொற்றவனுமெழுந்திருந்து
பூமலரும்கொய்வதற்கு போனன்காண்மதவீமன்
அந்தநல்லவேலையிலொரு அதிசயங்கேட்கலுற்ருன்
நெல்லூருபட்டணத்தில் நின்ருன்திசைமுகத்தில்
கோழிசத்தம்கேட்டானே கொற்றவனும்வீமனுந்தான்
என்னென்றுகூவிற்று இதமானசாவலது
தெண்டுவீமனென்று திடமாகக்கூவிற்று
பின்னுமொருசத்தம் பிரபலமாய்க்கூவிற்று
வீமனென்றுபேர்படைத்து மேதினியில்வாழ்ந்தாயே
எங்களாச்சிபேர்சொல்லி இரந்துண்பார்கோடியுண்டு
சந்தோஷமாகச் சாதனங்கள்போட்டிடுவார்
அப்படியாக வளர்ந்திருக்கிலனேகம்பேர்
என்றுசொல்லிசாவல் இதமாகக்கூவையிலே
அந்தமிகச்சத்தம் ஆணழகன்தான்கேட்டு
செப்பூசிக்கொண்டு செவியினிற்தைத்தாற்போல்
காதினுல்கேட்டான் கனத்ததொருமதவீமன்
கண்கள்சிவக்குதப்போ கடுங்கோபமாகுது
அவ்வலரிகண்கள்ரெண்டும் செவ்வலரிபூர்க்குதப்போ
ஓடிவந்தானண்ணன்பக்கல் உற்றதொருவீரனவன்
வந்துபணிந்தான் மதகரியான்வீமனுமே
சரணம்சரணமென்று சாய்த்தானேதிருமுடியை
கோபங்கள்தான்மிகுந்து கொற்றவனுமப்போது

மற்றுமொருக்கால் மலர்தூவிதெண்டனிட்டான்
தெண்டனிட்டதம்பியரைச் சீராகத்தானெடுத்து
தாரார்புகழ்படைத்த தருமரங்கேயேதுசொன்னார்
பொன்னான மேனியிலே தம்பிபுழுதிபடஞாயமென்ன
வாடிமனந்தளர்ந்து வந்தபுதுமையென்ன
என்றுசொல்லிதர்ம ரிதமாகக்கேட்கையிலே
அப்போமதகரியான் அண்ணன்முகம்நோக்கி
தேவரீர்நானும் திருமஞ்சனமாடியிப்போ
பூவும்புதுமலரும் பொறுக்கவேநான்போனேன்
போனதொருபூந்தோப்பில் புகுந்துதானிருக்கையிலே
பூங்காவனத்தருகே புட்பமதுயெடுக்கையிலே
ஒரு-அதிசயங்கொண்டுவந்தேன் ஆண்டவரேகேளுமினி
நெல்லூருபட்டணம் நேரானதிசையிலேதான்
கோழிகூவினசத்தங் கொற்றவரேதான்கேட்டு
ஓடிவந்தேன்சுவாமி உற்றதொருசேதியென்றான்
அந்தநல்லவார்த்தைகளைச் சொல்லியேகூறுமென்றார்
தளராதனஞ்செயனே தம்பிமதகரியா
என்னென்றுசொல்லிற்றெனக்கரியச் சொல்லுமென்றார்
அப்போதுமதவீமன் அண்ணரைத்தெண்டனிட்டு
சொல்லுகிறேன்சுவாமி சூதுகளில்லாமல்
தெண்டுபெற்றவீமனை திறமாகக்கூவிற்று
உங்கள்பாட்டன்தலைமுறையில் பந்தியங்கள்கூறினது
விருதுவெற்றிகொள்ளலையா வீமனென்றுகுத்துந்தயா
எங்களாச்சிபேர்சொல்லி யவள்பாகம்பூமியிலே
பிச்சைவாங்கித்தின்று பிரபலமாயிருங்களென்று
சொல்லாதவார்த்தைகளை சொல்லியேகூவுதென்றார்
அதுவேகருமமென்று அடியேனுமோடிவந்தேன்
சூரவல்லிபட்டணமே சுருக்காகபோயினும்
பெண்களையும்வென்று பிரபலமாய்வருவதற்கு
உம்மையுத்தரங்கேட்க ஓடிவந்தேன்சுவாமியென்றார்
ஆரவல்லிபட்டணத்தை அழித்துசிறைபிடிக்க
பயணமாயென்னை பண்பாயனுப்புமென்றார்
விருதுகெலித்து வெற்றிகொண்டுநான்வாரேன்
போவேன்றனுப்புமென்று பொற்பாதம்பூண்டுகொண்டான்

2

அப்போதுதருமருந்தா னடைவாகயேதுசொல்வார்
மதவீமாமதகரியே வார்த்தைசொல்லக்கேளுமினி
நெல்லூருபட்டணத்து நேர்மைகளைச்சொல்லுகிறேன்
ஆரவல்லிசூரவல்லி அக்காளுந்தங்கையுமாய்
மந்திரத்தில்வல்லவர்கள் மகாவித்தைக்காரியர்கள்
வித்தையிலேவல்லவர்கள் விதமானரெட்டிப்பெண்கள்
ரெட்டிப்பெண்களென்று ராச்சியங்கள்தானறியும்
ஏவல்கட்டுமந்திரங்கள் எல்லையெங்குங்காத்திருக்கும்
சூரியவித்தையெல்லாம் சூழ்ந்திருக்கும்பூமியிலே
பட்டணத்தைச்சுற்றி பதிங்காதங்காத்திருக்கும்
மூடுபனிபோல மூதண்டமெல்லாம்நிறைந்திருக்கும்
எதிர்த்ததொருராஜாவை வீடழித்துபோட்டுவிடும்
போனதொருராஜாக்கள் பேரழிந்துபோனார்கள்
மந்திரத்தில்வல்லவர்காண் மாயவித்தைகாரியவள்
ரெட்டிப்பெண்ணென்று ராச்சியங்கள்தானறியும்
மாண்டவரேயல்லாமல் மீண்டுவந்தாரில்லையென்றார்
அப்படிக்கொத்த ஆகடியப்பெண்கள்கிட்ட
போவதுநியாயமல்ல புத்தியுள்ளமதவீமா
என்றுதான்தர்மர்சொல்ல இயல்வீமனேதுசொல்வான்
சீவனழிந்து சிவலோகம்போனாலும்
காயமழிந்து கைலாயஞ்சேர்ந்தாலும்
முன்வைத்தகாலைநான் பின்வாங்கப்போறதில்லை
என்னையனுப்புமென்று ஏற்றவேபணிந்துநின்றான்
அப்போதுதர்மர் மதவீமனைப்பார்த்து
பெண்கள்மேல்படையெடுத்து யொழிந்தார்கள்மெத்தவுண்டு
வேண்டாமிந்தவார்த்தை விட்டுவிடுதம்பியென்றார்
அந்தமொழிகேட்டு அண்ணன்பாதம்பணிந்து
வார்த்தைமறுத்தேனென்று மனதிலேவையாமல்
குற்றம்பொறுத்துஅண்ணாநான் கொண்டவிடைதாருமையா
போய்வாடாதம்பியென்று புகழ்ந்துவிடைதாருமையா
அப்போதுதர்ம ரதிவீமனுக்கேதுசொல்வார்
சொன்னதைச்சொன்னேன் சோதிமுடியானே
பிர்மாவின்கற்பனையோ புரட்டவென்றால்முடியாது
போய்வாருந்தம்பியென்று புத்திமதிதானுரைத்தார்

அப்போதுமதவீமன் அண்ணரையுந்தெண்டனிட்டு
நடந்தான்பயணமதாய் நயமாகவரண்மனைக்கு
அரண்மனையில்வந்து ஆபரணந்தானெடுத்தான்
பூட்டியலங்கரித்தான் பொன்னனமேனியெல்லாம்
ஆபரணந்தான்பூண்டு அதிவீமனேதுசெய்தான்
நகைத்தொருசாவல்தன்னை நலமாயெதிர்க்கவேண்டும்
சாவலைகொல்லுதற்கு தனஞ்செயனுமப்போது
எதிரேயொருசாவல் எடுத்தானேயந்நேரம்
சாவலுக்குதீனு சம்பாநெல்லுதானெடுத்து
பத்துகலம்பச்சரிசி பாங்குடனேதான்தீட்டி
முந்தாணிசீலையிலே முடிந்தவனுந்தான்போட்டு
சாவலையுந்தானெடுத்துத் தார்வேந்தனடக்கலுற்முன்
தர்மபுரத்தைவிட்டுச் சம்பங்கிவனங்கடந்து
முல்லைவனங்கடந்து மூங்கில்வனங்கடந்து
தில்லைவனங்கடந்தான செண்பகப்பூவனங்கடந்து
வனமாவனங்கடந்து வாகாகவருகையிலே
நெல்லூருபட்டணத்தை நேராகத்தான்பார்த்து
ஆரவல்லிதூனியங்கள் பகர்ந்துநிற்கிறதை
பார்த்தான்மதவீமன் பைங்கிலியாள்மந்திரத்தை
நாரதபகவானும் நன்றாகவந்துகண்டார்
கண்டதொருநாரதரும் கடுகநடக்கலுற்றார்
ஆரவல்லிபக்கலுக்கு அன்பாகபோகலுற்றார்
வந்ததொருநாரதரும் மங்கையர்க்கேதுசொல்வார்
கண்டதொருசேதிதன்னைக் கன்னியர்க்குரைக்கலுற்றார்
அச்சமில்லாநாட்டுக்கொரு நச்சுமுள்ளுவருகுதடி
நெல்லூருபட்டணந்தா னிர்த்தூளிசாகுதடி
அப்போதுஆரவல்லி யானதொருநாரதரை
என்னையாநாரதரே எனக்கறியச்சொல்லுமென்றாள்
என்றவள்கேட்க எடுத்துரைப்பார்நாரதரும்
வாரான்டியுங்களைத்தான் வாளுக்கிரையாக்கவென்று
தெண்டுக்கிரையாக்கவென்று சேவகனும்வாருண்டி
தெண்டுபெற்றவீமன் தீரனவன்வாருண்டி
உங்களைப்-பொடியாக்கவேணுமென்று போர்வீமன்வாராண்டி
என்றுசொல்லிநாரதரும் இயல்பாகப்போனபின்


V.G.R

அந்தமொழிகேட்டு ஆரவல்லிசூரவல்லி
அக்காடிதங்கையரே ஆகடியவார்த்தையைத்தான்
கோபுரத்துமேறிக் கொற்றவனைப்பாருங்கடி
ஆரென்றுபாருங்கடி ஆரணங்கேநீங்களென்ருள்
அப்போதுதாதியர்கள் ஆலித்துமதிலேறி
பார்த்துமனம்நடுங்கி பயந்துமிகத்தானுரைப்பார்
கெட்டேன்சிவனேயென்பார் கேடுவந்துநேர்ந்ததென்பார்
கருமுகில்போலேயல்லோ காவலனும்வாருண்டி
கையிலேதண்டெடுத்துக் காலன்போலேவாருண்டி
வந்ததேயுண்டானல் நமதுவலிமைகுலைத்திடுவான்
எல்லைதாண்டிவாரவனை இறக்கடிக்கவேணுமென்ருள்
கோட்டையுள்ளேபுகுந்துமுன்னே கொல்லவேணுமெனருள்
அப்போதுபெண்க ளடைவாகத்தானெழுந்து
மந்திரப்பொடியெடுத்து வகையாகவுச்சரித்து
தந்திரத்தினலே தடுத்தாளேவீமனைத்தான்
அப்போதுபோர்வீமன் அதட்டியேமந்திரத்தை
தெண்டாலடித்தானே சிதறியங்கேதானேட
மங்கையருமப்போ மந்திரபொடிதானெடுத்து
உச்சரித்தாளந்நேரம் வோடவிட்டாள்கரடிகளை
கரடிகளோடிவந்து காவலனைவளைத்துக்கொண்டு
சூழ்ந்ததேயந்நேரம் துரைமகனைவிடாதபடி
நின்றநிலையிலேதான் நீதியுடன்பார்க்கலுற்ருர்
சுற்றிப்பதிங்காதவழி சூனியங்கள்நிற்குதையா
அதட்டியேதண்டாலே அடித்தானேயந்நேரம்
பூமியொருஅம்மியுமாய் பெருத்தமலைகுழவியுமாய்
அரைத்துயந்நேரம் ஆனதொருகரடிகளை
ஓடிப்போயந்நேர முரைத்ததேபெண்களுக்கு
எங்களைப்போல்வீரியங்க ளில்லையடிவையகத்தில்
வந்தவந்தராஜாவை வாறிப்போட்டுவிட்டோம்
இந்தராஜாவைக்கொல்ல எங்களால்முடியாது
என்றுசொல்லி கரடியெல்லா வேகமாய்போய்விடுமாம்
அப்போதுமதவீமன் ஆரவல்லிபக்கலுக்கு
நடந்தானேபோர்வீமன் ஆரவல்லிபக்கலுக்கு
வாரதொருமன்னவனை மங்கையருந்தான்பார்த்து

உள்ளறையிற்பெட்டிகளை ஓடியெடுத்துவந்து
மந்திரத்தைதானோத வன்கையான்வேங்கையது
எல்லையிடங்கொள்ளாமல் எங்கும்நிறைந்ததுவே
எல்லையெங்குங்கொள்ளாம லெகிறிவரும்வேங்கை
மதவீமன்அப்போது வாய்திறந்தேதுசொல்வான்
அண்ணன் சொல்கேளாம ளாரணியந்தன்னில்வந்தேன்
தமையன் சொல்கேளாமல் தனிவழியேவந்துவிட்டேன்
மூத்தோர்சொல்வார்த்தைகளை முன்நடந்துவந்ததற்கு
கண்டுபயந்து கலங்கிமனந்தளர்ந்து
மதிமயங்கிநின்று வாய்திறந்தேதுசொல்வான்
என்னதான்செய்தாலு மேதுபிழைவந்தாலும்
முன்வைத்தகாலையினி பின்வைக்கப்போறேனே
என் -தெண்டுக்கெதிருண்டோ சேவகமும் பொய்யாமோ
வாரதொருவேங்கையைத்தான் வாளுலேவாங்கவேண்டும்
கொக்கரித்தெழுந்திருந்து கொற்றவனுஞ்சாடுகிறான்
தெண்டினால்சாடினான் திசைகள்கெட்டோடிடவே
அடிபடும்வேங்கையெல்லாம் ஆரவல்லிபக்கல்வந்து
சொல்லுதுவேங்கையெல்லாம் துரைமகனைகாவல்வெல்ல
எங்களால்முடியாது ஏந்திழையேதாயாரே
தெண்டுக்கிரையாகி செத்தவர்கள்மெத்தவுண்டு
கண்டால்பயமாகுதடி கன்னியரே நாயாரே
நினைத்தால்பயமாகுதடி நிச்சயங்காணென்றுச்சி
வேங்கையதுசொல்ல மேலென்ன ஆரவல்லி
அக்காளேதங்கையரே யாரடியவன்தானும்
நமக்குப்பெரியவனோ நலமுடையதங்கையரே
இவனை-எந்தவகையாலு மீடழிக்கவேணுமம்மா
அப்படியேயாகுதென்று ஆரவல்லிதானெழுந்து
அதட்டிமிருகத்தை தட்டியெழுப்பிவிட்டார்
அப்போதுமந்திரங்கள் அவளைவணங்கிநின்று
என்னடிஎன்தாயே எனக்கறியச்சொல்லுமென்று
கேட்டதொருமந்திரத்தைக் கிருபையுடனேதுசொல்வாள்
நமக்குமொருமாற்றானாய் நம்மையெதிர்த்தவனை
ஈடழித்துபோட்டுமல்லோ இங்கேவராதபடி
கொல்லுங்களென்றுசொல்லி கொம்பனையாள்தானுரைத்தாள்

போவென்றனுப்பினாள் பொற்கொடியாளாரவல்லி
அப்போதுமந்திரங்க ளடைவாகப்பெண்களைப்போல்

*வீமசேனனுக்கும் சூனியங்களுக்கும் யுத்தம்*

பெண்ணுருவங்கொண்ட ல்லவோ போகுதேமந்திரங்கள்
ஆயிரம்பெண்ணாக அவதரித்தார்வீமன்முன்னே
தெய்வலோகரம்பையைப்போல் தென்னவன்றன்முன்னேவந் [தார்
பெண்களைக்கண்டானே பெரியதொருமதவீமன்
பூவுலகிலேயிந்த பெண்களைப்போல்கண்டதில்லை
நாகலோகத்திலிந்த நற்பெண்களைக்கண்டதில்லை
ஆயிரங்கன்னியரு மதிரூபக்கன்னியரும்
தெய்வலோககன்னியைப்போல் தேசத்தில்கண்டதில்லை
மயலாகிமெய்மறந்து மதவீமன்பார்த்துநின்றான்
அப்போதுகன்னியர்க ளடைவாகக்கிட்டவந்து
அந்தநல்லவேளையிலே யானதொருபோர்வீமன்
மனதுமகிழ்ந்தேறி மன்னவனும்பார்க்கலுற்றான்
வந்ததொருகன்னியர்கள் வாள்சொருகிநிற்கிறதை
கண்டானேபோர்வீமன் கண்ணிரண்டும்பொறிபறக்க
வேண்டானேமன்னவனும் வேறுமுகமாக
இது-கன்னியல்லபெண்ணுமல்ல காலனென்றுதானறிந்து
கொல்லவந்தகூற்றுவன்காண் கொம்பனையாள்ரூபமது
இடையேகத்தியிது யிருக்கவந்தகாரணமேன்
கழுத்தையறுக்கவந்த காலனென்றுதானறிந்து
மதவீமனப்போது மங்கையரைமடித்திடவே
கொக்கரித்துதண்டெடுத்து கூவியேயார்ப்பரித்து
சாடினான்கன்னிகளைத் தவிடுபொடியாகவேதான்
மோதினான்கன்னிகளை மூளையதுதான்தெறிக்க
வீசினான்தெண்டாலே மெல்லியர்கள்தான்மடிய
அப்போதுகன்னியர்க ளனைவோருந்தான்மடிந்தார்
இறந்தவர்கள்போக மற்றவர்கள்தானோடி
தப்பிப்பிழைத்தோமென்று தானோடியேதுசொல்வார்
ஆரவல்லிபக்கலிலே யடிவணங்கிதெண்டனிட்டு
சொல்லுதுசூனியங்கள் சோதனையாய்க்கன்னியற்கு
நாங்கள்பட்டபாடுகள் நாயகியேகேளுமடி
அவனாரோதெரியாது ஆரவல்லித்தாயாரே

எங்களைத்-தெண்டால்டித்துவிட்டு சேவகனும்வாராண்டி
நெல்லூருபட்டணந்தான் நிர்த்துளியாகுமடி
எங்களால்முடியாது ஏற்றதொரு ஆரவல்லி
ஆரவல்லிபட்டணந்தா னழிந்தாப்போல்காணுதடி
வாரதொருமன்னவன்மேல் மந்திரங்களேராது
சூனியங்களேருது சொன்னபடிதோகையரே
விருதுகள்தானெடுத்து வெற்றியதுகொள்ளுமடி
பந்தயத்திலவனைப் பயப்படுத்தவேண்டுமடி
மற்றொருகாரியத்தால் மன்னவடைங்காண்டி
அதுவேசருமமென்று ஆரவல்லிசம்மதித்தாள்
இப்படியிருக்கவந்த யேற்றதொருமதவீமன்
ஆரடிபெண்ணேநீ ஆரவல்லியென்றுசொல்லி
பேரும்பெருமையுமாய் பிரபலமாய்வாழ்ந்தவள்தான்
உங்கள்பாட்டன்தலைமுறையில் பந்தயங்களுண்டோடி
ஆயுதங்களெடுத்தாடி பாராதேசூரவல்லி
வீமன்சொன்னசேதிதன்னை மெல்லியருந்தான்கேட்டு
அக்கினிபோல்கண்சிவக்க ஆரவல்லியேதுசொல்வாள்
சாவலெடுத்தாடி தங்கையரேவீரவல்லி

வீமராஜனுக்கும் ஆரவல்லிக்கும் சாவல் யுத்தம்

அப்போதுசாவலைத்தான் அடைவாகத்தானெடுத்து
பச்சரிசிபதிகலமாம் பாங்குடனே எதிரில்வைக்க
உண்டுயினைப்பாறிற்று உவமையுள்ளசாவலது
ஆரவல்லிசாவலுக்கு அபினிமதமூட்டிவிட்டாள்
இப்படி-யிருக்குமந்தவேளையிலே இயலானவீமனுந்தான்
தன்னுடையசாவலைத்தான் தயவாகத்தானெடுத்து
சிறுசம்பாஅரிசிதன்னைச் சீக்கிரமாய்முன்னேவைத்தான்
அப்போதுசாவலுந்தா னருந்தியிருக்கையிலே
ஆரவல்லிசாவலது அலறியேகொக்கரிக்க
கூவச்சேயந்நேரம் கோடையிடித்ததுபோல்
அந்தநல்லசத்தமது அலைகடலலைந்ததுபோல்
ஆரவல்லிசாவலது அலறியேகொக்கரிக்க
மன்னனிடசாவலது மதிமயங்கிவிழுந்ததுகாண்
விழுந்ததொருசாவலைத்தான் வீமனுந்தானெடுத்து
கத்திகளுங்கட்டினனே கனமுள்ளவீமனுந்தான்

கத்திகட்டசாவலுக்கு கனமயக்கமுண்டாச்சு
மயக்கத்தைத்தான்பார்த்து மதவீமனப்போது
எடுத்துக்கையில்பிடித்து இறகடியைத்தான்வாங்கி
நெஞ்சிலேகைபோட்டு நேராகப்பிடித்துக்கொண்டு
சாவலைத்தாங்கிக்கொண்டு தானிருக்கும்வேளையிலே
ஆரவல்லிவந்துநின்று அன்பாகயேதுசொல்வாள்
வாருமையாராஜாவே வலிமைதனைபேசவந்தாய்
வெற்றிகொண்டுபோவோமென்று வேந்தர்கள்வந்தார்கள்
விருதுகெலித்ததில்லை வெற்றிகொண்டுபோனதில்லை
வந்தவந்தராஜாக்கள் மாண்டாரேயல்லாது
மீண்டொருவர்போனதில்லை வெற்றிகொண்டுநின்றதில்லை
நீர்தானெதிரேவந்து நேராகநின்றீர்காண்
நின்றதொருராஜாக்கள் நேராதவெற்றிக்கொண்டால்
அக்காளுந்தங்கையரு மடப்பங்கட்டிநிற்கின்றோம்
இல்லாதேபோனுக்கால் இறக்கடிப்போந்தப்பாமல்
இதுவேபந்தயமென்று இளங்கொடியுஞ்சொல்லுகிறாள்
இதுதானேபந்தயங்க ளின்னமுண்டோசொல்லுமென்றார்
அப்போதுஆரவல்லி அன்பாகயெடுத்துரைப்பாள்
வாருமையாசுவாமி மன்னவனேகேட்டருளும்
இந்தச்சபதங்களிது தோற்றுப்போனேமென்றாள்
சூதுபொருந்தியே தோற்றமேயானுக்கால்
சாவலும்பின்வாங்கிச் சடுதியிற்தோற்குமென்றால்
களிச்சட்டிஒன்றுண்டு காவலரேகேட்டருளும்
அந்தநல்லசட்டியை அடைவாகத்திவலையைதான்
சொரண்டியெடுத்தாலே சேவகம்வெற்றிகொண்டான்
மற்றுமொருசூது வகையுண்டுசொல்லுகிறேன்
நடுக்கோட்டைக்குள்ளே நல்லதொருகம்பமுண்டு
அந்த-வச்சிரகம்பமதை வகையாகவெட்டையிலே
கம்பம்வீச்சொன்றாயிருக்கவேண்டும்மூன்றுதுண்டாகவேணும்
அப்படியேவெற்றிகொண்டால் எங்களடிமைகண்டாய்
இல்லாதபோனுக்கா லிறக்கடிப்போம்தப்பாது
மங்கைசொன்னவார்த்தைக்கு மறுவார்த்தைசொல்லுகின்றான்
வாருமடிபெண்ணே வையகத்தில்ராசமன்னர்
எத்தனைபேர்மாண்டார்கள் எனக்கறியச்சொல்லுமென்றான்

அப்போதுஆரவல்லி யாணழகன்முகம்நோக்கி
மாண்டவர்களானலோ வர்ன்லட்சங்கோடியுண்டு
எண்ணிக்கைசொல்லவென்ற லென்னல்முடியாது
நல்லதடிபெண்ணே நலமாகச்சாவலைத்தான்
கொண்டாடிசாவலைத்தான்குத்துக்குவிடுவோமென்றான்
சற்றுமனங்கலங்காமல் சாவலைக்கொண்டுவந்து
விட்டாளே ஆரவல்லி வீமருடன்சாவலைத்தான்
கண்டந்தசாவல் கலகலென்றுதான் வெருண்டு
எட்டியுதைத்ததையா ஈரல்குலைநடுங்க
விழுந்ததுமலைபோல வீமருடசாவலது
சாவலிறந்ததையா தனிவீமன்மனங்கலங்க
வெற்றிகொண்டாளாரவல்லி வீமனுந்தோற்றுவிட்டான்
அப்போதுஆரவல்லி யடியக்காளேதங்கையரே
களிசட்டியெடுத்துவந்து காவலனர்முன்னேவையும்
என்றுசொல்லிஆரவல்லி ஏந்திமையாள்தானேடி
சட்டியெடுத்துவந்து சடுதியில்முன்னேவைத்தாள்
கண்டுமதவீமன் கண்ணிரண்டுங்கொள்ளாமல்
திவலைரெண்டுமந்த தீரனவன்வீமனுந்தான்
மல்லுகட்டிப்பார்த்தானே வலிமைதனையறியாமல்
பார்த்துநெடுநேரம் பாவையருக்கேதுசொல்வான்
திவலையெடுக்கவென்று திரிமூர்த்திகள்வந்தாலும்
ஆகாதுஎன்கையிலே ஆவதொருசட்டியைத்தான்
தெண்டுக்கிரைகொடுத்தால் சின்னபின்னமாக்குரேண்டி
அப்படியேதந்தாலே அடிப்பேனடிதண்டாலே
அந்தநல்லசேதி ஆரவல்லிதான்கேட்டு
மனமகிழ்ந்துகொண்டாடி மங்கையர்கள்வெற்றியென்று
வெற்றிகொண்டோமென்றுசொல்ல் வீமன்முன்தான்பேசி
அக்காளேதங்கையரே யவனைமெள்ளப்பிடியுங்கடி
என்றுசொல்லியப்போது எல்லோருந்தானெழுந்து
மங்கையர்களோடிவந்து மன்னவனைத்தான்பிடித்து
பிடித்திழுத்துவந்தார்கள் பேர்கொண்ட மன்னவனை
விலங்கிலேபோடுமென்று வீரவல்லிசொன்னார்காண்
அந்தமொழிகேட்டு ஆரவல்லியேதுசெய்தாள்
இன்னுமொருசூது இருக்குதடியம்மாளே

கம்பந்தனை வெட்ட காவலனையழையுமென்றாள்
அப்படியேகூட்டிவந்தா ளாரணங்குதாதியரும்
அப்போதுஆரவல்லி யதிவீமனைப்பார்த்து
மன்னவரேராசாவே மதவீமாகேளுமென்றாள்
இந்தநல்லகம்பமதை இயல்பாகவெட்டுமென்றாள்
வெட்டுஒன்றாயிருக்கவேண்டும் துண்டுமூன்றாகவேண்டும்
வெட்டிவைத்துக்கொண்டால் வீரனேயாகுமென்றாள்
அப்போதுமதவீம னாரவல்லிமுகம்நோக்கி
என்னுடையதண்டுக்கு இறைகொடுத்தீராகுக்கால்
கம்பத்தைநறுக்கித் தவிடுபொடியாக்குவேண்டி
இல்லாதேபோகுக்கா லேற்றதொருகம்பத்தை
வெட்டுவேனிரண்டுதுண்டாய் வீரியமாயிப்போது
மூன்றுதுண்டமாகாது மூர்க்கமுள்ள ஆரவல்லி
இப்படிமதவீம னியல்பாகச்சொல்லையிலே
அப்போதுஆரவல்லி யாலித்துக்கொண்டாடி
வெற்றிகொண்டோம்நாமும் வீமனையடிமைகொண்டோம்
குருகுலத்தராஜாவை கொண்டோம்நாமடிமையென்றார்
மனமகிழ்ந்துகொண்டாடி மங்கையர்களெல்லோரும்
மன்னவனைப்பிடித்து மார்விலங்குபோடுமென்றாள்
வீமனைப்பிடித்து மேல்விலங்குபோடுமென்றாள்
படுகுழியில்தள்ளி பாறைகொண்டுமூடுமென்றாள்
அப்படியேதாதியர்க ளனைவருந்தானன்பாய்
மூலபாறைகொண்டுவந்து மூடினார்கள்மன்னவனை
எறும்புநுழையாமல் எங்குந்திரியாமல்
காற்றுநுழையாமல் காலனைத்தானடைத்தார்
அடைத்தபின்புஆரவல்லி யரண்மனைக்குத்தான்போய்
சிம்மாதனத்தின்மேலே சீக்கிரமாய்தானிருந்து
சொல்வாளொருவசனந் தோகையாளாரவல்லி
அடி-அக்காளேதங்கையரே இவனுருக்குமடகாண்டி
இவனைமிகஜெயிக்க ஆராலுமுடியாது
நமதுசூதுக்குச்சிக்கிவிட்டான் தோற்றமுள்ளவீமனவன்
தும்பிகளைவிட்டவனைத் துளைக்கவேவேண்டுமென்றாள்
மந்திரப்பெட்டியை வகையாகத்தான்திறந்து
உச்சரித்தாள்மந்திரத்தை உருக்குதும்பிதான்பறக்க


V.G.RAJ

பறந்ததுகாண் தும்பியது பேதையுட மந்திரத்தால்
உருக்குதும்பிதனையழைத்து உத்தமியாளேதுசொல்வாள்
பாறைகொண்டுமூடியே பெருவிலங்குபோட்டவனை
மங்கையர்களோடிவந்து மன்னவனைத்தான்பிடித்து
பிடித்திழுத்துவந்தார்கள் பேய்கொண்டமன்னவனை
விலங்கிலேபோடுமென்று வீரவல்லிசொன்னாள்காண்
அந்தமொழிகேட்டு ஆரவல்லியேதுசொல்வாள்
இன்னமொருசூது இருக்குதடியம்மாளே
கம்பந்தனைவெட்ட காவலனையழையுமென்றாள்
அப்படியேகூட்டிவந்தா ளாரணங்குத்தாதியரும்
கூட்டிவந்துவிட்டார்கள் கொம்பனையாள்முன்னாக
அப்போதுஆரவல்லி யதிவீமனைப்பார்த்து
தன்னுடையசாமர்த்தியம் தானுரைத்தாளப்போது
வீமன்மதியங்கி விலவிலத்துஎண்ணுகிறான்
என்னைத்தாராஜாக்க ளேசுவார்வையகத்தில்
ஏசுவாரேராஜாக்க ளென்னஉடம்பெடுத்தேன்
கண்டவர்கள்தான்சிரிக்க காசினியிலுடம்பெடுத்தேன்
பார்த்தவர்கள்தான்சிரிக்க பஞ்சவர்களுடம்பெடுத்தோம்
பெண்கள்சிரிக்கப் பேரெடுத்தேவீமனவன்
எண்ணாதுமெண்ணி ஏங்கிமனந்தளர்ந்து
வாடிமுகஞ்சோர்ந்து வர்னமுகம்வேறுபட்டு
ஓயாத்துயரங்கொண்டு ஒழுகவிட்டான்கண்ணீரை
மாயாமற்சீவனை மனதிலேவைத்துருகி
இத்தனையாபத்து எம்பெருமான்செய்தாரல்லோ
என்றுமதவீம னெண்ணிமனந்தளர்ந்தான்
ஆயன்பெருமாளை அடிவணங்கிதெண்டனிட்டான்
மாயன்பெருமாளை மனதிலேதான்நினைத்தான்
பெண்கள்கையிலால் பிடிபட்டுப்போனேனையா
ஆபத்துவேளையிலே அடியேனைக்காப்பாற்றும்
என்றுசொல்லிமாயவரை எண்ணினான்தன்மனதில்
நினைத்தநினைவுதன்னை நெடியமால்தானறிந்து
மதவீமன்வருந்தினதை மாயவனார்தானறிந்து
வண்டுகள்வந்து வருந்தியுரைத்ததுபோல்
தும்பிகள்வந்து சுருக்காயுரைத்ததுபோல்

துரிதமுடன் தானெழுந்து துவாரகையைத்தான்விட்டு
வீமனுக்குவந்தவினை தீர்க்கவேண்டுமென்று
மனதில்நினைத்தாரே மணவர்ளமூர்த்தியவர்
வந்துமனதிலே மாயவருமப்போது
வீமன்-ஆங்காரக்கெருவத்தாலே ஆயனைநினையாமல்
என்னைநினையாமல் இவர்களைவெல்வோமென்று
போனதொருவீமனவன் போருகெலிக்காமல்
பெண்கள்கையில்சிக்கிப் பெருக்கத்தவிக்கிறான்
முன்னேநினையாமல் பின்னேநினைத்தானே
ஆனபடியினால் ஆபத்தைதீர்க்கவேணும்
ஆயன்பெருமாளும் யானையைப்போல்வடிவெடுத்து
வந்துநின்றுமாயவரும் மதிவீமன்துயரங்கொண்டு
காணுமேகுன்றுமன்னி காரணரும்நின்றார்கள்
அப்போதுமதவீமன் ஆலித்துதானெழுந்து
எழுந்திருத்துமதவீமன் எம்பெருமானைதுதிக்க
கத்தரித்துவிலங்குதனைக் கடல்வண்ணனத்தனையும்
கத்தரிக்கவிலங்குவிட்டுக் கடுகிநடந்துவந்து
கொம்மைமதிலேறிக் கொற்றவனும்குதிக்கவென்று
அலைந்துகுதிக்கையிலே ஆனதொருமாயவரும்
தாமரைப்பொய்கையொன்று தடாகமதுவுண்டுபண்ணி

**வீமன் ஸ்நானஞ்செய்யக் கிருஷ்ணன்
தடாகமுண்டுபண்ணுவது**

அல்லியுந்தாமரையு மன்பாகநிறைந்திருக்க
உண்டுபண்ணிவைத்தாரே உலகளந்தமாயவரும்
வீமனதுகண்டு யிதமாகத்தான்குதித்து
முழுகிமெழுந்திருந்து மூர்க்கமுள்ளவீமனுந்தான்
ஓட்டமெடுத்தான்காண் ஒருவரறியாமல்
காடுவனங்கடந்து தானடுங்கிஓடலுற்றான்
ஆரவல்லிகண்டாக்கா ளாக்கினைகள்செய்வாளென்று
பெண்ணரசிகண்டாக்கால் பிடித்தடைத்துகொள்வாளென்று
தோகைவல்லிகண்டாலே துணிப்பாலேயென்றுசொல்லி
வீமனுமப்போது வெகுபயமாயோடலுற்றான்
மனதுகலங்கி மன்னவனுமோடலுற்றான்

உடம்புவெடுவெடுத்து ஓடலுற்ருன்மதவீமன்
வனங்கள்வனங்கடந்து வாருனேமதவீமன்
நெல்லூருபட்டணத்தை நேரானயெல்லேவிட்டு
வந்ததடங்கூடி மனக்கவலேதான்சிறந்தான்
பாதைவழிகூடிப் பயந்தெளிந்துநடக்கலுற்ருன்
நடந்துபோய்தருமர் ராச்சியத்தினுட்புகுந்து
செண்பகப்பூதோப்புஞ் சிறந்ததொருபூங்காவும்
பூவும்புதுமலரும் போதவேதானெடுத்து
தர்மரிடபக்கலுக்குத் தார்வேந்தனுேடிவந்து
சரணஞ்சரணமென்று சாய்த்தான்திருமுடியை
கொண்டுவந்தபூவையெல்லாங் கொற்றவனுர்பாதமதில்
சாத்திப்பணிந்து தார்வேந்தன்தெண்டனிட்டான்
தெண்டனிட்டவீமனுக்குச் சீரானதருமருந்தான்
வாழ்த்தியெடுத்து மதவீமன்முகம்நோக்கி
அப்போதுபோர்வீம னண்ணனுக்கேதுசொல்வான்

*வீமன் தருமருக்கு ஆரவல்லி பெண்களின்*
*சாமர்த்தியம் கூறல்*

போனேனுனண்ணுவே புகுந்தேனேநெல்லூரில்
நெல்லூருபட்டணத்தில் நேரானமந்திரங்கள்
ஆரவல்லிமந்திரங்கள் அளவிடப்போகாது
போரவழியிலே பேயும்பிசாசுகளும்
குறுகக்கட்டிவழிமறித்துக் கொல்லவேவந்ததையா
அந்ததீவினேயும்வென்று ஆரவல்லிபந்தலுக்கு
சூதுகெலியுமென்று சொன்னுள்காணண்ணுவே
நல்லதென்றுசொல்லி நடந்தார்காணப்போது
சூதுகெலிக்கமாட்டாமல் தோற்றுவிட்டேனண்ணுவே
அதுகண்டுஎன்னேயவ ளழிவிலங்குபோட்டுவிட்டாள்
விலங்கிலேபோட்டு வெகுபாடுபடுத்திவைத்தாள்
மாயன்பெருமாளால் வல்லுயிர்பிழைத்துவந்தேன்
ஆயனருளாலே அண்ணுநான்பிழைத்துவந்தேன்
உலகளந்தோனருளாலே ஓடியிங்குவந்தேனென்ருன்
என்றுமதவீமன் இவ்வார்த்தைதானுரைக்க
அப்போதுதருமந்தான் அன்பாகவேதுரைப்பார்

தம்பியரேமதவீமா தார்வேந்தர்கேட்டருள்வாய்
முன்னேநான்சொன்னேனே மூர்க்கமுள்ளதம்பியரே
நான்சொன்னபடிகேட்கிலேயோ சோதிமுடியானே
வீமாவென்வார்த்தை விஷமாயிற்றேயுனக்கு
இப்போதெரிந்துதோ ஏந்திழையாள்சேதியெல்லாம்
வீரவல்லிமந்திரத்தை யறிந்துவந்தாய்தம்பியரே
பிழைத்துநீவந்ததே போர்வீமாபோதுமென்றார்
இப்படியும்பிழைத்து என்முன்னேவந்தாயே
அப்போதுமதவீமன் அண்ணன்பாதந்தான்தொழுது
உன்னருளால்பிழைத்துவந்தே னுத்தமரே அண்ணாவே
என்றுசொல்லிமதவீம னெதிரேபணிந்துநின்றான்
அப்போதுதருமர் அதிவீமனைப்பார்த்து
வெற்றிசொல்லிநீபோய் வெட்கமுங்கெட்டுவந்தாய்
பெண்பிள்ளைவெற்றிகொண்டாளே பேருலகில்
ஆண்பிள்ளைதோற்றானென்று அனைவருந்தானகைப்பார்
என்றுசொல்லிஐவரு மிருக்குமந்தவேளையிலே
ஆரவல்லிசூரவல்லி அதற்கேற்றவீரவல்லி
அக்காளுந்தங்கையரும் அழகானகன்னியரும்
வீமனையழைத்துவந்து விரமணிக்குன்றருகே

### வீரமணிக் குன்றிடத்தில் ஆரவல்லி சூரவல்லி வீமனைத் தேடுதல்

மங்கையர்பார்த்துவந்து வகையாகப்பார்க்கலுற்றார்
பார்க்கும்பொழுது பகவானைக்காணமல்
குருடன்பழிகாரன் கொண்டோடிபோனாண்டி
ஒழித்தோடிபோனாண்டி உபாயமுள்ளசேவகண்டி
திருட்டுபடுவாண்டி திருடனவனென்றுசொன்னார்
மாற்றானாய்வந்தாண்டி மறைந்தோடிப்போனாண்டி
கூற்றுவனாய்வந்தாண்டி குதித்தோடிப்போனாண்டி
என்றுசொல்லிப்பெண்களெல்லாம் இன்பமுடன்தான்கூடி
அப்போதுஆரவல்லி அன்பாகவேதுசொல்வாள்
வாருமடிதங்கையரே மன்னவிக்கோலையிட
ஓலையெடுத்தாடி என்னெதிரேதாதியரே
ஓலையெடித்துவந்தார் உற்றதொருதாதியர்கள்

ஓலையைவாரி யொளிவாகக்கரம்பிடித்து
வக்கணைகள்வைத்து வகையாகயெழுதலுற்றுர்
என்னவென்றுவக்கணைக ளெழுதுனுள் ஆரவல்லி
சந்திரகுலராஜாவே சதிரானமன்னவனே
சூரியகுலராஜாவே சுத்தமானராஜாக்கள்
வார்த்தைகள்தவருதே மண்ணுளும்பஞ்சவரே
சொன்னசொல்தவருதே சூரியகுலவங்கிஷமே
வெற்றியென்றுவந்தால் வெற்றிகொண்டுபோகாமல்
பந்தயங்கெலித்து பார்மன்னுபோகாமல்
ஒளிந்தோடிப்போவாரோ உறுதியுள்ளராஜாக்கள்
கள்ளனைப்போல காணுமற்போவாருே
பெண்ணுக்குப்பயந்து பயப்பட்டுபோவாருே
வீமரேயுன்முகத்தில் மீசைகளில்லையோதான்
க்ஷத்திரியவம்சத்தில் சரத்துகளில்லையோதான்
நான்வெற்றிகொண்டது நாடறியும்ஊரறியும்
பெண்கள்வெற்றிகொண்டோமென போர்வீமாயென்றுசொல்
ஓலையெழுதி ஒப்பமிட்டுத்தான்சேர்த்து [லி
செந்திருக்கமுண்டுபண்ணி திறமாகச்சுருள்காட்டி

### பெண் தூதர்கையில் ஓலை கொடுத்தனுப்புவது

ஓலையைத்தான்கொடுத்து ஓடவிட்டாள்தூதர்களை
தூதர்களோடிவந்தார் நேராகதர்மர்பக்கம்
ஓட்டமாயோடிவந்து ஓலைதனை முன்னேவைத்தார்
தெண்டனிட்டுக்கைகட்டி சிரம்சாய்த்துநின்றுர்கள்
அப்போதுஐவர்களும் ஆலோசனைகள்செய்தார்
சுருளோலைதானெடுத்து தோற்றமுடன்பார்க்கலுற்றுர்
சுருளோலைப்பார்த்து உடன்படுத்திபஞ்சவர்கள்
இந்தவொருவாசகத்தை இன்பமுடன் தான்பார்த்து
பிர்மாவின்கற்பனையோ வேமத்தின்சொற்படியோ
ஆதிசிவன்கற்பனையோ அரசனுடசொற்படியோ
சிவனுடையகற்பனையோ தேவர்கள்சொற்படியோ
ஆதிநாராயணவென்று ஐவர்மனம்நொந்து
பாண்டவரைவருந்தான் பரமனைத்தானினைந்து
ஏதுரைப்பாரன்னேரம் ஏற்றமுள்ளபாண்வர்கள்

வந்தவளையனுப்பிவிட்டு வகையானசேதியெல்லாம்
பின்பு-பேசவேண்டியிருந்தால் பேசுவோமென்றுசொல்லி
நாங்களும்வாரோம் நாயகியே ஆரவல்லி
என்றுசொல்லிஓலையை எழுதிவிட்டார்வர்களுக்கு
ஆள்களும்போய் ஆரவல்லிவாசலிலே
சேர்ந்தார்கள்தூதுவர்கள் தேன்மொழியாள்பட்டணத்தை
அப்போதுபஞ்சவர்கள ஐவருமேதுசொல்வார்
பெண்களைவெல்லப் போகாதுமன்னவர்கள்
நம்மையவள்வென்றாலே நாற்றிசையும்பேராக
ஓலையும்விட்டாரே உற்றதொருபெண்பிள்ளைகள்
பெண்களைப்பிடித்துப் பின்கட்டாய்கட்டியல்லோ
கட்டிப்பிடித்து கழுதைமேல்வைத்தாலல்லோ
அப்போதல்லோபஞ்சவர்கள் ஆண்பிள்ளையென்றுசொல்லி
விருதுகள்சொல்லி வேந்தர்களேதுரைப்பார்
பெண்களைநாம்வெல்லாவிட்டால் பின்னேசிரிப்பார்கள்
குருகுலத்தில்நாம்பிறந்து கொற்றவர்களென்றுசொல்லி
பிறந்ததேபோதுமென்று பித்தர்கள்போல்திகைத்து
பெண்ணுக்குத்தான்பயந்து போனார்கள்பஞ்சவர்கள்
என்று-நீடூழிகாலமெல்லாம் நீணிலத்தில்பேராகும்
என்றுசொல்லிபஞ்சவர்களின்பமுடன்தானினைத்து

### தருமர் சகாதேவனையழைத்து ஐவருக்குச் சாஸ்திரம் பார்க்குதல்

தளராதனஞ்செயனார் தருமரங்கேதுசொல்வார்
சாஸ்திரக்கொடிவேந்தே சகாதேவாவாருமென்றார்
அப்போசகாதேவன் அன்பாகவெழுந்திருந்து
தமையனார்பக்கம்போய் தயவுடன்தானெழுந்து
இருமப்பாதம்பியரே ஏற்றமுடனிப்போது
நெல்லூருபட்டணத்தை நிர்த்தூளியாக்கவேண்டும்
ஆரவல்லிபட்டணத்தை அதமாக்கவேண்டுமடா
சாஸ்திரத்தைப்பாருமடா தம்பிசகாதேவா
நான்போனால்வெற்றியுண்டோ நலமாகப்பாருமென்றார்
அப்போதுசகாதேவன் ஆனதொருசாஸ்திரத்தை
சூடாமணிபுத்தகத்தைத் தோற்றமுடன்பார்த்து

அண்ணரிட பாதத்தை யடிவணங்கியேதுரைப்பான்
ராசிபொருத்தம் நன்ருகயிருக்கவில்லை
அப்போதுதருமர் அருச்சுனனைப்பாருமென்ருர்
மற்றுமொருக்கால் மனமகிழ்ந்துதான்பார்த்து
இன்பமுடன்தான்பார்த்து ஏதுரைப்பான்சகாதேவன்
ஆரவல்லிபட்டணந்தான் ஆனதொருநற்கருடன்
நல்லதோரர்ச்சுனனும் நாகப்பாம்பாய்காணுகுது
போறதேயல்லாமல் பிழைத்துவரப்போறதில்லை
அவ்வார்த்தைதான்கேட்டு அழகுதருமரேதுசொல்வார்
சகாதேவனப்போது தப்பாமல்தான்பார்த்து
ஆரவல்லிபட்டணந்தான் அழகானகீரியுமாய்
பார்த்தீபன்தானும் பாம்பாயிருக்குமென்ருர்
போறதேயல்லாமல் வாரதில்லையண்ணுவே
சகாதேவன்தான்போனல் தனிவெற்றியாகுமோதான்
அப்போதுசகாதேவ ஞலித்துப்பார்க்கும்போது
பார்த்துகவனித்துப் பண்பாகத்தானறிந்து
பூவையுடபட்டணங்கள் பூறுபூனையாய்தோற்றுங்காண்
சாஸ்திரக்கொடிமேவந்தன் ஒருவீட்டெலியாய்காணுகுது
போனதேயானுக்கால் பூனைக்கிரையாய்விடுவான்
ஐவருக்குப்பொருத்த மடைவாகவில்லையென்ருர்
அப்படிச்சொல்ல அழகுதர்மர்தான்கேட்டு
அபிமன்னராசனுக்கு அடைவாகப்பாருமெனருர்
அப்போசகாதேவ னடைவாகத்தான்பார்த்து
ரெட்டிபெண்கள்ராஜ்யமொரு டேகையாகக்காணுகுது
குழந்தையபிமன்னனொரு கோழியாகக்காணுகுது
அப்போதுதருமர் அன்பாகத்தான்கேட்டு
நல்லதுதம்பியரே நன்மைத்தரிலரசருக்கு
நமதுபட்டணத்திலுள்ள கப்பல்செனமத்தனையும்
ஆணென்றுபிறந்ததற்கு ஆராய்ந்துபாருமென்ருர்
அப்போசகாதேவ னடைவாகத்தான்பார்த்து
நெல்லூறுபட்டணந்தான் நிகரானராசாளி
கொற்றவர்ராசாக்களொரு கோழியாய்க்காணுதென்ருர்
அப்போதுதருமர் ஆலோசித்துசலித்திருந்தார்
என்னசெய்வோம்தம்பியரே என்றுமனந்தளர்ந்து

நீடூழிகாலமெல்லாம் நீணிலத்திலுள்ளவர்கள்
பேசுவாரிக்கதையை பேருலகிலுள்ளவர்கள்
பாருலகிலுள்ளமட்டும் பாரதமாய்த்தானடக்கும்
வெற்றிகொண்டார்பெண்களென்றுமேதினியில்த்தானுரைப்பார்
வெற்றிக்குவெற்றி வீரனென்றுதானெடுத்தாள்
பூவுலகில்கீர்த்தி பிரபலமாய்த்தானடக்கும்
ஆரவல்லிபட்டணத்தை யாமணக்கங்கொட்டையிட்டால்
பாருலகிலெங்கும் பாரதமாய்தானடக்கும்
என்றுசொல்லிதருமர் இருக்கும்அந்தவேளையிலே
மதவீமனப்போது மறுவார்த்லதயேதுசொல்லுவான்
ஆண்டவரேசுவாமி அடியேனுன்கூறுகிறேன்
தங்கையுடபிள்ளை தாஷ்டீகவல்லிராசன்
பேரால்பெரியவன்காண் புத்தியுள்ளஅல்லிமுத்து
அவனையழைத்து அனுப்பினுலிப்போது
வெற்றிகொண்டுவருவான்காண் வேந்தனென்னுமல்லிமுத்து
இந்தவிசேஷத்தை எடுத்துரைத்தான்மதவீமன்
அப்போதுதருமர் அன்பாகதான்கேட்டு
வாருமடாதம்பி வண்மையுள்ளபோர்வீமா
அல்லிராசாவென்றுசொன்னுல் அவனறியாதபாலகன்காண்
குதலைவாய்மொழிபேசுங் குழந்தைபிள்ளைதானல்லவோ
அஞ்சுபிராபமடா அறியாதமதலையாச்சே
போவென்றனுப்பினுல் போய்வெற்றிகொள்வானே
விருதுகெலித்து வெற்றிகொண்டுவருவானே
பந்தயங்கள்தான்கெலித்து பாலகன்தான்வருவானே
இப்படியாக இயல்தருமர்தானுரைக்க
மதவீமன்தானும் மற்றுமொருவார்த்தைசொன்னுர்
அல்லிராஜாதானுழிய மற்றபேர்கையிலாகாது
மனம்பொறுத்தனுப்பினுல் மைந்தனும்வெற்றிகொள்வார்
அப்போதுதருமராசர் அதுவென்னகருமமென்று
சகாதேவர்முன்னேக்கி சாஸ்திரத்தைப்பாருமென்ருர்

**சகாதேவர் தருமருக்கு அல்லிராஜன்**
**பேர் பொருத்தம் சரியெனல்**

சொல்லுகிறேன்சாஸ்திரத்தை சோதிமுடிவேந்தரசே
ராசிப்பொருத்தம் நன்ருயிருக்குதென்ருன்

பொருத்தமிருக்குதுகாண் போய்வென்றுவருவான்காண்
அல்லிமுத்தென்றால் யாளிசிங்கமாகுதையா
ஆரவல்லிபட்டணந்தான் அருந்தூளியாகுதையா
சூரவல்லிபட்டணந்தான் தூளுபொடியாகுதையா
அழித்துமிகதானிடித்து ஆமணக்கைவிரைத்திடுவான்
வெல்லுவானல்லிமுத்து வெற்றுகொண்டுவந்திடுவான்
வெற்றிகொண்டுவருகையிலே வினைகள்வந்துசூழுமையா
ஒரு-அத்வானநடுவழியில் அவகேடுவருகுதையா
அவகேடுவந்தாலும் அவசியமில்லையென்றான்
மற்றுமொருக்கால் மன்னவனும்வெற்றிகொண்டு
ஆரவல்லிபட்டணத்தை யழித்துசிறைபிடிப்பான்
சூரவல்லிபட்டணத்தை தூளுபொடியாக்கிடுவான்
ஆரணங்கைசிறைபிடித்து அவள்மூக்கை அறுத்திடுவான்
கோபுரமும்கொத்தளமும் கோட்டைகளும்இடித்திடுவான்
நீடூழிகாலமெல்லாம் நீணிலத்தில்தானறியும்
மண்ணுள்ளகாலமெல்லாம் மண்டலத்தில்பாரதமாய்
நாடுநகர்தானறியும் நானிலங்கள்தானறியும்
வெற்றிகொண்டானென்று விண்ணோர்கள்தானறிவார்
நண்டலங்கள்தானறியும் மாயனருளாலே
இந்தவகையாக எடுத்துரைத்தான்சகாதேவன்
தாரார்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
வாருமடாதம்பியரே மன்னவனேகேளுமிப்போ
வெற்றிகொள்வானல்லிராஜன் வேந்தனென்றேயுரைத்தாய்
தங்கையரும்மனம்பொறுத்து தாஷ்டிகனையனுப்புவாளோ
மாதாமனம்பொறுத்து மகனையனுப்புவாளோ
பெற்றதாய்மனம்பொறுத்து பிள்ளையையனுப்புவாளோ
தங்கையரும் மனம்பொருந்தி தயவாயனுப்புவாளோ
ஐவரும்போயி யடைவாகக்கேட்போமென்றார்
அப்போதுமதவீம னண்ணனைத்தான்பார்த்து
தாரார்புகழுடைய தர்மகுருதேசிகரே
சங்குவதிமனது சலிக்காமல்தானேறி
அபிமன்னராஜனைத்தா னடைவாகநாங்கொடுப்போம்
மைந்தனவன்கொடுக்க மகனைக்கொடுப்போமென்றாள்

தங்கைபிள்ளை தனக்குத் தயவாகவாங்கிடுவோம்
என்றுரைத்தான்மதவீம னின்பமுடன்தான்கேட்டு
அதுவேகருமமென்று ஐவர்களும்தானெழுந்து

பஞ்சவர்களைவரும் தங்கையிடம் புறப்பட்டுப் போகுதல்

பயணபயணமென்று பார்மன்னர்தான்கூடி
தங்கையிட பக்கலுக்குத் தயவாகப்போகிறார்கள்
தருமாபுரங்கடந்து சதிராய்வனங்கடந்து
நாடுகடந்து நடுக்காடுதான்கடந்து
காடுகடந்து கற்சுனைதான்கடந்து
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனங்கடந்து
ஓடை தடாகங்கடந்து ஊர்வசிவனங்கடந்து
பாண்டவர்களைவரும் பாஞ்சாலிதுரோபதையும்
நன்றாகக்கூடி நடந்துவருகையிலே
ஆரியமக்களுட னல்லிராஜன்தான்கூடி
கோடிச்சிலம்பமும் கேள்வியானவித்தைகளும்
சாதனையாய்கற்றுத் தாண்டிவிளையாடையிலே
கோபுரத்தின்மேலேறிக் குமாரர்கள்தான்தாண்டி
ராஜாக்கள்மக்களுட னவநீதமாய்ச்சேர்ந்து
குமாரமக்கள்தான்சேர்ந்து கோலாட்டம்போடையிதே
செட்டிமக்களுடன்சேர்ந்து செண்டாட்டமாடையிலே
கவிப்புலவர் மக்களுடன் கவிகளும்பாடையிலே
நாகரீகமாகவேதான் கீதங்கள்பாடையிலே
ஐவரவர்சேர்ந்து ஆரணங்குதுரோபதையும்
வார்த்தைகள்கண்டானே வலிமையுள்ளஅல்லிமுத்து
திக்கென்றெழுந்திருந்து திறமானஅல்லிராஜன்
தாயாரிடபக்கலுக்குத் தார்வேந்தனோடிவந்து
ஓடிவந்தஅல்லிராஜன் உற்றதொருதாயாரை
அடிபணிந்துதெண்டனிட்டு யல்லிராஜனன்னேரம்
தெண்டனிட்டபாலகனைத் திறமாகத்தானெடுத்து
வாழ்த்தியெடுத்து மதிமுகத்தைமுத்தமிட்டு
ஏதடாதம்பியரே இதுபுதுமைசொல்லுமென்றார்
அப்பொழுதல்லிராஜன் அன்பாகயேதுசொல்வான்
மாதாவேநீர்கேளும் மைந்தனென்சொல்லுகிறேன்
ராஜாக்களுடன்கூடி நலமாய்விளையாடையிலே

விளையாடிநிற்கையிலே ஒருவெற்றிகொண்டுவாறேனென்றார்
அப்போத்தாயாரும் அன்பாகச்சொல்லுமென்றாள்
வேந்தர்கள்யாவருந்தான் மேலானதுரோபதையும்
பாண்டவர்கள்என்மாமன் பத்தினியாள்துரோபதையும்
அரண்மனைதேடியே அன்பாகவருகிறார்கள்
வாறார்கள்யாவருந்தான் மாதாவேயென்றுசொன்னான்
அப்போதுசங்கவதி ஐவரிங்கேவாரதெப்போ
அவராரோதெரியாது அறியாமல்சொன்னாய்நீ
எவரோதெரியாது என்பாலாநீயறியாய்
நான்சொன்னவார்த்தையை நம்பாமல்போனக்கால்
கோபுரத்தின்மேலேறிக் கொம்பனையேபாருமென்றான்
அப்போதுமைந்தனையும் எடுத்துஇடுக்கிக்கொண்டு
கோபுரத்தின்மேலேறிக் கொற்றவரைப்பார்க்கலுற்றாள்
பஞ்சவர்கள்வருகிறதைப் பைங்கிளியாள்தானுங்கண்டு
வாரதைக்கண்டாளே வன்மையுள்ளசங்கவதி
கண்டுமகிழ்ந்து காரிழையாள்சங்கவதி
பாண்டவர்கள்ராஜாக்கள் பத்தினியாள்தான்வாறார்
ஆலாத்திசோடியுங்கள் ஆரணங்குதாதியரே
என்றுசொல்லிமகனுரை எடுத்துமிகமுத்தமிட்டு
அண்ணன்மார்கள்வார அதிசயந்தானேதோ

### சங்கவதி பஞ்சவர்கள் வருகிறதைக் குறித்து பிரலாபிக்கிறது

என்னையறியாமலவர்கள் இங்கேவரக்காரணமேன்
காரிழைநானறியாத கல்யாணமுண்டோதான்
தங்கையறியாத சாஸ்திரங்களுண்டோதான்
நமக்குச்சொல்வாரோ நானிலத்தில்பஞ்சவர்கள்
நம்முடையபட்டணத்தில் நாதனுமில்லையேதான்
போனாரேவேட்டைக்கு போர்மன்னராஜருந்தான்
இந்தநல்லவேளையிலே நம்மண்ணன்மார்வாறார்கள்
வந்தவர்களிப்போது ஒருவர்க்குவரம்சொன்னக்கால்
ஏதுநானுரைப்பேனென்று இருந்தாளேசங்கவதி
பின்னுமொருயோசனைதான் பிரபலமாய்தானினைந்து
அண்ணன்மார்பக்கம்போ யழைத்துவரவேணுமென்று

எழுந்திருந்துநின்று எடுத்துரைப்பார்சங்கவதி
அத்தாதிக்குத்தாதி தலையானதாதியரே
ஆலாத்திசோடியுங்கள் ஆரணங்குதாதியரே
என்றுசொல்லிசங்கவதி இயல்பாகக்கேட்கையிலே
தாதியர்களோடிவந்து தயவாகயேதுசொல்வார்
சோடித்தோம்ஆலாத்தி துரைமகளேஎன்றுசொன்னாள்
ஆலாத்திஎடுங்களடி அரண்மனைசோடிஎன்றாள்
நல்லதென்றுதாதியர்கள் நலமாகவோடிவந்து
அலங்காரதாதியர்கள் அரண்மனைகளுள்ளதெல்லாம்
பூவெடுத்துசொரிவாரும் புதுமலர்கள்சொரிவாரும்
ரத்னகம்பளிதானெடுத்து நலமாகவிரிப்பாரும்
பூச்சரங்கள்தொங்கவிட்டுப் புதிதாயலங்கரித்து
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தாற்கோலமிட்டு
சாம்பிராணிதூபங்கள் சதுரெங்கும்போட்டுவிட்டு
நவரத்தினமுத்துக்களால் நலமாகத்தொங்கவிட்டு
சிங்காதனத்தைச் சிறப்பாயலங்கரித்து
தாதியர்களோடிவந்து சங்கவதிக்குசொல்லலுற்றார்
அப்போதுசங்கவதி அன்புடனேதான்கேட்டு

சங்கவதி பஞ்சவர்க்குத் திருஷ்டி கழிப்பது

ஆலமெடுத்தாடி ஆரணங்கேதாதியென்றாள்
என்றுசொல்லிசங்கவதி இயல்பாகக்கேட்டையிலே
பட்டுப்பணிகள்பூண்டு பாங்காயலங்கரித்து
புட்பமதுதானெடுத்து போதவேகைபிடித்து
பன்னீருஒருசொம்பில் புதுநீருதானெடுத்து
தாதியரைநடத்திக்கொண்டு சங்கவதிவாறாள்காண்
நடந்தாள்வனத்துளையாள் நல்லதொருசங்கவதி
ஐவரைக்காண வாறாளேசங்கவதி
பாண்டவர்கள்வரவுகண்டு பண்பானசங்கவதி
வாறாளேசங்கவதி நலமுடனேபூவெடுத்து
பாண்டவரைக்கண்டல்லோ ஆலித்துசங்கவதி
ஆலித்துநின்று அந்நேரம்சங்கவதி
பாதம்துலக்கியப்போ பட்டாலடி துடைத்து
கொண்டுவந்தபுட்பமெல்லாம் குபுகுபென்றுதான்சொரிந்து

தெண்டனிட்டுகைகட்டிச் சிரம்வணங்கிநின்ருள்காண்
ஆலாத்திதானெடுத்து அல்லவற்குமங்நேரம்
பாண்டவரைவருக்கும் பாவைதுரோபதைக்கும்
எடுத்தார்களாலாத்தி ஏந்திழைகள்ரம்பையைப்போல்
முத்திஞலாலாத்தி முன்ஞகைச்சுற்றிஞர்கள்
பவழத்தாலாலாத்தி பாங்கியர்கள்சுற்றிஞர்கள்
கண்ணும்புசோறும் சுழட்டியெறிந்தார்கள்
கொண்டுவந்தபுட்பமதை குபுகுபென்றுதான்சொரிந்து
சாம்பிராணிதூபங் தானெங்கும்போட்டார்கள்
பாண்டவர்களைவருக்கும் பாவைதுரோபதைக்கும்
எடுத்தார்களாலாத்தி ஏந்திழைகள்ரம்பையைப்போல்
சரணஞ்சரணமென்று சங்கவதிதான்பணிந்தாள்
பணிந்ததொருதங்கையரைப் பஞ்சவர்களைவருந்தான்
வாரியெடுத்துமவர் மார்போடணைத்துக்கொண்டு
பாண்டவருந்துரோபதையும் பாங்காய்நடக்கலுற்ருர்
சங்கவதிநாயகியும் தனஞ்செயஞரைவருமாய்
கூடவேகூட்டிக் கொம்பனையாளரண்மனைக்கு
வந்தார்களப்போது வண்மையுள்ளபஞ்சவர்கள்
சிங்காதனத்திலே சிறப்பாகவீற்றிருந்தார்
அப்போதுசங்கவதி அண்ணன்பக்கம்வந்துநின்று
தேவரீர்பாதம் திருவடிகள்சரணமென்று
சங்கவதியங்நேரங் தான்பூண்டுநிற்கையிலே
உன்னைக்காணவேணுமென்று வந்தமடிதங்கையரே
அப்போதுமதவீமன் அண்ணர்முகம்நோக்கி
வாருமையாசுவாமி வார்த்தைவந்துநேர்ந்ததென்ருல்
மனதிலடக்குவாரோ மறைத்துவைத்துப்பேசுவாரோ
மோருக்குவந்தமொங்தை மோசமாயொளிப்பாரோ
பின்னுக்குமந்தவீமன் பிரபலமாய்பேசலுற்ருன்
தங்கையரேசங்கவதி தர்மமுள்ளதாயாரே
நான்சொல்லக்கேட்டருளுங் தாயாரேசங்கவதி
நெல்லூருபட்டணத்தை நிர்த்தூளியாக்கவென்று
அல்லிராஜாவை அழைத்துபோகவந்தார்
உன்னுடையபாலகனை போருக்கனுப்புமென்று

அல்லிராஜன் யுத்தத்திற்குப்போக கேள்விப்பட்டது

இதுதானதிசயங்க ளேதுமில்லேசேதியென்றுன்
அந்தநல்லசேதி அல்லிராஜன்தான்கேட்டு
ஆவித்துக்கொண்டாடி ஆர்ப்பரித்துத்தானெழுந்து
முன்லாகுபின்லாகு மூர்க்கமுடன்தான்பாய்ந்து
போறேனென்றுஆர்ப்பரித்து பிரபலமாய்குவலேயிட்டான்
சண்டையென்றபோதே தாட்சியெனுங்குவலேயிட்டான்
கச்சையிருக்கிக் சுட்டாரிதானெடுத்து
அதட்டியேதுடைதட்டி ஆர்ப்பரித்துஅல்லிமுத்து
நெல்லூருபட்டணத்தை நெருப்பாயெரிப்பேனென்று
விருதுமேல்கைபோட்டு வீரனும்வீற்றிருந்தான்
அப்போதுசங்கவதி அண்ணரைப்பார்த்தேதுசொல்வாள்
ஓடமலர்க்கண்ணுளுக்கு ஒருமகனேயுள்ளதுகாண்
தேங்காய்க்குமூன்றுகண் உண்டென்பார்லவயகத்தில்
ஒருபிள்ளேயைப்பற்றி யுலகாள்வோமென்றிருந்தோம்
நான்தவமிருந்தபிள்ளேக்கு நீங்கள்மாற்றுனுய்வந்தீரோ
என்னமனதுகொண்டு என்பாலகனேக்கேட்கவந்தீர்
மனதுதுணிந்துதான் மகனேக்கொடுப்பேனே
என்மைந்தனே நான்கொடுத்து மாபாவியாவேனே
பிள்ளேயைநான்கொடுத்துப் பெரும்பாவியாவேனே
குழந்தையைநான்கொடுத்துக் கொடும்பாவியாவேனே
புத்திரனேக்கொடுத்துவிட்டுப் பூமியிலிருப்பேனே
மண்டலத்திலில்லாத மகனேநான்பெற்றெடுத்தேன்
வையகத்திலில்லாத மைந்தனே நான்பெற்றெடுத்தேன்
பிள்ளேயைக்கொல்லவென்று எண்ணிவந்தீரண்ணுவே
குழந்தையைகொல்லவென்று குறித்துவந்தீர்பஞ்சவர்கள்
மைந்தனே கொல்லவென்று மனந்துணிந்துவேடராவந்தீர்
பாலகனேக்கொல்லவென்று பார்மன்னர்வந்தீர்களோ
நான்பெற்றபாலகனே நன்ருகக்கொல்லவென்று
எண்ணிநீர்வந்தீரோ என்பிறகேயண்ணுவே
என்றுசொல்லிசங்கவதி யெண்ணியழுகலுற்ருள்
அப்போதுதர்மராசர் அருகிலழைத்துமேதான்
கண்ணீரைத்தான்துடைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
அழவந்தகாரியமேன் அறிவுள்ளதங்கையரே

பாண்டவர்கள் தானிறந்து பரலோகம்சேர்ந்தாக்கால்
ஐவர்கள்தானிறந்து அமரலோகம்போனுக்கால்
உத்தமியேதங்கையரே நீயுருகியழவேண்டாம்

பாண்டவர்கள் சங்கவதிக்கு தைரியங் கூறுதல்

நாங்களிருக்கச்சே நாயகியழுவானேன்
உயிரோடநாங்க ளுடற்பிறப்பிருக்கும்போது
ஆபத்துகள்வந்தாலும் அதிகபிழைவந்தாலும்
இந்தபடைமுகத்தில் ஏதுபிழைவந்தாலும்
நாங்களல்லோவுத்திரவாதம் நன்ருச்சுதங்கையரே
ஐவருந்தானிருக்குமட்டும் ஒருஅபகேடுவாரதில்லை
பஞ்சவர்களிருக்குமட்டும் பாலனுக்குஅழிவுண்டோ
பாலனையிறக்கடித்துப் பாண்டவர்களிருப்போமோ
ஐவரிருக்கையிலே அச்சமென்னதங்கையரே
இப்படிக்குத்தருமர் இதமாகச்சொல்லையிலே
சங்கவதியாள் சற்றேமனந்தெளிந்து
சொல்லுவாளொருவசனந் தோகையருமப்போது
ஓலைகள்எழுதினதும் உத்தமர்கள்வந்ததுவும்
அந்தநல்லஓலைக்கு அடைவாகநாங்களுந்தான்
விருதுகெலிக்க வேந்தர்கள்வாரூமென்று
பதிலோலைதானெழுதி வகையாகபோகவிட்டோம்
அந்தநல்லவோலைக்கு அடைவாகநாங்களுந்தான்
பெண்களுக்குப்பயந்துபோனுர்கள் பஞ்சவர்கள்
என்றுசொல்லிதான்சிரிப்பார் எல்லவரும்ராச்சியத்தில்
அதுவேதான்துக்கமென்ருர் ஆனதொருதருமருக்கே
என்றுசொல்லமதவீமன் ஏதுசொல்வாள்சங்கவதி
என்னதான்சொல்லி யிதமாயுரைத்தாலும்
நான்தான்சம்மதித்தால் என்னுயகற்குஏற்குமோதான்
என்மனதுசம்மதித்தால் என்னுயகற்குஏற்குமோதான்
எனக்குப்பிரியமாகும் என்ருள்காண்சங்கவதி
அந்தநல்லசேதி ஐவருந்தான்கேட்டு
வேட்டைக்குப்போன வேந்தன்வருந்தனிலும்
அவனிவேட்டைப்போன மன்னன்வருந்தனிலும்
நாங்களிருந்தாக்கால் நல்லதல்லதங்கையரே

எழுதும்படி நன்றாய் ஏந்திழையேகேட்டருளும்
ஆரவல்லிபெண்ணொருத்தி யோலையனுப்பிவைப்பாள்
ஏற்குமோ அண்ணாவே இறங்கியேபோர்வீமா
கணவனுமில்லாமல் கைப்பிள்ளைகொடுப்பாரோ
புருஷனில்லாமல் பெற்றபிள்ளைகொடுப்பாரோ
மன்னவரறியாமல் மைந்தனைக்கொடுப்பாரோ
மன்னவனும்வேட்டைக்கு மகிழாகபோயிருக்க
தென்னவரும்வேட்டைக்கு சீராகப்போயிருக்க
இந்தநல்லவேளையிலே நானெப்படிகொடுப்பேனண்ணா
என்றுதான் சொன்னாள் ஏற்றதொருசங்கவதி
அப்போதுஐவருந்தான் ஆரணங்குதனைப்பார்த்து
வாருமம்மாதங்கையரே மன்னவனுமிப்போது
வேட்டைக்குப்போனாலென்ன வேல்பொருதுங்கண்ணாளே
ஐவருந்தானிருக்க ஆலோசனையேனுக்கு
பாண்டவர்கள்நாங்கள் பார்மன்னரிருக்கையிலே
உனக்கென்னதங்கையரே உத்தமியேசங்கவதி

அபிமன்னனைத் தத்து எடுத்துக்கொள்ளச் சொல்வது

கொடுக்கமனமில்லாத கொம்பனையேகேளுமடி
மைந்தனுக்குமைந்தன் வாளபிமன்தன்னையிப்போ
மஞ்சள் நீர்குடித்து வாழ்த்துமம்மாதங்கையரே
ஏற்றியபாலகனை எடுத்துவளருமம்மா
மைந்தனைநீயெடுத்து மஞ்சள்நீர்குடியுமம்மா
என்றுசொன்னாரைவருந்தான் ஏற்கவேதங்கையற்கு
அந்தமொழிகேட்டு ஆனதொருசங்கவதி
அப்போதுசங்கவதி அன்பாகயேதுசொல்வாள்
நல்லதென்றுசம்மதித்தாள் நாயகியாள்சங்கவதி
சம்மதித்துமனமகிழ்ந்து தங்கையருமேதுசொல்வாள்
ஐவரேயண்ணாவே அபிமன்னனையழையுமென்றாள்
அப்போதுஐவருந்தான் அன்பாகமனமகிழ்ந்து
அழைக்கிறோமென்றுசொல்லி யாள்தனைதானனுப்பி
ஓலையெழுதிபோட்டு விட்டார்கள்தூதுவரை
தூதுவரும்போய் சொன்னார்கள்சேதிதன்னை
அபிமன்னராஜருடன் அன்பாகக்கூறலுற்றார்

அபிமன்னராஜரெல்லாம் யாருக்குமடங்கானே
சொல்லுக்கடங்கானே சோதிமுடியானும்
என்றுசொல்லுமளவில் ஏற்றமுள்ளஐவருந்தான்
தங்கையரைத்தான்பார்த்து சதுரானவார்த்தைசொல்வார்
சம்மதித்தாலவருந்தான் தானிருப்பான்வாளபிமன்
ஐவர்சொல்மீராது ஆரணங்கேதங்கையரே
பிள்ளைசொல்மீறிப் பேசுமோதங்கையரே
நீசம்மதித்தால்பேசுமோ தயவானதங்கையரே
இந்தநல்லபேச்சுக்கு இணையில்லாதங்கையரே
தேவரீர்பாலர் செல்வக்குழந்தையரே
பாண்டவர்கள்தான்கூடிப் பாவைதுரோபதையும்
அழைத்துவரச்சொன்னார்கள் அன்புடையமன்னவர்கள்
என்றுசொல்லித்தானழைத்தார் ஏற்றவபிமன்னனையும்

## அபிமன்னன் புறப்பட்டு வருகிறது

சந்தோஷமாகத் தயவாகத்தானெழுந்து
ஆனைகுந்திநாடுவிட்டு அபிமன்னன்வருகலுற்ருன்
வனங்கள்வனங்கடந்து வாளபிமன்வருகலுற்ருன்
மதகரியைநோக்கி வருகிருன்மன்னவனும்
பட்டணத்துக்குள்ளே பரிவாகத்தான்புகுந்து
ஐவரையுங்கண்டு அடிவணங்கித்தெண்டனிட்டு
நின்றதொருபிள்ளைதனை நேராகத்தானெடுத்து
வாழ்த்தியெடுத்து மணிமுகத்தைமுத்தமிட்டு
சேர்த்துயெடுத்தார்கள் செம்பவளக்கையாலே
சங்கவதிநாயகியைத் தயவாகத்தானழைத்து
பிள்ளையிந்தாவென்று பிரியமுடன்தான்கொடுத்தார்
அப்போதுமங்கையரும் அன்பாகவாங்கலுற்ருள்
வாங்கிமனமகிழ்ந்து மஞ்சள்நீர்தான்குடித்தாள்
போர்மன்னன்பிள்ளையென்று பிரபலமாய்கூறலுற்ருர்
சங்கவதிபிள்ளையென்று சகலஜனஞ்சொல்லலுற்ருர்
வாடாமகனேயென்று வாய்திறந்துகூறலுற்ருர்
கூப்பிட்டுதானழைக்க கொற்றவர்களெல்லோரும்
அப்போதுமதவீமன் அண்ணன்முகம்நோக்கி
நாமும்தான்மஞ்சள்நீர் நலமாகக்குடிக்கவென்ருர்

மங்கையரைத்தானழைத்து மஞ்சள்நீர்கலக்குமென்றார்
அப்போதுசங்கவதி அண்ணன்சொல்தட்டாமல்
மஞ்சள்நீர்கலக்கி வகையாகமுன்னேவைத்தார்
அல்லிமுத்துஐவருக்கும் அன்பாகபிள்ளையென்று
மஞ்சள்நீர்குடித்தார்கள் மன்னவர்களப்போது
துரோபதைநாயகியும் தோற்றமுடன்நீர்கொடுத்தாள்
உத்தமியாள்பிள்ளையென்று உலகமெல்லாம்பேராச்சு
ஆரவல்லிபட்டணத்தை யழித்துச்சிறைபிடிப்பான்
இந்தவிசேஷம் எல்லோரும்சொன்னபின்பு
மடியிலேதானிருத்தி மனமகிழ்ந்துகொண்டாடி
மகனையெடுத்தணைத்து மதிமுகத்தைமுத்தமிட்டு
எதிர்த்தார்முடிபெறுவீர் ஏழைகளை ஆதரிப்பீர்
விருதுகெலித்திடுவீர் வெற்றிகொண்டுநீவருவாய்
தாயாரும்வாழ்த்தித் தாபரிததாளங்நேரம்
அல்லிராஜாவை அருகேவழைத்துக்கொண்டு
தங்கையரைத்தானழைத்து தார்வேந்தரேதுசொல்வார்
மெல்லியிடபட்டணத்தை வெறிகொண்டுபோனபின்பு
உந்தனிடமைந்தனைத்தா னுன்னருகேசேர்த்துக்கொள்ளும்
நம்முடையமைந்தன் நலமானவபிமன்னனைத்தான்
எங்களிடம்விட்டுவிடு ஏந்திழையேதங்கையரே
உன்பேச்சுகேளானம்மா உத்தமியேதங்கையரே
அபிமன்னராசருந்தா னுருக்குமடங்கானம்மா
கால்விலங்குபோட்டுக் காக்கவேயுள்ளவரையில்
அடைத்துவைத்தாளபிமன்னன் னடங்கியிருப்பானம்மா
என்றுசொல்லிதங்கையற்கு இயல்பாகதானுரைத்தார்
அபிமன்னனைத்தானழைத்து அன்பாகநற்புத்திசொல்லி
தாயார்சொன்னபுத்தி தட்டாமல்நீகேட்டு
இருமென்றுசொல்லி இயல்பாகத்தானுரைத்தார்
தங்கையைத்தானழைத்து தார்வேந்தன்புத்திசொல்லி

பஞ்சவர் புறப்பட்டு வருகிறது

பயணபயணமென்று பார்வேந்தரெழுந்திருந்து
தங்கையிடதன்கையாலே தயவாயனுப்பிக்கொண்டு
பாண்டவர்கள்கூடிப் பயணமென்றுநடக்கலுற்றார்

பத்தினியாள் துரோபதையும் பாரவல்லிராஜாவும்
அல்லியருந்தான்கூடி யாலித்துத்தானடந்தார்
பஞ்சவர்கள் தான்கூடி பாரவனங்கடந்தார்
சீராகத்தானடந்து சேர்ந்தார்கள் தர்மாபுரம்
சிம்மாதனத்தில் சிறப்பாக கொலுவிருந்தார்
தங்கைமனதை தயவாகவுட்படுத்தி
அல்லிராஜாவை யழைத்துமிகவந்தோமே
போரமன்னன் வேட்டைக்குப் போனவன்வந்தாக்கால்
தங்கைமனம்நோக தாஷ்டீகனும்தானுரைப்பான்
போர்மன்னராஜன் பொருந்திவருமுன்னே
அல்லிமகாராஜாவை அனுப்பவேவேணுகண்டாய்
என்றுசொல்லியவர்களும் இதமாகப்பேசிக்கொண்டு
ஆபரணப்பெட்டியை யடைவாகத்தானெடுத்து
ஆபரணம்தானெடுத்து அன்பாகபூட்டலுற்ருர்
அல்லிராஜாவு மன்பாகப்பூண்டுக்கொண்டு
கட்டுவாக்கம்தானெடுத்து கட்டழகரப்போது
அப்போது ஆயுதங்க ளடைவாக தானெடுத்து
பதினெட்டுஆயுதமும் பாங்குடனேவரிந்துகட்டி
அல்லிராஜாவு மைவரையும்போய்ப்பணிந்து
வாழ்த்தியெடுத்து மாரோடேதானணைத்து
சேர்த்துஎடுத்துமந்த தென்னவர்முத்தமிட்டார்
நீடூழிகாலம்மட்டும் நீணிலத்தில்வாழ்ந்திருப்பாய்
மண்ணுள்ளகாலமெல்லா மண்டலத்தையாண்டிடுவாய்
வாயாரவாழ்த்தியல்லோ மன்னவர்கள்முத்தமிட்டார்
புத்திமதிசொன்ஞர்கள் போர்வேந்தரப்போது
அப்போது அல்லிராஜன் அன்பாகத்தானெழுந்து
சுவாமிசரணமென்று சாய்த்தான்திருமுடியை
போய்வாரேசுவாமியென்று புண்ணியனுந்தானுரைத்தான்
வீமனைத்தான்பார்த்து விதமாகச்சொல்லலுற்ருன்
நெல்லூருபட்டணத்து நிலைமைகளைச்சொல்லலுற்ருன்
ரெட்டிப்பெண்கள்வித்தை நிலைமைகளைசொல்லலுற்ருன்

*வீமன் அல்லிராஜாவுக்கு ஆரவல்லி பெருமை சொல்லுதல்*

அப்போதுமதவீம னன்பாகச்சொல்லலுற்ருன்
ஆரவல்லிமந்திரங்கள் அளவிடப்போகாது

சூரவல்லிமந்திரங்கள் சூழ்ந்திருக்கும்பட்டணத்தை
வீரவல்லிமந்திரங்கள் விபரீதமாய்த்தானுமுண்டு
நாகதாளிமந்திரங்கள் நகரெல்லாம்காத்திருக்கும்
இப்படிக்கொத்ததொரு ஏழுபேர்ரெட்டிப்பெண்கள்
அவளுடையவித்தையை அடவிடப்போகாது
விருதுகள்மெத்தவுண்டு மெல்லியுடபட்டணத்தில்
சூதுகள்மெத்தவுண்டு தோகையுடபட்டணத்தில்
பந்தயங்கள்மெத்தவுண்டு பாவையுடபட்டணத்தில்
என்றுசொல்லிமதவீமன் எடுத்துரைத்தானப்போது
அப்போதுஅல்லிராஜன் ஆலித்துதான்கேட்டு
அதுவெல்லாமெனக்கெதிரோ ஆண்டவரேசுவாமியென்றான்
நீங்களிருக்கும்போது நிகருண்டோவெந்தனுக்கு
பஞ்சவர்கள்நாமிருக்க பயமுண்டோவெந்தனுக்கு
துரோபதையாள்தாமிருக்க தோல்விகளும்வந்திடுமோ
வெற்றிகொண்டுவந்திடுவேன் வேந்தர்பெருமாளே
சூதுவென்றுநான்வருவேன் துரைகள்சிகாமணியே
எனக்குமொருபுரவி இதமாகத்தாருமென்றான்
அப்போதுதருமரவ ரானதொருநகுலனைத்தான்
அழைத்துமொருவார்த்தை யன்பாகயேதுசொல்வார்
அல்லிராஜாதானேற ஆனதொருநற்புரவி
ஏதுக்குமஞ்சாம லேறிமிகத்தான்போக
உன்னுடையபுரவியை உத்தமனேயலங்கரித்து
அலங்கரித்துக்கொண்டுவந்து அன்பானமன்னனுக்கு
குருவஞ்சிவாகனத்தைக் கொடுவென்றாரப்பொழுது

### நகுலன் அல்லிராஜனுக்கு புரவி கொண்டுவருதல்

அப்போதுநகுல னடிவணங்கித்தெண்டனிட்டு
ஆகாயவான்புரவி யழைப்பித்தாரந்நேரம்
வையகத்தில்வாழும் வளமானபுரவியைப்போல்
சோடித்தலங்கரித்தான் துரைமன்னன்குதிரைதன்னை
நல்லநல்ல ஆபரணம் நலமாயலங்கரித்தார்
கண்ணுமுகமேனியெல்லாம் கனகரத்தினம்நின்றிலங்கும்
செம்பொன்சிறுசதங்கை சேர்ந்ததொருகுமிழிகளும்
ஆணிப்பொன்னாலே அழகுகடிவாளம்

மெத்தையதின்புரத்தின் மேலான அங்குபடி
அலங்கரித்தார்புரவிதன்னை ஆனந்தமாரனுக்கு
கொண்டுவந்துநிறுத்திஞர்கள் கோபாலபுரவிதன்னை
அப்போதுநகுலனு மன்பாகத்தர்னேடி
நகுலனுமேறியல்லோ நாலுதிசையும்விட்டான்
அல்லிமகாராஜாவை அனைவோருந் தான்பார்த்து
துரோபதையாள்பக்கலுக்கு துரிதமுடன்கூட்டிவந்தார்

### அல்லிராஜன் துரோபதையை வணங்கத் துரோபதை சொல்லல்


தெண்டனிட்டானப்போது திறமான அல்லிமுத்து
வாழ்த்தியெடுத்து மதிமுகத்தைமுத்தமிட்டு
வெற்றிகொண்டுநீவருவாய் வேந்தர்சபைதானறிய
என்றுசொல்லிதுரோபதை இன்பமுடனேசொல்வாள்
பண்டாரப்பெட்டியொன்று பாங்குடனேதான்கொடுத்தாள்
பத்திரமாகவே பண்டாரந்தானெடுத்து
இருந்ததேயுண்டாஞல் ஏவல்பில்லிசூனியங்கள்
பஸ்யமாயெரிந்துவிடும் பாலனேயென்றுரைத்தாள்
விருதுகள்மேற்போட்டாள் வெற்றிகொள்ளதப்பாது
பண்டாரப்பெட்டியை பாலகனேமறவாதே
எதிர்த்துவந்தமந்திரத்தை ஈடழிக்கும்பண்டாரம்
அப்படிக்குப்புத்தி அடைவாகத்தானுரைத்தாள்
மாதுநல்லதுரோபதையும் மனமகிழ்ந்துஅனுப்பலுற்ருள்
அப்போதுஅல்லிராச னன்பாகத்தெண்டனிட்டு
தெண்டனிட்டபுத்திரனைச் சீராகத்தானெடுத்து
பண்டாரமறவாதே பாலகனேஎன்றுரைத்தாள்
மறந்ததேயுண்டாஞல் மாற்ருரைவெல்வதில்லை
நெஞ்சுதனிலேநீ நினைவாகயிருந்தாலே
இறங்குமடாசூனியங்க ளென்மகனேயென்றுரைத்தாள்
அந்தமொழிகேட்டு அல்லிராஜனப்போது
நல்லதுநல்லதம்மா நாயகியேயென்தாயே
மருமகனைத்தான்கூட்டி வழிப்பயணமனுப்பவென்று
வாருளேதுரோபதையும் மருமகனையருகழைத்து
அப்போதுஐவர்களும் அன்பாகத்தானெழுந்து

படைக்குபயணமதாய் பாலகனேயனுப்பவென்று
ஐவருந்துரோபதையு மன்பாகவீதியிலே
எல்லோருங்கூடியல்லோ இன்பமுடன்வந்துநின்று
அல்லிராஜாவையவள் அன்பாயருகழைத்து
புத்திமதிசொன்னர்கள் புண்ணியர்களைவரும்
குறவஞ்சிக்குதிரையைத்தான் குதித்திறங்கிப்போகாமல்
பரிமேலேதானிருந்து பந்தயங்களாடுமையா
பூமிமேல்தானிருந்து பொருந்தாதேபந்தயங்கள்
குதிரைமேல்தானிருந்து கொற்றவனேபந்தயங்கள்
விருதுகெலித்துநீ வெற்றிகொண்டுவாருமையா
குறவஞ்சிவாகனத்தைக் கொண்டுவந்தப்போது
உபதேசம்சொல்லலுற்ரு ருற்றதொருபஞ்சவர்கள்
பாதாளம்போகாதே பரலோகம்போகாதே
பாலகனேநீகண்டால் பரிவானநற்புரவி
புரவிக்குபதேசம் போதவேயுச்சரித்து
குறவஞ்சிவாகனத்தைக் கொடுக்தார்கள்கைபிடித்து
அல்லிமுத்துராஜாவும் ஐவரையுந்தெண்டனிட்டு
ஆலித்துப்பூரித்து அசுவத்தின்மேலேறி
பாண்டவர்களைவரும் பண்பாகப்புத்திசொல்லி
அல்லிமகாராஜாவை அனுப்பினரப்போது
போய்வாருமென்றுசொல்லி புகழ்ந்துவிடைகொடுத்தார்
பாண்டவர்களைவரும் பார்த்துநிற்கநற்புரவி
பறந்ததைக்கண்டார்கள் பாலனைக்கண்டதில்லை
மற்றுமொருகாவலர் மன்னவனைக்கண்டதில்லை
கண்ணுக்குக்காணுமல் கடுகிப்பறந்ததையா
அப்போதுஐவருந்தான் அல்லிராஜாவென்றுசொல்லி
புலம்பினரைவருந்தான் பூவையருந்தான்கூடி
மனதில்கிலேசமதாய் வந்துவிட்டாரப்போது
ஐவருந்துரோபதையும் விந்துவிட்டாரப்போது
போயிருந்தபாண்டவர்கள் பொற்சிங்காதனமேறி
கொலுவிருந்தபாண்டவர்கள் கோதையுடன்தான்கூடி
இப்படிமனம்வருந்தி இன்பமுடன்தானிருந்தார்
அப்போதுவெண்புரவி அல்லிமுத்தைதானெடுத்து
கொண்டுவந்துபறந்ததுகாண் கொற்றவனர்தன்புரவி

நேரய்பறந்ததுகாண் நெல்லூருந்திசைநோக்கி
அப்போதுஅல்லிராஜன் அசுவத்துக்கேதுரைப்பான்
பத்திரகாளியம்மன் பரஞ்சோதிபக்கலுக்கு
இப்போதுநற்புரவி அம்மனிடபக்கலுக்கு
பறந்துவருதுகாண் பார்மன்னர்தன்னைக்கொண்டு
காளியம்மன்பக்கலுக்கு கருத்துடனேவருகுதுகாண்
பத்திரகாளிதன்வனத்தில் பாங்காய்கொண்டுவருகுதுகாண்

### அல்லிமகாராஜன் பத்திரகாளியை வணங்கி வரங் கேட்பது

அல்லிமகாராஜன் ஆலித்துக்கொண்டாடி
அசுவத்தைதான்பார்த்து அடைவாகயேதுசொல்வான்
நில்லுநில்லுமென்றுசொல்லி நேராகத்தானிறங்கி
புன்னைமரத்தடியே புரவியேநில்லுமென்று
அசுவத்தைதானிருத்தி அல்லிராஜாவப்போது
கடுகிநடக்கையிலே காளியம்மன்பக்கத்திலே
பார்க்குமந்தபூதங்கள் பக்கத்தில்நிற்கிறதை
இருக்குமந்தபூதங்களை இன்பமுடன்தான்பார்த்து
சட்டைசடாமுனியு சாத்திரத்துவேதமுனி
முள்ளைவிழுங்குமுனி மூர்க்கமுள்ளராட்சதரும்
கல்லைவிழுங்குமுனி கருமுனியுஞ்செம்முனியும்
பிள்ளைவிழுங்குமுனி பெருமுனியும்ராட்சதரும்
ஒற்றைச்சடாமுனியும் ஒருபல்லுசாட்சதரும்
முனிகளுக்குவலுவான மூர்க்கமுள்ளராட்சதரும்
கோடானகோடிமுனி கூடிநிற்கும்வேளையிலே
அப்போதுஅல்லிராஜன் அன்பாதவருகையிலே
கண்டதேமுனிகலெல்லாங் காவலனையப்போது
இராட்சதபடைத்தலைவன் இராஜமுனியென்றொருவன்
ராஜர்முனிபக்கலுக்கு நடந்தோடிசொல்லுதங்கே
வாராய்நீமன்னவனே வாய்த்தமுனிராஜாவே
இதுநாளிதுவரையு மெங்களுக்கிரையுமில்லை
நாங்களும்வெகுநாளாய் நல்லபசியாயிருந்தோம்
காளியம்மன்வனத்தில் காவலனும்வாறான்காண்
அழகில்மிகுந்தவன்காண் அடியாதபாலகன்தான்



நலமானபாலகனே நாங்கள்பசியாறவேணும்
அம்மனிடபாதமதில் அப்படிக்குக்கேளுமையா
நல்லதென்றுராட்சதனும் நலமாகத்தானெழுந்து
காளியம்மன்பக்கலுக்கு கடுகெனவேதானெழுந்து
அம்மனைக்கண்டு அடிபணிந்துதெண்டனிட்டு
எழுந்திருந்து நின்று என்தாயேபத்தினியே
நம்முடையவனத்திலே நலமாகத்தானொருவன்
விரியமாய்த்தான்வாரான் வீரமாகாள்யரே
அவனைமெள்ளஎங்களுக்கு ஆகாரம்பண்ணுமம்மா
முனிகளுக்கிரைகொடம்மா மூர்க்கமுள்ளஎன்தாயே
ஆகாரங்கொண்டுநாங்க ளனேகநாளாச்சுதம்மா
வாரவனைஎங்களுக்கு மனமகிழ்ந்துவிடையருளும்
என்றுசொல்லிராஜமுனி ஏதுசொன்னாளுத்தமியும்
ஆரடாவருகின்றவ னம்மன்வனந்தனிலே
வந்தவனைத்தான்பிடித்து வகையாகநீயடித்து
ஆளுக்கொருபங்கு அன்பாகத்தான்போட்டு

### ஈஸ்வரி விடை கொடுத்தது

தின்றுவிடுங்களென்று சீக்கிரமாய்விடைகொடுத்தார்
சண்டைகள்போடாமல் தயவாகயெல்லோரும்
கூடியேதின்னுமென்று கொம்பனையாள்ஈஸ்வரியும்
அப்பணிகள்தான்கொடுத்து அனுப்பிவிட்டாளன்னேரம்
நல்லதென்றுசொல்லி நலமாகபூதமெல்லாம்
சந்தோஷமாகத் தலைபூதமேதுசொல்லும்
பட்டணத்துபூதமது பரிவாகயேதுசொல்லும்
வாருங்கள்பூதங்களே வாய்த்ததொருதலையை
உடம்புவுடல்களெல்லாம் முற்றதொருபூதங்களே
எல்லோருக்கும்பங்கா யிதமாகப்போடுங்களென்ன
அப்போதுலாடமுனி அடைவாகயேதுசொல்லும்
நாங்களெல்லோருங்கூடி ஏற்றதொருவெற்றிகொண்டால்
ஆளுக்கொருபங்கு அன்பாகக்கொடுப்பதல்லால்
தலைநாங்கள்கொடுப்பதில்லை தாஷ்டீகமன்னவனே
அப்போது ராஜமுனி யடைவாகயேதுசொல்லும்
அதுவேகருமமென்று எல்லோருந்தான்கூடி

வருகுதையாபூதமெல்லாம் மன்னவனைபிடிக்கவென்று
எதிராகவந்தாரே இன்பமுடன்முனிகளெல்லாம்
நில்லடாவென்றுசொல்லி நேராகத்தானுரைக்க
சுற்றிவளைத்தார்கள் சூருவளிக்காற்றதுபோல்
பல்லைக்கடிப்பாரும் பக்கம்வருவாரும்
நில்லுநில்லுமென்றுசொல்லி நேராகவருவாரும்
அப்போதுஅல்லிராஜனன்பாகத்தான்பார்த்து
குஞ்சிரிப்புகொண்டவனும் கொற்றவனும்நடக்கலுற்றான்
நடக்கிறதைக்கண்டுமுனி நாகம்போல்தான்சீறி
வளைத்ததேமன்னவனை வழியெங்கும்விடாதபடி
கண்டானே அல்லிராஜன் கணபூதவலிமைதனை
வாயைத்திறவாமல் மறுவார்த்தைசொல்லாமல்
முன்லாகுபின்லாகு முதலாகத்தான்பாய்ந்து
சிமிட்டிவிழிக்குமுன்னே தென்னவனும்லகுபாய்ந்து
அதட்டியபூதமதை அடியோடறுக்கலுற்றான்
வாலாளேமன்னவனும் வகையாகவீசலுற்றான்
அப்போதுபூதமெல்லா மையோசிவனேயென்று
அபயமிட்டுதானடங்கி அலறியேஓடுதே
கால்முறிந்தோடுவாரும் கைமுறிந்தோடுவாரும்
தலையற்றுவிழுவாருந் தாயாரைநினைப்பாரும்
பூதத்துக்குமேலான புண்ணியனும்ராஜமுனி

## பூதங்கள் அபயமிட்டு காளியிடத்திலோடுதல்

விடுபட்டுகொக்கரித்து விதமாகஓடலுற்றார்
படைத்தலைபூதம் பத்திரக்காளிக்கபயமென்று
காளியம்மன்பக்கலுக்குக் கடுகெனவேயோடிவந்து
தாயேமகமாயி சாமுண்டியீஸ்வரியே
காளியம்மாதேவி கபாலிநெடுஞ்சூலி
நாங்கள்பட்டபாடு நாயகியேசொல்லுகிறோம்
கேளுமம்மாயென்வசனங் கிருபையுள்ளதாயாரே
சின்னஞ்சிறுவயது சிற்றடிக்குழந்தையம்மா
நாங்கள்-கோடானகோடிபேர் கூடிகுயமானபூதமெல்லாம்
எல்லோருங்கூடி இறக்கடிக்கப்போனோமம்மா
போயவனைவளைத்தோம் பொன்னனபாலகனை

வளைத்ததைக்கண்டு மன்னவனும் லகுபாய்ந்தான்
பாய்ந்தபொழுதே படைமன்னபூதமெல்லாம்
காலொடிந்துபோனவருங் கையொடிந்துபோனவரும்
மேல்விழுந்துகாலொடிந்து மெய்மறந்துபோனவரும்
காயங்களட்டு கணபூதமெல்லோரும்
ஓடியேபோனார்க ளுத்தமியேதாயாரே
நானுமிடுப்பொடிந்து நடந்தோடிவந்தேனம்மா
என்னைநீகாருமம்மா என்ஜீவன்போகாதபடி
காளியம்மாபார்வதியே கட்டழகன்வாரானம்மா
அப்போதுகாளியம்ம ளூர்பறித்துபற்கடித்து
வாரவனை நானும் வாளாலேயிறக்கடிப்பேன்
பசியாறுமென்றுசொல்லி பண்புடனே தானுஞ்சொன்னாள்
படைத்தலைபூதமே பாங்குடனேயோடுதென்றார்
பயப்படாதேயென்று பத்திரகாளிசொல்லுகிறாள்
நெற்றிக்கண்ணைத்தான் திறந்து நெருப்பாயெரிப்பேனென்று
வெளிப்பட்டுப்பார்த்தார்கள் வீரமாங்காளியம்மா
அப்போது அல்லிராஜ னன்பாய்வருகிறதை
வாரதொருதாயாருங் காளியம்மாளேதுசொல்வாள்
கண்டதொருதாயாருங் காளியம்மாளேதுசொல்வாள்
பேரர்மன்னன்பிள்ளை புண்ணியனுமல்லிராஜன்
ஐவருக்கும்பிள்ளை அதாசூரனல்லிமுத்து
ஒருவருக்குமடங்கா னுபாயமுள்ளசேவகண்டா
கையைநெறித்துக்கொண்டு கடுமோசம்வந்ததென்று
என்னசெய்வேனென்றுசொல்லி ஏங்கிமனம்வாடி
முக்காட்டை யிட்டு மூலையிலேதான்படுத்தாள்
அப்போதுஅல்லிராஜ னன்பாகத்தானடந்து
காளியம்மன்பக்கலுக்குக் கடுகெனவேதானோடி

### அல்லிராஜன் காளியிடம் வருதல்

கோவிலுக்குட்புகுந்து குழந்தையெனுமல்லிமுத்து
பாட்டிபாட்டியென்று எழுப்பலுற்றானல்லிராஜன்
அல்லிராஜன்தானெழுப்ப ஆனந்தமகமாயி
என்னவென்றுகேட்கவில்லை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
அப்போதுஅல்லிராஜ னன்பாகயேதுரைப்பான்

போடிநீபோட்டியரே பேரழகிகாளியரே
பார்வதியேயென்ன பராசத்திசாமுண்டி
உன்னைநம்பிநானும்வந்தே னுத்தமியேகார்க்கவேணும்
மாயிமகமாயி மைந்தனைக்காப்பாற்றுமம்மா
பூதப்படையைவிட்டு பொருத்தஎன்னைகொல்லவென்று
நினைத்துமுடிக்கவல்லோ நித்திரையோநீபோகிறது
என்றுசொல்லுமவ்வளவில் ஈஸ்வரியுந்தானெழுந்து
வாடாநீபோரா மன்னவனே அல்லிமுத்து
அப்போது அல்லிராஜன் அடிவணங்கிதெண்டனிட்டு
பூவும்புதுமலரும் போதவேதான்சொரிந்து
காணுகிறேன்காணுகிறேன் கனகமுடிசீர்பாதம்
பத்ரகாளியப்போ பாலகனைத்தானெடுத்து
வாழ்த்தியெடுத்துமவள் வாய்முகத்தைதான்துடைத்து
என்னைப்பெறுவீ ரெம்பெருமாள்பதம்பெறுவீர்
என்றுஎடுத்தணைத்து எங்கேவந்தாய்மகனே
தாயேசரஸ்வதியே சாமுண்டிநாயகியே
வல்லவர்க்குத்தாயாரே ஈஸ்வரியேயென்தாயே
பத்தினியேகாளியம்மா பரஞ்சோதிகேளுமம்மா
எந்தனுக்குவரந்தாரும் ஈஸ்வரியேயென்தாயே
என்றுசொல்லுமவ்வளவில் ஈஸ்வரியேதுசொல்வாள்
வாருமடாதம்பியரே வண்மையுள்ளஅல்லிமுத்து
எங்கேபயணமடா எனக்கறியச்சொல்லுமடா
அப்போதுஅல்லிராஜ னன்பாகவேதசொல்வான்
நெல்லூருபட்டணமாம் நேரான திசைமுகத்தில்
ஆரவல்லிபட்டமர் மன்பானராச்சியந்தான்
அந்தநல்லபட்டணத்தை அழித்துச்சிறைபிடித்து
விருதுகெலிக்க வீரியனும்பயணமென்றுன்
அவ்வார்த்தைகேட்டு ஆனந்தகௌமாரி
என்னவென்றுசொல்லுகிருள் ஈஸ்வரியாள்பாலனுக்கு
நெல்லூருபட்டணத்து நிஷ்டூரிரெட்டிபெண்கள்
நல்லவர்கள்ரெட்டிப்பெண்கள் மந்திரத்தில்வெகுதுரீசு
அவர்கள்மந்திரத்தைவெல்ல யார்ராலுமாகாது
சூனியத்தைவெல்ல துரைகளால்முடியாது
ஆரவல்லிசூரவல்லி அழகானவீர்வல்லி

அக்காளுந்தங்கையரு மாண்டிருக்கும்பட்டணத்தை
அப்படிக்குரெட்டிப்பெண்கள் ஏழுபேர்தானுமுண்டு
சூதினுல் வல்லவர்கள் சூனியத்தில்மெத்தவுண்டு
வந்தவந்தராஜாவை வாளுள்மடித்திடுவாள்
அப்படிக்கொத்த ஆண்மையுள்ளபெண்டுகளை
எப்படிபோய்வெல்வாய் ஏற்றமுள்ளபாலகனே
என்றுதானீஸ்வரியா ளியல்பாகத்தானுரைக்க
என்தாயோஈஸ்வரியே எனக்குவரம்நீகொடுத்தால்
சூனியங்களெல்லாம் துரத்தியடிப்பேனம்மா
பந்தயங்களெல்லாம் பறக்குமடிபார்வதியே
வாக்குவரங்கொடுத்தால் வகையுடனேதான்செயிப்பேன்
இப்படிஅல்லிராஜா இணக்கமுடன்கேட்கையிலே
அப்போதுபத்திரகாளி அன்பாகவேதுசெய்தாள்
அப்படியேவாக்குவாதம் அன்பாகத்தாரேனென்று
என்றுசொல்லிஎழுந்திருந்து இதமாகநீரெடுத்து
இந்தநல்லவெண்ணீறு இன்பமுடன்நான்தாரேன்
வெண்ணீறுபட்டால் வேகுமடாமந்திரங்கள்
திருநீறுகண்டவுடன் தீப்பட்டுவேகுமடா
பஞ்சாக்ஷரங்கண்டவுடன் பஞ்சாய்ப்பறக்குமடா
எதிராளிமேற்பட்டால் எரிந்திடுவார்தப்பாது
ஏவல்பில்லிசூனியங்கள் எதிர்த்துவருமந்திரங்கள்
ஒட்டபில்லிசூனியங்கள் உருவேற்றுமந்திரங்கள்
எங்களிடநீறுபட்டா லெரிந்துவிடும்தப்பாமல்
என்றுசொல்லிகாளியம்மன் இயல்பாகமட்லெடுத்து
திருநீறுமடலெடுத்து சீக்கிரமாய்த்தான்கொடுப்பாள்
அல்லிராஜன்தன்கையில் அடைவாகவாள்கொடுப்பாள்
அல்லிமகாராஜாவும் அன்பாகத்தான்வாங்கி
அடிமடியில்வைத்துக்கொண்டு அடைவாகவாள்சொருகி
சரணஞ்சரணமென்று சாய்த்தான்திருமுடியை
அப்போதுபத்திரகாளி யடைவாகவாளெடுத்து
கொடுத்தாளேஅப்போது கொம்பனையாள்பாலன்கையில்
வாங்கினுனல்லிராஜன் வரம்பெற்றுன்மந்திரவாள்
மந்திரவாள்வாங்கி மாதாவைதெண்டனிட்டு
பயணம்பயணமென்று பாலகனுங்கூறலுற்றுன்

உமையவளேயுன்னைநம்பி படமணமென்றனல்லிராஜன்
ஆலவாய்நீறுதன்னை அசந்துமறவாதே
மறவாதேபாலகனே மனமஞ்சிநில்லாதே
புத்திமதிசொல்லிப் போவென்றனுப்பிவைத்தாள்
அனுப்பின தாயாரை அடிவணங்கிதெண்டனிட்டு
தாயாரேநான்வாறேன் சாம்பிராணிவாசகியே
என்று,சொல்லிப்போனனே ஏற்றமுடனல்லிராஜன்
புரவியிட பக்கலுக்குப் போயவனும்தெண்டனிட்டு
வல்லூற்றுக்குருவியொன்று வகையாகத்தானெடுத்து
நடத்தியபுரவிதன்னை நலமாகக்கைபிடித்து
ஏறினரப்போ ஈஸ்வரியாள்தானறிய
போய்குதிரைமேலே புண்ணியனுந்தானமர்ந்தான்
கொண்டுபறந்தது கொற்றவர்தன்புரவி
நெல்லூருபட்டணத்து நேரானதிசைநோக்கி
எல்லைவந்துஅடுக்கையிலே எதிர்த்ததே மந்திரங்கள்
ஆரவல்லிசூனியங்கள் அதட்டியேபறக்குதையா
எல்லையெல்லாம்தான்மறைந்து எங்குந்தெரியாதே
மலைறந்துமேநிற்கின்ற வஞ்சனையுஞ்சூனியத்தை
கண்டானே அல்லிராஜன் கண்கள்சிவப்பேற
பண்டாரவிபூதியைத்தான் பாங்குடனேதானெடுத்து
உள்ளங்கையிலேவைத்து ஊதிவிட்டானப்போது
ஏகமாய்நிறைந்திருந்த ஏற்றதொருசூனியத்தை
பண்டாரவிபூதியுந்தான் பஸ்பமாயெரித்ததையா
தீயாயெரித்ததையா திறமுள்ளசூனியத்தை
கண்டாரேநாரதரும் கண்கள்ரெண்டும்தன்னுலே
அல்லிராஜர்வந்தாரென்று அறிந்துகொண்டுநாரதரும்
ஓட்டமாய்யாடிவந்து உண்மைதனைச் சொல்லலுற்றார்
ஆரவல்லிசூரவல்லி அதற்கேற்றவீரவல்லி
பெண்களேகேளுங்கடி பேருலகில்சேதிதன்னை
வாராண்டியுங்களைத்தான வல்லுயிரைவாங்கவென்று
நெல்லூருபட்டணத்தை நிர்த்தூளிபண்ணவென்று
ஆரவல்லிபெண்டுகளை அடிமூக்கையறுக்கவென்று
நாரதரும்சொல்லவே ரெட்டிபபெண்கள்தான்கேட்டு
ஆரையாநாரதரே அடியேனுக்குச்சொல்லுமென்றார்

பஞ்சவர்கள் தங்கைமகன் பார்மன்னன்வாருண்டி
குருகுலத்துராஜமன்னன் அல்லிராஜன்வாருண்டி
ஆணழகுமன்னன் அல்லிராஜன்வாருண்டி
நான்-கண்டதொருகாரியத்தை காரிகையேசொன்னேனடி
என்றுசொல்லிநாரதரும் ஏகிவிட்டாரந்நேரம்
அக்காடிதங்கையரே யாரென்றுபாருங்கடி
அப்போதுதாதியாகள் அவரவர்கள்தானேடி
கோபுரத்தின்மேலே கொம்பனையாள்பார்க்கலுற்றாள்
ஏறிநின்றுபார்த்தாள் ஏந்திழைமாரெல்லோரும்
பார்த்துமயங்கி பாவையர்கள்தான்கூடி
அக்காளேபெண்களே ஆனதொருசூனியத்தை
கண்ணிலேயுங்காணேமடி காவல்நின்றசூனியத்தை
சூரியனைக்கண்டால் தொலையும்பனிபோல
ஓடியேபோச்சுதடி ஒளியானசூனியங்கள்
என்றுசொல்லிஆரவல்லி இதுவென்னமோசமடி
அந்தமொழிகேட்டு அழகானசூரவல்லி
மேடையின்மேல்தானே வேந்தனைத்தான்பார்த்து
சொல்லுவாளொருவசனம் கோதையவள்சூரவல்லி
காவல்நின்றசூனியத்தை கட்டழகிகாணேனம்மா
பற்றியெரித்துவிட்டுப் பாலகனும்வாருண்டி
கண்டதொருகாளையைக் கண்குளிரதான்பார்த்து
அடியக்காளேஆரவல்லி ஆணழகன்வாருண்டி
மேகவர்ணபுரவியேறி வீரியனும்வாருண்டி
சின்னஞ்சிறுவயது சிற்றடிபாலகண்டி
அறியாக்குழந்தையடி ஆனழகன்வாருண்டி
சூரியனைப்போலேயல்லோ துலங்குதடிதேகமெல்லாம்
சந்திரவுதயம்போல தயங்குதுமுடிவேந்தனுக்கு
போர்வேந்தன்மேனியெல்லாம் பொன்னுருக்கிவார்த்தாப் [போல்
பரியேறிவாருண்டி பாண்டவர்கள்கூட்டமடி
ஐவரிடமைந்தனைப்போல் அழகுதான்காணுதடி
பட்டணத்துவலிமைகளைப் பார்த்தானேமதவீமன்
வீரியத்தைப்பார்த்தல்லவோ வினைகொண்டுவந்தாண்டி
வீமனும்போயல்லோ வினைகொண்டுதோண்டி
நல்லதொருவீமனுந்தான் நமக்குநச்சுமுள்ளாச்சு

அல்லடிஅக்காளே ஆரவல்லிநாயகியே
என்னசெய்வேன்மக்களே இப்போதவன்தனக்கு
சொல்லடிபெணமயிலே தோகையரேயென்றுரைத்தாள்
ஆரவல்லிதங்கையரும் அன்பாகத்தான்பார்தது
மனதுசலிப்பானேன் மனமஞ்சிநிற்பானேன்
எடுததாடிபெட்டியைத்தான ஏற்றதொருசூனியத்தை
அபபாதுதாதியர்கள்டைவாகத்தானெடுதது
கொணடுவந்துமுன்வைக்க கொமபனையாளங்நேரம்
உச்சரிததாள்மந்திரத்தை உருவேற்றகரடிகளும்
ஆயிரங்கோடி அடைவாகப்பிறந்ததுகாண்
பிறந்ததொருகரடிகளும் பிரபலமாயஎல்லையெலாம்
வநதுவளைததுகாண மன்னவனையப்போது
அலலிமகாராஜனும் ஆர்ப்பரித்துதான்பார்தது
ஆதிநாராயணனென்று ஆயனைததானினைந்து
துரோபதையாள்நாயகியைத் தோற்றமுடன்தானினைந்து
பத்ரகாளியைப் பாங்குடனேதானினைந்து
மாமனமாரைவரையும் மனதிலேதானினைந்து
மனதிலேயுச்சரித்து மன்னவனுமல்லிராஜன்
பண்டாரவிபூதியைப் பாங்குடனேதானினைந்து
உள்ளங்கைதனிலேவைத்து ஊதினனப்போது
எரிக்குதையாகரடிகளை எங்குமவிடாதபடி
அப்போதுகரடியெல்லாம் அனல்பற்றிசெத்துதையா
அதிலேயொருகரடி ஆரவல்லிபக்கலுக்கு
ஆரவல்லிபககலுககு அபயமிட்டுவந்ததையா
அரவமதுகேட்டாளே ஆரவல்லிதங்கையவள்
போடிஅக்காளே இடறுவந்துநேர்ந்ததென்று
ஏதாயிருககையிலே பேரான்கரடியது
அபயமிட்டுக்கரடியும் அலறியேஓடிவந்து
என்னமோதெரியாது ஏதொன்றுநானறியேன்
அடிமடிதட்டிகைவிய யனபாகத்தானெடுத்தான்
உளளங்கையில்வைதது ஊதினன்கொற்றவனும்
பஸ்பமாயெரிததுதடி பட்டுதடிகரடியெல்லாம்
நாலொருததனதம்பிவந்தே னயகியேஆரவல்லி
எனறுசொலலுமவ்வளவில் ஏற்றதொருஆரவல்லி

அக்காடித்தங்கையரே அவனைமெல்லப்பாருங்கள்
எங்கேதான்வாருனே எவ்விடத்தில்நிற்கிருனே
தங்கையர்களோடி தானேறுகோபுரததில்
ஏறியேபார்த்தார்கள் ஏற்றதொருமன்னவரை
மன்னவனுமப்போது மனமகிழ்ந்துகொண்டாடி
ராசமன்னன்வாரானென்று நவநீதமாய்க்கொக்கரித்து
வாரதைக்கண்டாளே மங்கையவள்பெண்ணரசி
வாராண்டிஅக்காளே மங்கையரே ஆரவல்லி
அப்போதுஆரவல்லி அன்பாகத்தானெழுந்து
உள்ளரையில்மந்திரத்தை ஓடியெடுத்துவந்து
உச்சரித்தாளந்நேரம் ஓட்டபில்லிசூனியத்தை
மந்திரிக்கவேங்கையது வன்மையுடன்தான்பிறந்து
அதட்டியெழுந்திருந்து ஆக்கரித்துவருகையிலே
அல்லிராசன்பக்கலுக்கு ஆனதொருவேங்கையெல்லாம்
வருகுதேயப்போது வாளுவளையிறக்கடிக்க
வந்துவளைத்ததையா வகையானமன்னவனை
அப்போதுஅல்லிராசன் அன்பானவேங்கையைத்தான்
கண்டுமனமகிழ்ந்து காரணருமப்போது
வந்ததொருவேங்கைகளை வாளுவளைவாங்கவென்று
பண்டாரவிபூதியைப் பாலகனுந்தானெடுத்து
விட்டெறிந்தானப்போது வேங்கையெல்லாம்பட்டெரிய
வளைத்ததொருவேங்கையெல்லாம் வகையாயெரிந்ததையா
அப்போதொருவேங்கை யடைவாகத்தப்பியதே
ஓடிவந்தோமென்றுசொல்லி ஒளிந்தோடிபோச்சுதங்கே
உச்சரித்தாளந்நேரம் ஒருபில்லிசூனியத்தை
அல்லிராஜாபக்கலுக்கு ஆக்ரமித்துவருகுதையா
வந்ததொருராட்சதிகள் வளைத்துமேமன்னவனை
நிற்குதேபூதங்கள் நேராகத்தான்பார்த்து
சொல்லுவானல்லிமுத்து சோதிமணிமுடியான்
ஆரவல்லிசூனியத்தை அளவிடப்போகாது
மந்திரத்தில்வல்லவள்காண் மாயவித்தைதாரியவள்
என்றுசொல்லிராசா இதமாகப்பார்க்கலுற்ருன்
வந்ததொருராட்சதியை வாளுவளைவாங்கவென்று
எடுத்தானேபண்டாரம் ஏற்றதொருஅல்லிராஜன்

ஆலேவாய்நீறுதன்னே அன்பாகத்தானெடுத்து
நாலுதிக்கும்விட்டெறிந்தான் நலமான அல்லிமுத்து
விட்டெறிந்தபோதல்லோ வேகுதுராட்சதிகள்
ஒன்றும்விடாதபடி உத்தமனுந்தானெறித்தான்
அசுவத்தைக்கண்டு அடைவாகத்தட்டிவிட்டான்
அசுவமுமசையவில்லே அப்புரமும்போகவில்லே
குதிரைசற்றுமசங்காமல் தத்தளித்துநிற்குதுகாண்
குதிரைபோகாததுகண்டு கொற்றவனுமேதுரைப்பான்
ஆரவல்லிசூனியங்கள் அகப்பட்டுதென்றுசொல்லி
சூரவல்லிமந்திரங்கள் சுழன்றுதேயென்றுசொல்லி
குதிரையின்கீழே குனிந்துமெல்லபார்க்கலுற்ருன்
புரவியின்கீழொரு பூவையொருராட்சதிதான்
மறைந்துமெள்ளநிற்குதையா மன்னவனேச்சங்கரிக்க
நிற்குமந்தவேளேயிலே நேராகத்தான்பார்த்து
கையினுல்பிடித்தானே காவலனுமல்லிராஜன்
பிடித்துக்கொண்டுமன்னவனும் பூதத்தைப்பார்த்துரைப்பான்
ஆரடிபெண்ணேநீ அறியவேசொல்லுமென்ருன்
அப்போதுபெண்பூதம் அடிபணிந்தேதுசொல்லும்
அடியேனுன்பெண்ணுமல்ல ஆரவல்லிமந்திரங்கள்
ஆரவல்லிசூனியங்கள் ஆண்டவனேயென்றுரைத்தாள்
பெண்பூதமத்தனேக்கும் பேரானமோப்பியென்ருள்
வெற்றிகொண்டுபோவோமென்று வேந்தனேநானும்வந்தேன்
வெற்றிக்கொண்டுபோனுல் விருதுகளேத்தான்கொடுப்பாள்
சந்தோஷமாக சரவாபரணந்தான்கொடுப்பாள்
வந்தவந்தராஜாவை வாணுளேவாங்கிடுவோம்
ஆண்டவருநீருமிப்போ ஆரவல்லிபட்டணத்தை [டாய்
என்-கூடவந்தபடைகளெல்லாம் கொற்றவனேகொன்றுவிட்
நானெருத்திதப்பினேன் நாயகனேயென்றுரைத்தாள்
அப்போதுஅல்லிராஜன் உங்களாரவல்லிதன்னுடனே
என்னவென்றுசொல்வாய் எனக்கறியசொல்லுமென்ருன்
அப்போதுஅல்லியிடம் அடைவாகஏதுசொல்லும்
வாருமையாசுவாமி வண்மையுள்ளராஜாவே
என்னவென்றுசொல்லுவே னேதென்றுநானுரைப்பேன்
எல்லோருமிறந்துவிட்டா ரேந்திழையேயென்றுரைப்பேன்

அந்தநல்லவார்த்தை யடைவாகநானுரைப்பேன்
அப்போதுஅல்லிராஜ னடைவாகயேதுசொல்வான்
உந்தனுக்குச்சொல்லவென்றால் வாயில்லைராட்சதியே
நான்சொல்லக்கேளுமடி ராட்சதிமோப்பியரே
அப்போதுபுரவி அசையவில்லைநாயகியே
புத்தியுள்ளமன்னவனும் பூமியைப்பார்க்கலுற்றான்
அசுவத்தின்வயிற்றில் ஆராய்ந்துபார்க்கலுற்றான்
கண்டவுடனேஎன்னைக் காலனுமப்போது
அண்டையிலேதானழைத்து அடிமூக்கையறுத்துவிட்டான்
எதிர்த்தாரையீடழிப்பான் ஏழைகளை ஆதரிப்பான்
ராட்சதியும்அவ்வசனம் நலமாகச்சொன்னபின்பு
அப்போதுஆரவல்லி அன்பாகயேதுசொல்வாள்
வாடியம்மாதங்கையரே வல்லவனையீடழிக்க
வாரவழிதனிலே மன்னவனைவழிகாட்ட
பொய்க்குழியைவெட்டுங்கடி புத்தியுள்ளதங்கையரே
வந்ததொருபுரவியுந்தான் மனமஞ்சிநிற்குதையா
நின்றதொருபுரவிதன்னை நேராகமன்னவனும்
அடித்தானேஅல்லிராஜன் அப்போதுபுரவிதன்னை
அப்போதுபுரவியது அவ்விடம்விட்டசையவில்லை
பின்னுமொருவீச்சு பிரபலமாய்ச்சாடினான்
புரவியதுஅந்நேரம் பின்னுக்குவாங்குதையா
அதுகண்டுஅல்லிராஜன் அறிந்தானே அப்போது
பண்டாரவிபூதியை பாங்காகதானெடுத்து
இரைத்தானேமுன்னுகை இந்திரனும்அல்லிமுத்து
அப்போதுபொய்குழியும் அடைவாகத்தான்மறைத்து
அரும்புபோய்த்தானுருகி இலையெல்லாம்பாறையைப்போல்
பொய்குழியும்தந்து போச்சுதையா அந்நேரம்
அப்போதுஅசுவமது அடைவாகநடக்குதையா
பாரைமேல்குதிரை பாங்குடனேநடந்துசென்று
வாரதொருபாலகனை வகையாகத்தானுங்கண்டு
ஆரவல்லியப்போது அலறியேயேதுசொல்வாள்
அல்லடிதங்கையரே அவனுக்கனர்த்தம்வந்துநேர்ந்ததடி
அறியாதபாலனென்றால் அவனைவிடக்கூடாது
குழந்தையென்றுவிட்டால் கொல்லுவான்தப்பாது

வந்துமிகஉட்புகுந்தால் வதைப்பானேதப்பாது
எந்தவிதமானாலும் அவனையீடழிக்கவேணுமடி
அருகாகத்தானழைத்து அடிமூக்கையறுத்துவிட்டான்
ஓடிப்போவென்றுசொன்னான் உங்களாரவல்லிபக்கலுக்கு
முறைகொண்டுபோவென்று முடிக்கிறான்தப்பாது
ராட்சதியைமுடிக்கியல்லோ நல்லதொருஅல்லிராஜன்
அசுவத்தின்காலிலே ஆணழகன்தட்டினான்
கொண்டுபறந்ததுகாண் கோலவர்ணபுரவி
ஆரவல்லிபட்டணத்துக்கு அன்பாகபுரவியது
நடுமத்தியெல்லையிலே நல்லதொருமத்தியிலே
கொண்டுவருகுதையா கொற்றவனார்நற்புரவி
அந்தநல்லவேளையிலே ஆனதொருதாதியவள்
ஆரவல்லிபக்கலுக்கு அன்பாகதானோடி
அடியக்காளேஆரவல்லி அழிவுவந்துநேர்ந்துதம்மா
நமதுபட்டணமும்யின்றோடே ராசமன்னர்சேனைமன்னர்
அழிக்குதம்மாதப்பாது ஆரவல்லிநாயகியே
என்னோடேசேர்ந்துவந்த இணைப்பூதமத்தனையும்
மன்னவனைக்கொல்லாமல் மடிந்ததுபூதமெல்லாம்
ஒளித்துயிருந்துமல்லோ உபாயமுள்ளமன்னவனை
சங்கரிப்போமென்று தனித்திருந்தேன்ஆரவல்லி
தனித்திருக்கும்வேளையிலே தாஷ்டீகனும்அந்நேரம்
குருவஞ்சுவாகனத்தை கொற்றவனுமீட்டினான்
என்றுசொல்லிஆரவல்லி யிருந்ததொருதங்கைசொல்வாள்
விட்டுவிட்டசூனியத்தை வெற்றிகொண்டான்மன்னவனும்
அனுப்பியமந்திரத்தை அழித்துமிகவெட்டிவிட்டான்
தவிடாகஉருக்கியல்லோ தாஷ்டீகனும்வாராண்டி
அவனைதான்கொல்லும்வகை அக்காளேசொல்லுமென்றாள்
அவ்வசனந்தான்கேட்டு ஆரவல்லியேதுசொல்வாள்
பேர்பெரியமந்திரத்தை பெண்வடிவுசெய்தாளே
கண்டானேஅல்லிராஜன் கண்கள்சிவப்பேற
பெண்கள்சூழ்ந்துவந்தார்கள் பேர்பெரியமன்னன்முன்னே
இடையிலேசூரி இருக்கவந்தகாரியமேன்
கழுத்தையறுக்கவந்த காரியந்தானுமல்ல
குத்திகுடல்பிடுங்கும் கூர்மையுள்ளகத்தியது

பெண்ணுமல்லகன்னியல்ல பேரழிக்குஞ்சூனியங்கள்
கன்னியல்ல அரிவையல்ல காலனென்றுதானறிந்து
கொம்பனையாள்தானுமல்ல கொல்லவந்தகூற்றவள்காண்
என்றுசொல்லிஅல்லிராஜன் இதமாகத்தானழைத்து
திரௌபதையைத்தானினைந்து தோத்தரித்தாரந்நேரம்
பத்திரகாளியம்மனையும் பாங்குடனே தானினைந்து
பண்டாரவிபூதியைத்தான் பாங்குடனே தானெடுத்து
விட்டெறிந்தானப்போது வெந்துதான்விட்டார்கள்
ஆயிரங்கன்னியர்கள் அடைவாகஎரிந்துபோனார்
அவளுமொருபுறமாய் அப்புறம்ஒதுங்கிநின்றாள்
ஒதுங்கிநின்றகன்னி உபாயமாயோடிவந்து
ஆரவல்லிபக்கலுக்கு அலறிவாருளம்மாவென்று
அப்போதுஆரவல்லி அடிபெண்ணேகன்னியரே
அபயங்கொண்டுவந்ததென்ன ஆரணங்கேசொல்லுமென்றாள்
வந்ததொருமந்திரகன்னி வாய்திறந்துசொல்லலுற்றாள்
வாய்குளறிமனதுகுன்றி வல்லவண்டிவர்த்தகண்டி
ஆயிரங்கன்னியர்கள் அடைவாகத்தான்போயி
வந்ததொருமன்னவனை வழிமறித்துக்கொண்டோமம்மா
அப்போதுராஜமன்னன் அடைவாகத்தான்பார்த்து
கண்ணாலேபார்த்தவுடன் கன்னியர்கள்வெந்துவிட்டார்
என்றுசொல்லிஆரவல்லி ஏங்கிமனந்தளர்ந்தாள்
ஆனாலுமென்னடி ஆகட்டுமென்றுசொல்லி
தேறிமனந்தெளிந்து தெளிவையருமேதுசொல்வாள்
தான்கற்றதோர்வித்தையெல்லாம் காரிகையுச்சரித்தாள்
உள்ளரையிலிருந்ததொரு உத்தமியாள்வித்தையெல்லாம்
உச்சரித்துநின்றுமவள் ஒருமுகமாய்த்தானினைத்தாள்
அப்போதுசூனியங்கள் அழகானபெண்வடிவாய்
மந்திரங்கள்தான்திரண்டு மங்கைவடிவமானாள்
எதிர்வந்துநின்றதையா எனக்காகபூதமது
அப்போதுஆரவல்லி அவள்முகத்தைதான்பார்த்து
பெண்ணாய்பிறந்துநாங்கள் பேருலகில்கீர்த்திபெற்றோம்
கன்னியரேநாங்கள் கலங்காமலரசாண்டோம்
ஆண்டிருக்கும்நாளையிலே அரசமக்கள்வந்ததுண்டு
வந்தவந்தராசர்களை வாணளிறக்கடிப்போம்

இந்தநல்லபாலகனை இறக்கடிக்கவேணுமடி
பலபலசூனியத்தைப் பரிவாக அனுப்பிவிட்டாள்
என்னென்னவஞ்சனைகள் ஏந்திழையாள்செய்துவிட்டாள்
அந்தநல்லவித்தைகளை யடைவாகக்கொண்டுநிற்க
வந்தவந்தசூனியத்தை வகையாகநீங்கள்சென்று
கொன்றுமுடித்துநீங்கள் குலாவிநிற்கவேண்டுமம்மா
அப்போதுமந்திரகன்னி அடைவாகயேதுசொல்வாள்
வந்ததொருமன்னவனை நாங்கள் வழிமறித்துநின்றோமானால்
நின்றதொருகன்னிகளை நீறுகயெரித்திடுவான்
எங்களையுங்கொன்று எமலோகம்சேர்த்துவைப்பான்
தப்பாது ஆரவல்லி தயவாகவந்துவிடும்
வன்மையுடநீங்மளும் போய் மனமகிழ்ந்துகூட்டிவாரும்
கூட்டிவந்தால்மன்னவனை கொம்பனையேயுபாயமதாய்
எதிர்த்துவந்தமன்னவனை இடறுகள்செய்யவேணும்
உன்னாலுமென்னாலும் யுகம்முடிந்துபோனாலும்
மன்னவனைக்கொல்லவே மகாதேவர்வந்தாலும்
செத்துமடிந்தாலும் திரும்பிப்பிறப்பாண்டி
மாண்டுபிறந்தாலும் மங்கையரே தான்பிழைத்து
அழுத்திச்சிறைபிடித்து ஆள்வாண்டிபட்டணத்தை
என்றுசொல்லமந்திரகன்னி இயல்பாகநின்றுகொண்டு
ஆரவல்லிதான்சினந்து அதட்டியுரைக்கலுற்றாள்
அப்போதுமந்திரகன்னி அடைவாகயேதுசொல்வாள்
நான்-சொன்னதைசொன்னேண்டி தோகையரே ஆரவல்லி
ஆபத்துவரும்போது ஆர்க்குந்தான்தெரியாது
வந்தால்தெரியுமே மங்கையரேயுந்தனுக்கு
பூமியிலரனைப்போல் புண்ணியனைகொல்லவென்றால்
உனக்கவனடங்காண்டி உற்றதொருஆரவல்லி
மந்திரத்தில்சிக்காண்டி மன்னவனுஞ்சூரனுந்தான்
வித்தையில்சிக்காண்டி வீமனுமல்லிராஜன்
கேட்பார்க்குபுத்திகளை கிளிமொழியேசொல்லுவார்கள்
உனக்குமேபுத்திசொன்னால் உரைக்குமோநாயகியே
வந்ததைபட்டுக்கொள்ளும் வரும்வினையைசொன்னனடி
என்றுசொல்லிகன்னியர்கள் உரைக்கவேநடந்துவந்து
ஆயிரங்கன்னியர்கள் அடைவாகவந்துமே

வந்ததொருகன்னியர்கள் வழிமறைத்துக்கொண்டார்கள்
அப்போதுஅல்லிராஜன் ஆசாரநடைநடந்து
கொஞ்சிநடைநடந்து குதிரைமேல்தானேறி
தென்னவனுமப்போது தெம்மாங்குபாடிக்கொண்டு
வாருனே அப்போது மன்னவனுமல்லிமுத்து
அந்தநல்லவேளையிலே ஆயிரங்கன்னியரும்
எதிர்பட்டார்மங்கையர்கள் என்க்கான்ரம்பையைப்போல்
நடையுடை யழகும் தோகைநல்லாள்மார்பழகும்
வயிரும்வயிரழகும் வாய்த்தொருதோளழகும்
கண்கள்குறியழகும் கன்னியர்கள்பேரழகும்
கைவிரலுங்காலழகும் கடைந்தெடுத்தபாவைப்போல்
முகத்துத்திருவிழ்க்கும் மூன்ரும்பிறைய்துபோல்
கண்ணழகும்காலழகும் பாருலகிலாருமில்லை
கொஞ்சுகிளிபோலே கொம்பனையாள்தன்னழகும்
கிளிமொழிமாதர்கள் கீதங்கள்பாடிக்கொண்டு
தோகையர்களப்போது கூடியோடிவந்து
அல்லிராஜாமுன்னே அழகாகநின்ருர்கள்
தெய்வலோககன்னியென்று சிந்தையிலேதானினைந்து
கன்னியரைக்கண்டவுடன் காதலனுமல்லிராஜன்
சொல்லுவானொருவசனம் தோகையுடபெருமைதன்னை
ஆரவல்லியென்றுசொன்னுல் அவனிநடுங்குதையா
இந்தநல்லவல்லமையா யிருக்கிருள்பெண்பெருமாள்
அரசாண்டுவாழ்ந்திருந்தாள் ஆரணங்குமாரவல்லி
இல்லாதபோனுக்கால் யீடழிந்துபோவாள்காண்
இதுவெல்லாமெந்தனுக்கென் மாமன்மார்தானுரைத்தார்
என்றுசொல்லிஅல்லிராச னிதமாகத்தான்பார்த்து
மயங்கிமனமுருகி மங்கையரைத்தான்பார்த்து
மந்திரக்கன்னியென்று மனதிலேதானறிந்து
மன்னவனுமல்லிமுத்து மயக்கத்தைதானிருத்தி
ஆராத்துயரம்நீக்கி ஆணழகன்பார்க்கலுற்ருன்
பார்க்குமந்தவேளையிலே பாவையுடகன்னியென்று
கண்டதொருமன்னவனும் கரியமால்தஞ்சமென்று
என்னைகொல்லவேணுமென்று வந்ததொருகொம்பனையாள்
துரோபதையைத்தானுமங்கே தோத்திரித்தானந்நேரம்

தோத்தரித்துமன்னவனும் துரைமகனுமேதுசெய்தான்
மாயவனைத்தானினைந்து மந்திர்வாளெடுத்து
மந்திரத்தையுச்சரித்து மங்கையர்மேல்விடுத்தான்
மந்திரக்கன்னிகளெல்லாம் மாண்டார்களப்போது
அப்போதொருகன்னி அடைவாகநின்றாள்காண்
நின்றதொருகன்னிகையும் நிஷ்டூரிஓடலுற்றாள்
ஓடியல்லோ ஆரவல்லி உத்தமியாள்பக்கலுக்கு
போயவளும்நின்றுமே போற்றிமொழியலுற்றாள்
ஆரவல்லிசூரவல்லி அழகானவீரவல்லி
எங்களால்முடியாது ஏந்திழையேபோற்றியென்றாள்
வந்தவந்தராசாவை மடியடித்தோம் ஆச்சியரே
தேசத்துமன்னவரை சேரவேகொன்றுவிட்டோம்
இந்தமன்னவனைக்கொல்ல எவனாலும்முடியாது
மந்திரவாளெடுத்து மன்னவனும்வீசிவிட்டான்
அப்போதுமெல்லியர்க ளக்கினியாயெரிந்தார்கள்
நானொருத்திதப்பியே நடுவழியேயோடிவந்தேன்
தப்பிப்பிழைத்து தாயேநான்வந்தேனம்மா
இதுநல்லவார்த்தை இதமாகத்தானுரைத்து
மற்றுமொருவார்த்தை வகையாயுரைக்கலுற்றாள்
ஆரவல்லியென்தாயே அன்பாகக்கேளுமென்றாள்
ஐவர்குலத்தரசு அன்பானகுருகுலத்தான்
பஞ்சவர்கள்கூட்டமம்மா பார்வேந்தராசமன்னன்
குருகுலத்துராசமன்னன் கொற்றவனும்வாருண்டி
என்னவென்றுவாருண்டி ஏற்றதொருமன்னவனும்
ஆரவல்லிசூரவல்லி அக்காளுந்தங்கையுமாய்
சூதுகளைவென்று துரைத்தனங்களாண்டிருந்தாள்
விருதுசொல்லிவெற்றிகொண்டு வெகுநாளரசாண்டாய்
நீயாண்டபட்டனத்தை நீறாக்கவேண்டுமென்று
ஆண்பிள்ளையென்று பாலகனும்வாருண்டி
என்று சொல்லியிருக்கையிலே ஏந்திழையாளெதிராக
கோட்டைக்குமுன்னாகக் கொற்றவனுந்தானிறங்கி
வல்லூருகுருவிதன்னை வகையாகத்தானெடுத்து
இருக்குமிடந்தனிலே இதமாகத்தூக்கிவிட்டான்
அப்போதுஆரவல்லி அன்பானபெண்களைத்தான்

அறியாதபாலகன்தான் அறிவழிக்கப்பேசுருண்டி
பார்த்தால்சிறுபிள்ளை நமக்குப்பழிகாரன்வந்தாண்டி
அக்காளேதங்கையரே அணிவகுத்துக்கொள்வாண்டி
என்னவகைக்கண்டு இவனைக்கெலித்திடுவோம்
என்றுசொல்லபெண்ணொருத்தி ஏந்திழையாளேதுசொல்வாள்
பந்தயத்திலவனை படைவெல்லவேணுமல்லோ
என்றுசொல்லிஆரவல்லி இருக்குமந்தவேளையிலே
அப்போதுஅல்லிமுத்து ஆரவல்லியென்றுரைத்தான்
என்னடிபேசவில்லை ஏந்திழையேஎன்றுரைத்தான்
அடியென்றசத்தம் ஆரவல்லிதான்கேட்டு
கண்கள்சிவக்குதப்போ கருங்கோபமாகுது
வந்தமனராசாக்கள் வகையாயெதிர்த்துநின்று
ஆரடியென்றுசொல்லி அதட்டியுரைத்ததில்லை
தேசத்துமன்னவர்கள் சேரவேவந்தார்கள்
வந்தவர்களெல்லோரும் வாக்குரைத்தபேருமில்லை
கொற்றவர்கள்வந்ததுண்டு கூறியேயழைத்ததில்லை
அறியாதபாலகண்டி அம்மையென்றுந்தானழைத்தான்
அடியென்றுசொன்னவனை ஆக்கினைகள்பண்ணவேணும்
என்றுசொலலிஆரவல்லி இருந்தாளே அப்போது
தங்கையர்களப்போது தான்பூண்டுகொண்டார்கள்
வாருமடியக்காளே வந்ததொருமன்னவன்தான்
எதிரேவிட்டானகூடாரம் ஏற்றதொருமன்னவனும்
கூடாரம்போட்டு கொற்றவனுந்தானிருக்க
நாமிங்கேதானிருக்க போகாதுஆரவல்லி
போய்கண்டால்நல்லதென்றுள் பூவையருந்தானொருத்தி
அப்போதுஆரவல்லி அடைவாகயேதுசொல்வாள்
தங்கையரைப்பார்த்து தயவாகயேதுசொல்வாள்
ஆளுலைகுமன்னன் அவனறியாதபாலகண்டி
பாலகன்தனனிடத்தில் பத்தினியாளப்போது
கோட்டையுந்தான்கடந்து கொத்தளமுந்தான்கடந்து
வாசலுந்தான்தாண்டி வாருர்கள்பெண்களுந்தான்
ஆரையாராசனே அடியேன்நான்சரணமென்று
சிறுபிள்ளைராஜாவே தேசத்துமன்னவனே
வாருமையாராசாவே வந்தாரே பெண்களுந்தான்

அப்போது அல்லிராஜன் அன்பாகந்தான் பார்த்து
அடி - ஆரவல்லிசூரவல்லி அதற்கேற்றவீரவல்லி
சூதுகளெங்கேயென்று துரைமகனும்கேட்டானே
என்றுசொன்னனல்லிராஜன் ஏந்திழையாள்பெண்கள்முன்னே
வாருமையாசுவாமி வண்ணமுடிவேந்தரே
தேசங்கள்தன்னைவிட்டு செருக்கடைந்துவந்தீரோ
நாடுகள்தன்னைவிட்டு நடந்துமிகவந்தீரோ
வனங்கள்வனங்கடந்து வந்தீரோராசாவே
தண்ணீர்தனைகுடித்து தாகவிடாய்தீர்த்தபின்பு
இருப்பாயிளைப்பாற்றி ஏகாந்தமாயிருந்து
சந்தோஷமாயிருந்து தார்வேந்தரப்போது
பந்தியங்களாடவேண்டும் பார்மன்னுயென்றுசொன்னுள்
அந்தவிசேஷம் அல்லிராசன்தான்கேட்டு
ஏதுரைப்பான்அல்லிமுத்து ஏற்றதொருமன்னவனும்
தண்ணீர்தவக்கமில்லை தாகவிடாய்தானுமில்லை
வயிறுபசிக்கவில்லை வாழ்மயிலேஆரவல்லி
நமக்கொன்றும்வேண்டாங்காண் நலமான ஆரவல்லி
அசிவந்தானிப்போது ஆரவல்லிபக்கம்வந்து
வாருமடி தங்கையரே மன்னவனைக்கொல்லவென்ருல்
மன்னவன்சிக்கவில்லை மாருட்டம்பேசுகிருன்
அப்போதுதங்கையரும் அன்பாய்உரைக்கலுற்ருள்
குதிரையைக்கொன்றுவிட்டால் கொற்றவனும்மாண்டிடுவான்
இதுக்கென்னவிபர மேந்திழையேசொல்லுமென்ருள்
அப்போதுஆரவல்லி ஆரணங்குயேதுசொல்வாள்
நஞ்சுகள்பச்சைநாபி நான்குமுடாயிதுதான்
இருக்குதம்மாமுடாவினிலே எடுத்தாடிநாயகியே
அந்தட்சணமே அரண்மனைக்குத்தானேடி
நஞ்சுகளெல்லாம் நலமாகஎடுத்துவந்து
கொள்ளுமொருகலமும் கொம்பனையாளந்நேரம்
ஆயிரமுடாவிலே அடைவாகவைத்தார்கள்
குழந்தைவுடன்பக்கலுக்குக் கூசாமல்நான்போனுல்
பார்த்தவர்கள்சிரிப்பார்கள் பட்டணத்துஜனங்களெல்லாம்
நல்லதடி அக்காளே நன்ருச்சு காரியங்கள்
கோட்டைதலைவாசலிலே கொற்றவனும்வந்திருக்க

நாம்பாராதுபோலிருந்தால் பார்ந்தவர்கள்நகையாரோ
சிறுபிள்ளையென்று சொல்லி இருக்கவுங்கூடாது
அதரசூரன்வீரனுந்தான் அழித்திடுவான்பட்டணத்தை
ஆரவல்லிசூரவல்லி அழகானவீரவல்லி
சூதுகள்முன்னாக சூழ்ந்திருக்கவிட்டோமென்றால்
அந்தநல்லவேளையிலே ஆனதொருசூதுகளை
சூதுகளைகண்டல்லோ தோற்கடிக்கவேணுமம்மா
இல்லாதபோனக்கால் இறக்கடிக்கதப்பாது
அந்தமொழிகேட்டு ஆரவல்லிதானெழுந்து
தங்கையவள்கேட்டுத் சயவாசத்தானடந்தாள்
கோழிக்குமுன்னாகரெண்டு கொள்ளெடுத்துப்போடுமென்றாள்
அப்போதுவ்ரவல்லி அன்பாகதானெடுத்து
கோழிக்குமுன்னாகக் கூசாமல்தான்போட்டாளே
கோழிதான்தின்று குறிவப்படுத்துதையா
படுத்தநல்லகோழிப் பதையாமல்செத்துதையா
அக்காளுந்தங்கையுமாய் அன்பாகத்தான்பார்த்து
குதிரையைமெள்ள கொல்லுவோமென்றுசொல்லி
அல்லிராஜாபக்கலுக்கு வருகிறாளாரவல்லி
என்னடிபெண்ணேநீ இன்னேரமென்றுரைத்தாள்
ஆரவல்லிதானும் அனர்த்தம்வந்துநேர்ந்ததென்று
வாயுந்திறவாமல் மன்னவனைநோக்காமல்
எந்தவிதத்தில் இறக்கடிப்போம்குதிரையென்று
ஆகட்டுமென்றுகோபத்தை அடக்கினாள்மனதிலேதான்
சுவாமிகளேயென்று தோற்றமுடன்தானழைத்து
குதிரைக்குக்கொள்ளு கொண்டுவந்தேனென்றுசொல்ல
அப்போதுஅல்லிராஜா அன்பாகத்தான்வரங்கி
பண்டாரவிபூதியைப் பாங்குடனேதானெடுத்து
கொள்ளோடேகலந்தாலே கொற்றவனுமப்போது
கலந்தெடுத்துமன்னவனும் கரியமாள்தஞ்சமென்று
குதிரைக்குமுன்னாலே கொண்டுபோய்வைத்தானே
அப்போதுகுதிரையுந்தான் அடைவாகவந்ததுகாண்
ஆரவல்லிதானும் அக்காளுந்தங்கையுமாய்
குதிரைக்குந்தண்ணீருங் கொண்டுவாவென்றுரைத்தாள்
ஓடியேவந்துதங்கே யுற்றதொருகொப்பறையில்

நஞ்சுகள்பாஷாணம் நலமாகத்தான்போட்டு
தண்ணீரைத்தானும் தயவாகத்தானனுப்பி
காகமுமன்னேரம் கரகரென்றுவிழுந்துதையா
அதுகண்டுஆரவல்லி அன்பாகயெடுத்துவந்து
கொப்பறையைகொண்டுவந்து குதிரைக்குமுன்னேவைத்தாள
பண்டாரந்தானெடுத்து பாங்காகத்தான்போட்டு
விபூதிதானெடுத்து விதவிதமாய்த்தான்பூசி
குதிரைக்குமுன்னுக கொப்பறையையெடுத்துவந்தான்
அந்நீரைகுதிரை அந்நேரம்தான்குடித்து
தண்ணீர்குடித்து தாகவிடாய்தீர்த்துதையா
பச்சைநாபிதானுமப்போ பாலமிர்தமாச்சுதையா
கொக்கரித்துநின்றது குதிரையுமந்நேரம்
அப்போதுஅல்லிராஜன் ஆரவல்லியென்றழைத்தான்
ஏதையாசுவாமி எனக்கறியச்சொல்லுமென்றுள்
சூதுகளையெடுத்தாடி தோகையரேயென்றுரைத்தான்
ஆரவல்லிதாயாரு மானதொருபெண்களெல்லாம்
கொண்டுவந்தோமென்றுசொல்லி தோகையருமந்நேரம்
அக்காடிதங்கையரே ஆர்செய்தகுற்றமடி
கொள்ளுகள்தன்னுடே கூடினநஞ்சுகள்தான்
ஆனதொருபுரவிக்கு அமுர்தங்களாச்சுதம்மா
இதுவேகாரணங்கள் இதுவென்னமாயமென்றுள்
அந்தநல்லவேளையிலே அல்லிராஜர்கூறுகிறுர்
அடி-எங்கேயடிஆரவல்லி எடுத்தாடிசூதுகளை
கொண்டாடிகொண்டாடி கொம்பனையேகொண்டாடி
இதுவேளை இதுசமயம் இதமாகத்தான்கேட்டு
என்றுசொல்லிஅல்லிராஜன் அழைத்தானேயந்நேரம்
விருதுசமயம் விதமாகத்தான்கேட்டு
பட்டணத்திலுள்ள பழஜெனத்தையழையுமென்றுன்
அழைத்துமிகவந்தார்க ளந்நேரம்பெண்களுந்தான்
வந்தநல்லசபையார் மன்னவரையிருக்கச்சொல்லி
இடங்கள்கொடுக்க எல்லவருமிருந்தார்கள்
அப்போதுஆரவல்லி அடைவாகக்கூறுகிறுன்
சூதுகெலிக்கவந்த துரைமகனேவாருமென்றுள்
அப்போதுஅல்லிராசர் ஆர்ப்பரித்துகொக்கரித்து

மாயவனைத்தானினைந்து வாருனேமன்னவனும்
துரோபதையைத்தானினைந்து துரைமகனும்வாருனே
பத்திரகாளியைத்தானினைந்து பாலகனும்வாருனே
ஐவரையுந்தானினைந்து அன்பாய்வருகலுற்ருன்
விபூதிபண்டாரம் விதமாகத்தானெடுத்து
பூசிக்கொண்டானப்போது புண்ணியனுமல்லிமுத்து
குதிரையிட மேனியெல்லாங் கொற்றவனும்பூசலுற்ருன்
அஸ்வத்தின்மேலேறினுன் ஆனந்தவாழ்மார்பன்
அஸ்வமுங்கொண்டுவந்து அம்பலத்தில்விட்டதுகாண்
கூடினசபைநடுவே கொற்றவனுர்நற்புரவி
படுத்துதையாநற்புரவி பாங்கானசபைநடுவே
சபைநடுவேவீற்றிருந்தான் தார்வேந்தனப்போது
எடுத்தாடிசூதுகளை, ஏந்திழையே ஆரவல்லி
இவ்வார்த்தைகேட்டு இதமாக ஆரவல்லி
தங்கையரைத்தானழைத்து தாஷ்டீகமாயேதுரைப்பாள்
எடுத்தாயிருப்புதடி யேற்றதொருதங்கையென்ருள்
சொல்லுகிருளப்போது தோகையவள்மன்னனுடன்
இருப்புதடிகொடுத்தேன் இருதுண்டாயாகவேணும்
துண்டமதுதானுஞ் சரினிறையாயிருக்கவேணும்
இல்லாதுபோனுக்கா லிறக்கடிப்போம்தப்பாமல்
என்றுசொன்னுளாரவல்லி ஏந்திழையுமவ்வளவில்
விபூதிபண்டாரம் வேந்தனுந்தானெடுத்து
இருப்புத்தடிமேலே இதமாகத்தான்தூவி
பத்திரகாளியைப் பாங்குடனேதானினைந்து
இருப்புத்தடிதனையே இடதுகையில்தானெடுத்து
வலதுகையில்மந்திரவாள் வகையாகத்தானெடுத்து
வீரவாள்கொண்டல்லவோ வீசினனப்போது
இருதுண்டமாச்சுது இருப்புத்தடிதானும்
அப்போதுபலஜனங்கள் ஆக்கரித்துக்கொண்டார்கள்
இருந்ததொருஆரவல்லி இருப்புத்துண்டைதானெடுத்து
திராசினிறையாக தூக்கிவிட்டாளப்போது
துண்டமதுரெண்டு, துலாவில்சரிநின்றுதையா
ஆரவல்லியப்போது அடியக்காளேதங்கையரே
வெற்றிகொண்டானிப்போது, வேந்தன்காண்கண்டீரோ

இரும்புக்கடலையை எடுத்தாடி தங்கையரே
அப்போது தங்கையவள் அன்பாகஎடுத்துவந்தாள்
மன்னனுடபக்கலிலே மங்கையர்கள் வைத்தார்கள்
முன்னுகவைத்தார்கள் முழுவெள்ளைகடலையைத்தான்
அப்போது ஆரவல்லி ஆர்ப்பரித்துஏதுசொல்வாள்
இராஜசபையறிய நல்லதொருகடலையைத்தான்
உள்ளங்கையிற்றேய்த்து வொருகடலைபிசகாமல்
தேய்த்துவுமிபோக்கி தேசமன்னர்தானறிய
தந்ததேயுண்டானால் தார்வேந்தாவெற்றியென்றாள்
அப்போதுஅல்லிராஜன் ஆர்ப்பரித்துகொக்கரித்து
பண்டாரவிபூதியைத்தான் பாங்குடனே தானிறைத்து
இருப்புக்கடலையின்மேல் இதமாகத்தான்போட்டு
குதிரையின்மேலேறிக்கொண்டு கொற்றவனுமல்லிராஜன்
இருப்புக்கடலையைத்தான் இதமாகத்தானெடுத்து
தேய்த்தானுமப்போது சிதறுமளெவ்வளவும்
தேய்த்தவுடனே திறமாயுதிர்ந்ததுகாண்
ந்துதேயந்நேரம் பார்மன்னர்தானறிய
வெற்றிகொண்ட அல்லிராசன் வேந்தனென்றுசொன்னார்கள்
இருப்புக்களிச்சட்டி யெடுத்தாடி தங்கையரே
நல்லதுநல்லதென்று ரெட்டிபெண்கள்தானோடி
அப்போதுபெண்கள் அடைவாகத்தானெடுத்து
கொண்டுபோய்வைத்தார்கள் கொற்றவனார்முன்பாக
அந்நேரவேளையிலே அல்லிமுத்தேதுரைப்பான்
அல்லடிரெட்டிபெண்ணே அதுவிபரஞ்சொல்லுமென்றான்
அப்போதுஆரவல்லி அன்பாகவேதுசொல்வாள்
இந்தக்-களிச்சட்டுதிவலையை எள்ளளவுமில்லாமல்
சுரண்டியெடுத்தாளே தோர்வையில்லையென்றுரைத்தாள்
அப்போதுஅல்லிராஜன் மாயனையுந்தானினைந்து
கொக்கரித்துஆலைகொட்டி குதிரையின்மேலிருந்துகொண்டு
பண்டாரவிபூதியைத்தான் பாங்குடனே தான்போட்டு
களிச்சட்டிக்குள்ளே கனத்ததொருஆயுதத்தை
உள்ளறவேதிருப்பினான் உபாயமுள்ள அல்லிராஜன்
ஆயுதமுமப்போது அழகானதிவலையைத்தான்
எவ்வளவுமில்லாமல் எடுத்துலதையா ஆயுதமும்

எடுத்துமிகமன்னவனும் எதிராகத்தானிறைத்தான்
இருப்புத்திவலைகொண்டு ஏதுரைப்பார்பலஜெனங்கள்
வெற்றிகொண்டான்மன்னவனும் வேந்தனே அல்லிமுத்து
இருந்தசபையார்கள் எல்லோருஞ்சொல்லலுற்றார்
ஆரவல்லிப்பார்த்து அசந்துபோய்வெட்கிநின்றாள்
தங்கையைப்பார்த்து தார்குழலுமேதுசொல்வாள்
இன்னமூன்றுவிருதுகள் இருக்குதுமங்கையரே
வெட்கமென்னவந்ததடி வேல்பொருதுங்கண்ணாளே
ஆரவல்லியப்போது அல்லிராஜன்முகம்நோக்கி
மன்னவனைப்பார்த்து மறுவார்த்தையேதுசொல்வாள்
களிசட்டிதன்னை காவலனேயிப்போது
நுறுங்கவேநூற்றெட்டு நுறுக்கவேணுமடியுமையா
நூற்றெட்டுச்சிப்பிகளு னுறுக்கியபின்பாக
நிறையுமொருநிறையாய் நிற்கவேவேணுமையா
அப்படியிருந்தாலே அதுவெற்றியுன்னதென்றாள்
அப்போதுஅல்லிராஜன் அசுவத்தின்மேலிருந்து
ஆக்கரித்துவாளெடுத்து அடித்தானேசட்டிதனை
சபைகள்சபையறிய சாடினனல்லிராஜன்
இருப்புநல்லசட்டியை இதமாகநொறுக்கியதை
நொறுக்கியசட்டிதானும் நூற்றெட்டுகூறாச்சு
நூற்றெட்டுகூறுதனை நேராய்நிறுத்தார்கள்
இருந்ததொருசபையார்கள் இதமாகமெச்சிகொண்டார்கள்
அல்லிராஜாவெற்றியென் றனைவோரும்சொன்னார்கள்
ஆரவல்லிமுகம்சோர்ந்து அசதிமிகப்பட்டாளே
பாவையர்கள்முகங்களெல்லாம் பஞ்சடைந்துவருதையா
அப்போதுதங்கையரும் ஆரவல்லிமுகம்நோக்கி
மன்னவனைதோற்கடிக்க வகையதுதானிருக்க
துக்கம்வருவானே தோகையரேஆரவல்லி
காலனைத்தோற்கடிக்க கபடுகள்தானிருக்க
ஏங்கிமுகம்வாடி இருப்பானேனேந்திழையே
அப்போதுஆரவல்லி ஆலித்துமுகம்நோக்கி
வெற்றிகொண்டராஜாவே வேந்தரேகேளுமென்று
வீரமணிகம்பமொன்று விதரணமாயிருக்குதையா
அந்தநல்லகம்பத்தை அழகுள்ளமன்னவரே

வீச்சொன்ருயிருக்கவேணும் துண்டுமூன்ருகவேணும்
நிறையுமொருநிறையாய் நிற்கவேணும்ராஜாவே
என்றுசொன்னளாரவல்லி ஏற்கவேயல்லிராஜன்
குருவஞ்சிவாகனத்தைக் குலுக்கிஅசைத்துவிட்டான்
அதட்டியெழுந்திருந்து அசுவமதும்நடந்துதையா
கம்பத்தினருகாக வந்ததேநற்புரவி —
விபூதிபண்டாரம் மிதமாகத்தானெடுத்து
கம்பத்தின்மேலே காவலுந்தான்றூவி
பத்திரகாளியம்மனை பாங்காகத்தானினைந்து
எடுத்தானேயப்போது இன்பமுடன் தன்வாளை
வீச்சொன்ருய்வீசினன் துண்டுமூன்ருச்சுதையா
ஆரவல்லிதானு மப்போதுதான்பார்த்து
எடுத்தாடிதுண்டுகளை ஏற்றதொருதங்கையரே
துண்டத்தைவைத்து தூக்கிவிட்டாள்திராசிலேதான்
அன்பாய்நின்றதடை வாயொருநிறையாய்
இருந்துதையாஒருநிறையாய் எல்லோருங்கண்டார்கள்
கூடினசபைகளெல்லாம் கொற்றவனைவெற்றியென்ருர்
ஆரவல்லிதானும் அன்பாகத்தானுரைத்தாள்
வாருமையாசுவாமி வண்மையுள்ளராஜாவே
இன்னமொருபந்தயங்கள் இருக்குதையாராஜாவே
கோழிச்சாவலுக்கு கொற்றவனேயெதிராக
சாவலுக்கெதிராக தையலரைக்கொண்டுவாரும்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிவீரனேதுசொல்வான்
இதுதானேபந்தயங்க ளின்னமுண்டோசொல்லுமென
அப்போதுஆரவல்லி அடியேனுன்சொல்லுகிறேன்
விருதுகளொன்றுமில்லை வேறேயொருசூதுமாக
பந்தயங்களொன்றுமில்லை பார்வேந்தேயென்றுசொன்னுள்
அப்போது அல்லிராஜ னுலித்துயேதுசொல்வான்
எதிர்சாவல்கொண்டுவாறேன் ஏந்திழையேஎன்றுசொன்னன்
கூடாரம்வந்தல்லோ கொற்றவனுமுட்புகுந்து
புகுந்துமிகவல்லிராசன் புத்தியுள்ளமன்னவனும்
இந்திரர்க்குவுத்தரங்கள் எழுதியனுப்பவென்று
அல்லிராசனப்போது அடைவாகயெழுந்திருந்து
காலுமுகம்சுத்திபண்ணி கனிவாயுஞ்சுத்தமிட்டு

தென்னவனுமப்போது திருநீறுந்தானுமிட்டு
சிந்தித்துநின்று சிவனேயடிதொழுது
செங்கழுநீர்பூவெடுத்து சிவனேயடிதொழுது
துளசிமலரெடுத்து துதித்தானேமாயவரை
அன்பாகநின்று ஐவரையுமடிதொழுது
தோத்திரங்கள்பண்ணி திரௌபதியையடிதொழுது
பண்பாகநின்று பத்திரகாளியைவணங்கி
தேவேந்திரனைத் திட்டமுடன்தெண்டனிட்டு
இந்திரனைமன்னவனும் இயல்பாகவுச்சரித்து
ஓலையெடுத்து வுத்தமனுஞ்சூரிதன்னால்
வாயிருபுறமும் வகையாகக்கைபிடித்து
எடுத்துமிகவக்கணைகள் எழுதலுற்றான்மன்னவனும்
தேவேந்திரற்கு சிறப்புடையமன்னவனும்
பாண்டவர்களைவருக்கும் சிறப்புடையபேரனென்றான்
ஆரணங்குதுரோபதைக்கு அன்பானமருமகனன்
போர்மன்னரராசனுக்கு புத்திரனும்நானென்று
சங்குவதிநாயகிக்கு பிரியமானபாலகனன்
இந்திராணியம்மனுக்கு யேற்றதொருபேரன்காண்
சித்திராபுத்திரர்க்கு சீரானமைத்துனன்காண்
நெல்லூருபட்டணத்தில் நேரானசூதாட்டம்
சூதாட்டமாடவேதான் தோற்றமுடன்சாவலது
சாவலுக்கெதிர்சாவல் தயவாயனுப்புமென்று
தேவேந்திரனுர்க்குச் சீரானபேரனுந்தான்
நால்:-கெலிக்கும்படியாய் கிருபைவைத்தனுப்புமையா
செந்திரிக்கமுண்டுபண்ணி சீரானஓலைதன்னை
சுருளாகத்தான்சுருட்டிச் சந்திரனுமல்லிமுத்து
ஓலையுந்தான்கொடுத்து உத்தமனுமந்நேரம்
பறந்துதேயுலகம் பரலோகம்தானறிய
ஆகாயம்பறந்துதையா அண்டர்கோன்பக்கலுக்கு
வைத்துமடிமேலே மன்னனுடையயுத்திரத்தை
தேவேந்திரனும் சிறப்புடையயுத்திரத்தை
வாசகத்தைப்பார்த்தவுடன் மகனுரையழையுமென்றான்
சித்திரசேனனும் சிறப்புடையமேலோர்களும்
வந்துநின்றடிபணிந்து வாய்திறந்தேதுரைப்பான்

வாருமையாசுவாமி மன்னவருக்கதிபதியே
என்னையழைத்ததென்ன எனக்கறியச்சொல்லுமென்றான்
இந்திரனுமப்போது ஏதுரைப்பான்மைந்தனுக்கு
வாருமடாதம்பியரே வண்மையுள்ளதம்பியரே
தங்கைவளர்சங்குவதி தயவுடையபாலனவன்
சங்குவதிபெற்றெடுத்த தாஷ்டீகனுமல்லிமுத்து
ஆரவல்லிபட்டணத்தில் அன்பாகசூதுவெல்ல
வந்தானும்அல்லிராஜன் மகாசூதுதான்வெல்ல
பின்னுமொருசூது பிரபலமாய்வெல்லவென்று
கோழிச்சாவல்வேணுமென்று கொற்றவனும்ஓலைவிட்டான்
ஓலைகண்டநாழிகைக்கு யுற்றதொருசாவலுந்தான்
அனுப்பிவைக்கவேணுந்தம்பி அதாசூரவீரனுக்கு
நமகுமொருபேரன் நலமானஅல்லிமுத்து
உனக்கவன்மருமகன்தான் அன்பானஅல்லிமுத்து
சீக்கிரமாயனுப்புமென்று சீராகத்தானுரைத்தார்
இவர்சொல்தட்டாமல் அன்பானசித்திரசேனன்
தனனுடையசாவலைத்தான தகப்பன்முன்னேகொண்டுவந்து
அலங்கரித்துசாவலைத்தான் அன்பாகசூரிகட்டி
சாவலுக்குபதேசம் தயவாகசொல்லலுற்றான்
ஆகாயம்போகாதே அந்தரத்தில்செல்லாதே
தெனறிசைவடக்குதிசை திசைதப்பிப்போகாதே
மேல்திசைகிழக்கு மேலிற்பறவாதே
நெல்லூருபட்டணத்தில் நேரானஆரவல்லி
அவளுடையகோட்டையிலே அழகானஅல்லிராஜன்
இருக்கிறானவ்விடத்தில் இதமாகநீர்போய்
அல்லிராஜன்சொன்னபடி அடைவாகநீகேட்டு
வாருமடாவென்று வகையாயனுப்பிவிட்டார்
அப்போதுவருகுதையா ஆண்மையுள்ளசாவலுந்தான்
நெல்லூருதிசைநோக்கி நேராகவருகுதையா
பறநதுதான்வருகுதையா பாலனிடபக்கலுக்கு
வநதத்தேமன்னனபக்கல் வண்மையுள்ளசாவலுந்தான்
கூவிற்றுசாவல் கொக்கரித்துஅப்போது
கூவினசத்தம் கொம்பனையாள்சாவலுக்கு
நெஞ்சிலிடித்தாப்போல் நினைவுதப்பிப்போச்சுதையா

ஆரவல்லிசாவலுக்கு ஆண்மைகள்குலைத்ததையா
மற்றுமொருக்கால் மன்னனிடசாவலுந்தான்
கூவிற்றுஅந்நேரம் கொடிமுடியும்தானதிர
ஆரவல்லிசாவலுக்கு அடிவயிற்றைநோகுதையா
அந்தநல்லவேளையிலே ஆர்ப்பரித்துஅல்லிராஜன்
தேவேந்திரனுரைச் சீராகவடிபணிந்து
சாவலைக்கூப்பிட தயவாகவந்துதையா
அப்போதுஅல்லிராஜன் அதட்டியேகூப்பிட்டான்
ஆரவல்லிசூரவல்லி அதற்கேற்றவீரவல்லி
கொண்டாடிசாவலைத்தான் கொம்பனையேயென்றுரைத்தான்
அப்போது ஆரவல்லி அக்காளுந்தங்கையரும்
சாவலைத்தானெடுக்க தள்ளாடிவிழுந்துதையா
பதியங்கலம்பச்சரிசி பாங்குடனேவைத்தார்கள்
இனியென்னசெய்வோமென்று ஏந்திழையாளெல்லோரும்
கையைமெள்ளநெறிப்பாரும் கண்ணீரைவிடுவாரும்
மந்திரத்தைசெபிப்பாரும் மாயவித்தையிடுவாரும்
சூனியத்தைவிடுவாரும் தோர்வைவந்ததென்பாரும்
ஆரவல்லிவந்தல்லோ அதட்டியேமந்திரித்து
மந்திருக்கசாவலது அதுசற்றேயெழுந்ததுகாண்
அப்போதுசாவலது அடைவாகத்தின்னுமய்யா
தின்றுமெள்ளநீர்குடித்து தேன்மொழியைப்பார்த்துதையா
பார்த்ததைக்கண்டல்லவோ பாவையர்களப்போது
கத்திகளைத்தானெடுத்து கன்னியர்கள்கட்டலுற்றார்
கட்டினகாலும் கடுகெனவே நடந்துதையா
காலுரெண்டுமொண்டியையா கன்னியவள்சாவலுந்தான்
மொண்டிநல்லசாவலுந்தான் மூன்னடத்திவாருர்கள்
அரண்மனை விட்டுமல்லோ அப்புறம்வருகையிலே
மற்றுமொருக்கால் மன்னனுட்சாவலது
குரலிட்டுஅந்நேரம் கூவிற்றுசாவலது
அக்குரல்கேட்டு ஆரவல்லிசாவலது
மயங்கிவிழுந்துதையா மங்கையர்களெதிராக
அப்போதுமந்திரத்தை அதட்டியேமங்கையர்கள்
சொன்னார்கள்மங்கையர்கள் தோகைநல்லாளந்நேரம்
அந்நேரம்அல்லிராஜா அல்லிகொடியேதுசொல்வான்

கொண்டாடிசாவலைத்தான் கொம்பனையே ஆரவல்லி
விருதுகள்வெற்றிகொள்ள மெல்லியரேகொண்டாடி
இதுவேளை இதுசமயம் ஏந்திழையேகொண்டாடி
அப்போதுஆரவல்லி ஆனதொருசாவலுக்கு
நெஞ்சிலேகைபோட்டு நேராகத்தான்பிடித்து
தண்ணீர்கொண்டுவருகலுற்ருர் தாதியர்கள்நேரம்
கூடவேவந்துதையா கொம்பனையாள்சாவலுந்தான்
விட்டார்களப்போது வேந்தர்சபைநடுவே
சாவலுக்கெதிராக சபைகளெல்லாந்தானறிய
விட்டானேயப்போது வேந்தனுமல்லிமுத்து
எதிராகவேதான் அந்நேரஞ்சாவலைத்தான்
ஆரவல்லிவிட்டாளே யேந்திழையாள்மனங்களித்து
கன்னியுடசாவலது கனகவேமனமயங்கி
பின்னலேயோடிப் புறங்காலிலுதைத்ததையா
அப்போதுஅல்லிராஜன் அதட்டியேசாவலைத்தான்
பண்டாரந்தானெடுத்து பண்பாகத்தானினைத்தான்
அப்போதுமந்திரங்கள் அலறியேபோகுதையோ
மந்திரங்கள்போகவே மயங்கியேசாவலுந்தான்
பின்னுக்குநின்றுமே பிதறுதடிமங்கையரே
அப்போதுபலஜனங்கள் ஆரவல்லிசாவலைத்தான்
வெற்றிகொண்டானல்லிராஜன் வேந்தனென்றுதான்சொல்லி
அப்போதுஆரவல்லி அதுவெற்றிதான்கொண்டு
சாவலைத்தான்பிடித்து தள்ளிக்கொண்டுவந்தானையா
அப்பொதுசாவலுக்கு அடிவயிறுதான்குழம்பி
பிடிக்கப்பறக்குதையா பெண்ணணங்குசாவலது
மன்னனிடசாவலது மதமீறியந்நேரம்
ஆரவல்லிசாவலைத்தான் அதட்டியுதைத்ததையா
உதைத்தபோதல்லவோ உத்தமியாள்சாவலுந்தான்
ஈரல்குலையுமற்று யிருதுண்டமாச்சுது
அப்போதுபல்ஜனங்க ளெல்லோருந்தான்கூடி
குருகுலத்துமன்னவன்கொன்றுமே வெற்றிக்கொண்டான்
அப்போதுஆரவல்லி அழகுமனந்தான்சோர்ந்து
எண்ணுதுமெண்ணியே ஏங்கிமனந்தளர்ந்து
உருகிமனங்கலங்கி உத்தமியாளேதுசொல்வாள்

எழுதினதெப்படியோ யெழுதினவன் சொல்படியே
வந்தவந்தராஜாவை வாணளைத்தான்வதைத்து
தரணிமுழுதுந்தயவாக ஆண்டிருந்தோம்
பாலகனும்வந்த பார்மன்னன்தன்கையிலே
குழந்தையைப்போல்வந்த கொற்றவனார்தன்கையிலே
கைச்சுறைபட்டு கலக்கமும்பண்ணிவிட்டார்
அருமையறியவென்று ஆயனுரெழுதிவிட்டார்
நம்மாலேயென்செய்யலாம் நாயகமேதங்கையரே
மங்கையர்களப்போது மனக்கவலைதானுகி
இருக்குமந்தவேளையிலே ஏற்றதொருஅல்லிராஜன்
தேவேந்திரராஜன் சீராகவனுப்பிவைத்த
சாவலைத்தான்தேடி சந்தோஷமாகவேதான்
இந்திரனுர்பக்கலுக்கு ஏகுமென்றுமல்லிமுத்து
போமென்றனுப்பிவிட்டார் போர்மன்னர்மைந்தனுமே
குக்குடம்தானுமப்போ கொற்றவனுர்சொற்படிக்கு
பறந்துதையாசாவலுந்தான் பரலோகந்தானேக்கி
தெய்வலோகந்தன்னிற்போய் சேர்ந்துதையாசேவலுந்தான்
அல்லிராசனப்போது அன்பாகயேதுரைப்பான்
ஆரவல்லிசாவலைத்தான் அனைவோரும்பாருமென்றான்
பாங்காகப்போடச்சொன்னுர் பார்மன்னனப்போது
நல்லதென்றுகாவலர்கள் நலமாகத்தான்கேட்டு
அப்போதுஅல்லிராஜன் அடைவாகத்தான்பார்த்து
ஆளாலொருபங்கு அடைவாகயெடுங்களென்றார்
பட்டணத்துஜனங்களெல்லாம் பங்கெடுத்துப்போனுர்கள்
பனிரெண்டுநாள்சரியாச்சு பட்டணத்திலுள்ளவர்க்கு
சாவலைக்கொடுத்துவிட்டாள் தையனல்லாளாரவல்லி
அக்காளுந்தங்கையரு மனைவோருந்தான்கூடி
வாருமடிதங்கையரே மன்னவனுமிப்போது
வெற்றிகொண்டான்கண்டீரோ வேந்தனுமல்லிமுத்து
வெற்றிகொண்டமன்னவற்கு வேணபடிசெய்யவேண்டும்
அரண்மனையில்வாழும் ஆரணங்குபதிவிரதை
வைத்துவளர்த்துமே வன்மையுள்ளபெண்ணைத்தான்
வெற்றிகொண்டமன்னவற்கு வேணபடிசெய்வதற்கு
கொடுப்போமென்றுதான்பேசி கொம்பனைமார்நிற்கையிலே

மன்னவனுமல்லிராசன் மங்கையரைத்தான்பாாத்து
ஆரவல்லிசூரவல்லி அழகானவீரவல்லி
அக்காளுந்தங்கையரும் ஆண்டிருந்தபட்டணத்தை
வெற்றிகொண்டேன்கண்டாயோ வேந்தனுமிப்போது
பட்டணமும்நம்முதடி பரிவாரமும்நம்முதடி
சீமையும்நம்முதடி தேசங்கள்நமமுதடி
தோழியருந்தாதியரும் தோகையர்களெல்லோரும்
அடப்பங்கட்டிவாங்களடி அக்காளுந்தங்கையுமாய்
என்றுசொல்லிமன்னன் இதமாகத்தானுரைக்க
அப்போதுஆரவல்லி அன்பாகயேதுசொல்வாள்
வாருமையாசுவாமி வண்ணமுடிவேந்தரசே
வெற்றிக்கெலித்துக்கொண்டாய் விண்ணவர்கள்தானறிய
மெச்சினேனும்மை வெற்றிப்பெண்தாரேமையா
தங்கமுடிவேந்தே த்னஞ்செயரேயிப்போது
மாலையிட்டுத்தானும் மங்கிலியந்தான்தரித்து
கொண்டுபோவென்று கொம்பனையாள்தானுரைத்தாள்
அவ்வார்த்தைகேட்டு அல்லிராசன்தான்சிரித்து
ஏதடிபெண்ணரசே ஏழைமதிபோனயோ
சொன்னசபதங்கள் தோகையரேயிப்போது
மதிகெட்டுப்பேசுகிருய் மங்கையரேயிப்போது
தோர்வையும்வந்தென்ருல் சொல்படிகேளாமல்
வார்த்தைதப்பிபேசுகிருய் மங்கையரேயிப்போது
அப்போதுஆரவல்லி அடியேனன்செய்தகுற்றம்
பொறுக்கவேணுமென்பது பூவையர்களெல்லோரும்
அடிபணிந்துதெண்டனிட்டாள் ஆசாரம்போற்றிநின்ருள்
வெற்றிபெண்கொடுத்தாலே வெற்றியதாச்சுதையா
சீமையெழுகடலுந் தென்னவனேவெற்றியென்று
பேருகளுந்தானிருக்கும் பெருமைகளுமுண்டாகும்
நீடூழிகாலமெல்லாம் நீணிலத்தில்பேராகும்
பாரதமாயெங்கும் பண்பாயிருக்குமையா
என்றுசொல்லிபெண்களெல்லாம் இயல்பாயுரைத்தார்கள்
அப்போதுஅல்லிராஜன் ஆரவல்லிதன்னுடனே
ஏதுரைப்பான்அல்லிராஜன் ஏற்றதொருமங்கையுடன்
நீகற்றதொருவித்தையெல்லாம் காரிழையாள்கற்றிருப்பாள்

வஞ்சனை சூனியமும் வாய்த்ததொருபில்லிகளும்
கற்றிருப்பாளுன்மசளும் கன்னியவள்பல்வரிசை
எங்களுக்காகாது ஏற்றதொருமன்னவர்க்கும்
குருகுலத்துமன்னவர்க்கும் கொற்றவர்க்குமாகாது
எள்ளளவுமனவுகண்டால் எங்களுக்காகாது
இவ்வார்த்தைதானும் எடுத்துரைத்தான்மன்னவனும்
அப்போதுபெண்களுந்தான் அடைவாகயேதுரைப்பார்
மன்னவனே சுவாமி மதியுள்ளதுரையேநீ
பாவையர்கற்றவித்தை பல்வரிசைதானறியாள்
நிலவறையிலிருந்து நேராகத்தான்வளர்ந்தாள்
சூரியனைக்கண்டதில்லை தோகையவள்பல்வரிசை
அம்பலத்தேவந்ததில்லை அரசர்களைக்கண்டதில்லை
அழகில்மிகுந்தவள்தான் ஆரணங்குபல்வரிசை
பூவையரைப்போல பூவுலகில்கண்டதில்லை
இராசாவுக்கேற்ற இரம்பையவள்பல்வரிசை
அப்போதுஅல்லிராஜன் அன்பாகயேதுரைப்பான்
மந்திரங்களில்லையென்று வண்மையுள்ளபூவையரே
இந்தச்சபையறிய எடுத்துரைக்கவேணுமென்றான்
சத்தியமாகவே சபைநடுவேசொல்லலுற்றார்
அரனருந்தானறிய ஆயருந்தானறிய
இந்திரனார்தாமறிய இமையவர்கள்தாமறிய
ஒன்றுமறியாள்காண் உற்றதொருபல்வரிசை
என்றுதான்சொன்னாளே ஏற்றதொருசபைநடுவே
அந்தவிசேஷம் அறிந்துகொண்டுஅல்லிராசன்
பல்வரிசையென்பவளை பாங்குடனேயிப்போது
கூப்பிட்டுவாடி கொம்பனையாளாரவல்லி
என்றுசொல்லமன்னவனும் ஏற்றதோராரவல்லி
தயவாகக்கேளுமையா தையலும்நான்கூறுகிறேன்
கலியாணஞ்செய்து கனகப்பிரியமுடனேதான்
பந்தலும்போட்டு பாங்காயலங்கரித்து
மணவரையும்போட்டு வகையாயலங்கரித்து
அரசாணிநாட்டில் ஆனதொருமணவரையில்
மாப்பிள்ளையும்பெண்ணையும் மணமிட்டலங்கரித்து
கைக்கோர்வையிட்டு காட்சியாயலங்கரித்து


மாலைமணம்பூண்டு மங்கிலியந்தான்தரித்து
நாகவல்லிசெய்து நலமாகஇப்போது
மஞ்சள்நீராடி மாப்பிள்ளைக்குச்சனங்கள்
கொடுத்தனுப்பவேணுமையா கொற்றவனேராசாவே
இந்தவிசேஷம் இதமாகத்தான்கேட்டு
அல்லிராஜாவும் அன்பாகயேதுசொல்வான்
வாருமடி ஆரவல்லி வார்த்தைசொல்லகேளுமடி
எந்தனிடகுருகுலத்தில் ஏற்றதொருராஜாக்கள்
குருகுலத்துராஜமன்னர் கொற்றவர்காணுமல்
மாமன்மார்காணுமல் மாமியாரறியாமல்
மாப்பிள்ளைகோலம் மாமன்மாரறியாமல்
மங்கிலியங்கட்டினது மைத்துனமாரறியாமல்
சங்கீதப்பெருமைதன்னை தகப்பனுரறியாமல்
உலகமறியாமல் ஒருத்தருங்காணுமல்
கலியாணமுடிப்பதில்லை கன்னியரே ஆரவல்லி
தர்மரிடம்போயல்லவோ தரணியிலொளியாமல்
விவாகம்முடிப்பேண்டி வீரவல்லிஆரவல்லி
அப்போதுஆரவல்லி அக்காளுந்தங்கையுமாய்
விவாகமுடித்தல்லோ வெற்றிகொள்ளவேணுமையா
கல்யாணம்பண்ணியல்லோ காவலனேயிப்போது
கொல்லுவோமென்றிருந்தேன் கொம்பனையேதங்கையரே
கன்னிகையில்சிக்காண்டி காவலனுமப்போது
சூதுக்குச்சிக்காண்டி துரைமகனுமிப்போது
அல்லிராஜாஅப்போ ஆரணங்கைத்தான்பார்த்து
வாய்மிரட்டியரசாண்டாய் வகையற்றரெட்டிபெண்ணே
என்னையுமப்படிக்கு எண்ணிக்கொண்டேயேந்திழையே
என்று-சொல்லிசிலஜனங்களிட கட்சியாய்சொல்லுவார்கள்
வந்ததொருமன்னவனும் மனதிலேகொஞ்சமதாய்
என்னுயிரேயேந்திழையே எடுத்தாடிபெட்டியைத்தான்
எடுத்துவந்துஆபரணம் ஏந்திழைக்குப்பூட்டலுற்றார்
மார்பில்பதக்கமும் வயிரமணித்தாழ்வடமாம்
ஆரணங்குதன்கழுத்தில் அழகானசிந்தாக்கும்
பத்துவிரலுக்கும் பசும்பொன்னுல்மோதிரம்
கொப்பிட்டாள்வாளியிட்டாள் கொந்தளபொன்ஓலையிட்டாள்

அற்புக்கடையாளம் அணிவளையல்பொன்றலே
உத்தரியபொற்பதக்கம் ஒளிவுள்ள்தாவடமும்
சித்திரமுகப்புள்ளுஞ் சிந்தாக்குத்தாவடமும்
முன்கைக்குமுதாரி முழக்கடைமோதிரமும்
அந்தமுள்ளகால்களுக்கு அழகான்பாடகமும்
விந்தையுள்ளதண்டைகளு மேசிலம்புதானுமிட்டு
காலாழிபீலாழி கனகரத்தினமோதிரம்
ஒட்டியாணங்கட்டி உயர்ந்தயிடையிருக்கும்
ஏழாயிரம்பொன்பெற்ற இந்திரநீலபட்டுடுத்தி
வாலைப்பிராயமுள்ள மங்கைத்திருவையற்கும்
இன்னமுண்டுஆபரண மேந்திழைக்குபூட்டிவித்து
எண்ணிமுடியாது எடுத்துரைக்கக்கூடாது
சித்தம்டிமங்கையரே சிங்காரஞ்செய்தபின்பு
எலுமிச்சங்கனியும் இதமாகத்தானெடுத்து
மல்லிகைப்பூசெண்டெடுத்து மறவாமல்தான்கொடுத்து
பல்வரிசைஅடிமடியில் பாங்காகவைக்கச்சொல்லி
பூவையற்குபுத்திசொல்லி போதவேதானுரைத்தார்
அல்லிராஜாஉன்கணவன் ஆனதொருபெண்திருவே
உன்னை-மன்னவனிப்போது மாலையிடவேணுமென்று
தர்மாபுரந்தானேக்கி தயவாகயிப்போது
உன்னையுங்கூட்டி யுற்றதொருநாயகனும்
போதப்பயணமதாய் பொற்கொடியேநிற்கின்ருர்
மன்னவனும்போர வழியிலேதண்ணீரியென்று
கேட்டதேயுண்டானல் கிளிமொழியேபெண்திருவே
நீ-வழியிற்றடாகமது வனந்தனிலேகணடதில்லை
தவனமென்றுகேட்டானுல் தாகவிடாய்தான்தீர
மடியிலிருக்குமந்த மல்லிகைப்பூசெண்டெடுத்து
மன்னவன்கையிலே மனமகிழ்ந்துநீகொடுத்தால்
கண்ணிலேயொற்றினல் மயக்கமதுவுண்டானல்
மற்றுமொருக்கால் மயக்கமதுவுண்டானல்
எலுமிச்சங்கனியெடுத்து இதமாகச்சார்பிழிந்து
உள்ளுக்குவாங்கினல் உற்றதொருதாகமது
நிற்குமடிபெண்திருவே நிச்சயமாய்நீகொடுத்தால்
என்றுபுத்திசொல்லி இதமாகபெண்களுந்தான்

கூடியேவாருர்கள் நாணயங்கள் தானுக
நடத்தியேவாருர்கள் கெர்ம்பனேமார்தானுக
பல்வரிசைநடுவாக பாங்கியர்கள்சுத்திவர
கூட்டிவந்தாரந்நேரம் கொற்றவர்முன்பாக
அல்லிராஜன்முன்பாக ஆரணங்கைவிட்டார்கள்
அப்போதுஅல்லிராஜன் அன்பாகத்தான்பார்த்து
மனதில்நினைத்தானே மன்னவனும்யோசனைகள்
பெண்தாரேனென்று ஆரவல்லிபிரியமுடன்தானுரைத்தாள்
சொன்னசொல்தவருமல் தோகையருமாரவல்லி
கொண்டுவந்துவிட்டாளே கொம்பனையாளிப்போது
வஞ்சகமில்லையென்று மன்னவனுந்தானினைத்தான்
பின்னுமொருயோசனைகள் பிரபலமாய்த்தானினைந்து
சபைகள்சபையறிய சத்தியமுஞ்சொன்னுர்கள்
என்றுமனதிலே எண்ணினுர் மன்னவனும்
பல்வரிசைபெண்ணணங்கே பார்த்தானேபாலகனும்
பார்த்தவுடன்மன்னவர்க்கு பைங்கிளியாள்தன்வடிவு
மயக்குதேயன்னேரம் மன்னவரைநினைவுதப்ப
பண்டாரந்தான்மறந்தான் பைங்கிளியைக்கண்டவுடன்
ஆலவாய்நீருதன்னை அடைவாகத்தான்மறந்தான்
ஆரணங்கைக்கண்டவுடன் அறிவுவேருச்சுதையா
மயக்கத்தினுலே மன்னவனுமப்போது
ஆரவல்லிதனைப்பார்த்து அம்மாடிபெண்திருவே
பெண்ணையனுப்பிவிடு போய்வாறேனென்றுரைத்தான்
அப்போதுஆரவல்லி அதுவேகருமமென்று
பல்வரிசைதனைவளர்த்த பைங்கிளியாளந்நேரம்
போய்வாடிமகளேயென்று புத்திமதிதானுரைத்து
மன்னவனுநீயுமாய் மகராசிவாழ்ந்திருக்க
வாழ்த்திவிடைகொடுத்து மங்கையரைத்தானனுப்பி
போற்றிவிடைகொடுத்து பூவையரையனுப்பிவிட்டாள்
அப்போதுபல்வரிசை அன்புடனேதானும்
அடிவணங்கிதெண்டனிட்டு ஐயாவேபோங்களென்ருள்
குதிரையைவிட்டிறங்கி கொம்பனையைமேலேற்றி
அஸ்வத்தின்மேலேறி ஆனதொருமன்னவனும்
குதிரைமேலேறி கொற்றவனுமுன்னுக

நான்போய்வாரேனம்மா நல்லதுணையெந்தனுக்கு
போய்வாடிமகளே புத்தியுள்ளமன்னன்பின்னே
இறக்கடித்துப்போட்டு என்கிட்டநீவருவாய்
கணவனை இறக்கடித்து கன்னியரேநீவருவாய்
ஆரவல்லிஇவ்வார்த்தை அவளுரைக்கும்வேளையிலே
மன்னவர்க்கும்கன்னியற்கும் மாருட்டமாயிருந்ததுகாண்
இருந்துமயக்கமிஞ்சி இருக்குமந்தவேளையிலே
மயக்கந்தெளிந்து மன்னவர்க்குநினைவாகி
குதிரையைமெல்ல குதிகாலில்தட்டினான்
தட்டினபோது தார்வேந்தன்புரவியது
தர்மாபுரம்நோக்கி இடம்பார்த்துவந்துதைய்யா
பறந்துநன்றாய்வருகையிலே பண்பானகானகத்தே
மன்னவற்குமயக்கம் வந்துதையாநடுவழியில்
அசுவத்தைநில்லுமென்று அன்பாகத்தானுரைத்தான்
அப்போதுஅஸ்வமது அன்பாகநின்றுதையா
கொற்றவனுமப்போது குதுரையைவிட்டிறங்கி
பல்வரிசைதனை பாங்குடனேயிறக்கிவிட்டு
பூமியில்தானிறங்கி புண்ணியனரப்போது
இருக்குமந்தவேளையிலே ஏந்திழையாள்மந்திரங்கள்
ஆரவல்லிமந்திரங்கள் அடைவாகமன்னவனை
சூனியங்களப்போது துரைமகனைசூழ்ந்துதையா
உரோமங்களெல்லாம் நுழைந்துதையா அன்னேரம்
மயங்கியேயந்நேரம் மங்கையரைத்தானழைத்து
பல்வரிசைபெண்ணணங்கை பண்பாகத்தான்பார்த்து
உடல்சோர்ந்துவருகுதடி உத்தமியேபல்வரிசை
தண்ணீருக்குத்தவிக்குரண்டி தாகவிடாயாகுதடி
என்றுசொல்லுமவ்வளவில் இதமானபல்வரிசை
மல்லிகைப்பூசெண்டெடுத்து மன்னவனுர்கைகொடுத்தாள்
அப்போதுஅல்லிராஜன் அடைவாகத்தான்வாங்கி
முகத்தோடேமுகம்வைத்து முகந்தானேயந்நேரம்
பூச்செண்டைமுகர்ந்தவுடன் புண்ணியர்க்கந்நேரம்
விடவிடத்தந்நேரம் வெகுமயக்கமாச்சுதைய்யா
கன்னியரைத்தான்பார்த்து கட்டழகனேதுரைப்பான்
மயக்கமெத்தவாகுதடி வல்லுருபோகுதடி

இரத்தின்கம்பளியை நலமாகவிரியுமென்றான்
புன்னியமரத்தடியில் பொற்கொடியாள்தான்விரித்தாள்
கம்பளியைந்தான்விரித்து கணவனைத்தானழைத்தாள்
அப்போதுஅல்லிராஜன் அடைவாகத்தான்வாங்கி
நீடந்துவந்தமன்னவனும் இரத்தின்கம்பளிமேலிருந்தான்
இருந்ததொருமன்னவனும் ஏதுரைப்பானந்நேரம்
பெண்ணணங்குபல்வரிசை பூவையரேகேட்டருள்வாய்
கொஞ்சுங்கிளிமொழியே கோண்தயரேபெண்மயிலே
மானும்மயில்போல மங்கையரேஉன்னைவிட்டும்
நான்போறேன்சிவலோகம் நாயகியேயென்றுரைத்தான்
அப்போதுபல்வரிசை அடைவாகயேதுரைப்பாள்
வாருமையாசுவாமி வன்மையுள்ளதுரைமகனே
சிவலோகம்போகவந்த சேதியென்னசொல்லுமையா
என்றுரைத்தபல்வரிசை யிதமாகக்கேட்கையிலே
மன்னவனுமப்போது மறுவார்த்தையேதுசொல்வான்
தண்ணீர்க்குதவிக்குறண்டி தாகவிடாய்மெத்தவென்றான்
பல்வரிசையப்போது பாங்குடனேபழங்கொடுத்தாள்
மன்னவனும்வாங்கி வகையாகச்சார்பிழிந்து
பிழிந்ததொருரசத்தை புண்ணியனுந்தான்குடித்தான்
நஞ்சுகள்தானும் தன்மயக்கம்வந்துதையா
உடம்புவெடுவெடுத்து உள்ளுயிரை வாங்குதையா
பூமியேதன்னுடைய பொய்க்கூட்டைதான்போட்டு
ஆகாயம்போனரே அண்டர்கோன்சபையறிய
அல்லிராஜாசொரூபம் அடைவாகநின்றுகொண்டு
சிறுபிள்ளைதன்னுடனே சேர்ந்துவிளையாடலுற்றான்
தெய்வலோகம்குடியாக சேர்ந்தானே அல்லிராஜன்
அப்போதுபல்வரிசை அடைவாகஅழுகலுற்றாள்
மன்னவனேஎன்னைவிட்டு வானுலகம்சேர்ந்தீரோ
வெற்றிகெலித்து விருதுகள்வென்றதும்
சூதுகெலித்து சூனியத்தைவென்றதும்
உந்தனிடபட்டணத்தில் ஒருவரறியாமல்
தந்தையறியாமல் தனிவழியிலிறந்துவிட்டீர்
என்னைநடுகாட்டில்விட்டீர் கணவனேயென்றுரைத்தாள்
தண்ணீயில்லாதாமரைபோல் தயங்கிமனம்வாடுகிறேன்



என்னைக்கெடுக்கவென்று எத்தனைநாள் தவமிருந்தீர்
ஆருமறியாமல் அறையிலே பெண்வளர்ந்தேன்
தலையிலெழுத்தோ தலைநாட்டான்சொற்படியோ
பிள்ளையென்றுதான்வளர்த்த பெற்றதாயார்கையாலே
மகளைக்கெடுக்கவென்று மங்கையும்நினைப்பவளோ
எந்தனையுங்கொள்ளாமல் என்கணவனை தான்மடித்தார்
கணவனுடன்சாகாமல் காரிகையும்நின்றுவிட்டேன்
மணவாளனென்றுசொல்லி மங்கையருந்தொடர்ந்துவந்தேன்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்பலுற்றாள்
விழுந்துபுரண்டழுதாள் மேலானபல்வரிசை
மார்பிலடித்துக்கொண்டு மங்கையருந்தானழுதாள்
மட்டற்றகண்ணீரை மார்போடேசோரவிட்டாள்
அழுதுபுலம்பி அந்நேரம்ஏதுசொல்வாள்
கட்டழகாயெந்தனுக்கு கலியாணஞ்செய்தபின்பு
கூட்டாயிருக்காமல் செத்துமடிந்தீரோ
சத்ராதிஆரவல்லி சதிபண்ணிகொன்றுவிட்டாள்
அப்படிசெய்ததொரு ஆரணங்குபெண்டுகளை
அக்காளும்தங்கையரும் ஆண்டிருந்தபட்டணமும்
பட்டணத்திலுள்ளதெல்லாம் பாழ்காயிறக்கடிக்க
எமலோகம்போனஎன் கணவன்பிறந்துவந்து
ஆரவல்லிபட்டணத்தை அழித்துசிறைபிடித்து
ஈடழித்துப்போட்டு என்னைமணம்புரிந்து
கொண்டுபோகவேணுமையா கோதைபங்காயென்றுசொல்லி
அரியுஞ்சிவனையுந்தான் அன்பாகதானினைந்தாள்
பஞ்சணையின்மேலே பைங்கிளியாள்தானிருந்தாள்
உற்றாருறன்முறையார் ஊரிலுள்ளஜனங்களெல்லாம்
தந்தைதாய்மக்கள் சகோதரர்சேனையெல்லாம்
கண்டுகளித்து கட்டழகாபோகாமல்
எப்படிப்பிரிந்து சிவலோகம்போனுயோ
என்னுலொருஎண்ணமில்லை என்றாளேஏந்திழையாள்
மண்ணுய்ப்போனவானம் வெள்ளைப்பிடித்தாற்போல்
ஒருவரறியாம லுற்றவனந்தனிலே
ஆருமறியாமல் அத்வானகானகத்தே
போகவும்வேணுமோ புண்ணியனேவுன்ஜீவன்

எழுதிவிட்ட தன்குறையோ ஏதொன்றும்நானறியேன்
அப்போதுபல்வரிசை அடைவாகயெழுந்திருந்து
மன்னவனைப்பிரட்டி மங்கையருந்தான்பார்த்து
ஏனையாசுவாமி ஏந்திழையாளழுகிறது

### இறந்துபோன அல்லிராஜனுக்குப் பல்வரிசை புலம்பல்

பெண்ணாள்புலம்புவது பெருமாளறியாயோ
மங்கையழுகிறது மகாதேவரறியாயோ
நான்படுந்துயரமெல்லாம் நாயகனேயுன்செவியில்
கேட்கிலேயோவுன்செவில் கிருபைக்கடலோனே
என் துயரங்கேட்டு ஈஸ்வரரேதானிறங்கி
மங்கியப்பிச்சையது மடிபிச்சைதந்தாலே
உன்மனதுகல்லோ ஈஸ்வரரேதஞ்சமென்றாள்
இப்படியாகவெண்ணி ஏந்திழையாள்புலம்புகையில்
ஆண்டாண்டுதோறும் அழுதாலும்பூமியிலே
மாண்டிறந்துபோனவர்கள் வருவதில்லையென்று
சவத்தைஎடுத்தடுக்க தரணியிலொருவரில்லை
சாதிஜனமிருக்க தன்னந்தனிகாட்டில்
மக்கள்மறுகிருக்க வனத்திலிவர்மாண்டாரே
தாய்தகப்பன்தானிருக்க தனிப்பிணமாய்நின்றாரே
நாய்நரிகள்தானிருக்க நலமாகதின்னுமென்று
பார்மன்னன்தன்தலையில் பாங்காகஎழுதினீரோ
எழுதினஎழுத்தையல்லோ இன்னதென்றுநானறியேன்
உன்னையடுத்து இவ்விடத்திலடைக்கவையா
என்னாலேயாகுமோதான் எனக்கிசைந்தமன்னவனே
ஆரென்பாரொருவரில்லை அத்வானகாட்டிலேதான்
இப்படிக்குச்சொல்லி ஏந்திழையாள்தானழுதாள்
நான்-பெண்ணாய்பிறந்ததுமே பேருலகிலுந்தனுக்கு
ஆதரவுமில்லாமல் அலைந்துதவிக்கிறேன்காண்
பார்க்கபயமாகுதுகாண் பத்தாவேயென்றழுதாள்
ஆரைநம்பிநானிருப்பேன் ஆரணியவனத்திலேதான்
ஊரைநான்போனாலே ஊரிலுள்ளபெண்களுந்தான்
பத்தாவைகொன்றுவிட்டு பாபியிவள்வந்தாளென்று
என்னீடுபெண்களெல்லா மேசுவாரேமன்னவனே

பேடை மயில்போலே பிரண்டுவிழுந்தாளே
தனியாகநின்று தலைமேலேகையைவைத்து
அலுத்துசலித்துமல்லோ ஆரணங்குதானழுதாள்

பல்வரிசை கணவனை விட்டு தாய்வீடு வருதல்

மன்னவனை விட்டகன்று மங்கையருந்தானெழுந்து
உருண்டுமனம்வாடி உத்தமியாள்நடக்கலுற்றாள்
நடந்தாளேபல்வரிசை நாயகனை விட்டகன்று
தடம்பார்த்துபல்வரிசை தனிவழியேநடக்கலுற்றாள்
வந்ததடம்பார்த்து மன்னவனை விட்டகன்று
போறாளேபல்வரிசை பொற்கொடியாள் மனை நோக்கி
ஆரவல்லியந்நேரம் அக்காளுந்தங்கையுமாய்
கோபுரத்தின்மேலேறி கொம்பனையாள்பார்க்கலுற்றாள்
அந்தநல்லவேளையிலே ஆரணங்குபல்வரிசை
வாறாளேபெண்திருவும் வாடி முகஞ்சோர்ந்து
கண்டாளே ஆரவல்லி கன்னிகையன்னேரம்
சந்தோஷமாகவே தயவாகபெண்களுந்தான்
கோபுரத்தைவிட்டுமல்லோ குதித்திறங்கியோடிவந்து
மகள்வாரவழிதனிலே மங்கையர்களோடிவந்து
கண்ணீரைத்தான் துடைத்து கனிவாயைமுத்தமிட்டு

ஆரவல்லி பல்வரிசையாகிய தன் மகளுக்கு
சமாதானங் கூறல்

புலம்பிவந்தஞாயமேன் பொற்கொடியேசொல்லென்றாள்
அப்போதுபல்வரிசை அடைவாகயேதுசொல்வாள்
கணவனும்நானுமாக கானகத்தில்போனதுவும்
மன்னவனும்மதிமயங்கி மறுவார்த்தையுரைத்ததுவும்
தண்ணீர்தாகமென்று தயவாகக்கேட்டதுவும்
மல்லிகைப்பூசெண்டெடுத்து மன்னன்கைகொடுத்ததுவும்
எலுமிச்சம்பழமெடுத்து இதமாகக்கொடுத்ததுவும்
மன்னவனும்தான்மயங்கி வானுலகஞ்சேர்ந்ததுவும்
அப்போதுபல்வரிசை அந்தவகைசொன்னபின்பு
ஆரவல்லியப்போது அக்காளுந்தங்கையுமாய்
மன்னவனைக்கொன்றோமடி மறுவெற்றிபெற்றோமடி
தம்மைப்போலேயல்லோ ராஜ்ஜியத்தில்பெண்களில்லே

பல்வரிசை பெண்ணுளுக்குப் பண்பாகப்புத்திசொல்லி
எந்தன்மகளாரே யென்களஞ்சியமேகண்மணியே
பொன்னின்மணியேயென் பூவையரேபல்வரிசை
வந்தவொருமன்னவனும் வாளுளிறந்தானே
மன்னனுஞ்செத்து வானுலகஞ்சேர்ந்தானே
நமக்குவெற்றியது நாயகியேஉண்டாச்சு
உன்-மனதுக்குயெள்ளவும் உறக்கமதுதான்வேண்டாம்
மனதுசலியாதே மங்கையரேபல்வரிசை
உனக்குநானின்னம்வேறே உலகத்தில்மன்னவரை
தேடிப்பிடித்து திருக்கலியாணம்பண்ணுகிறேன்
ஏதுக்குமஞ்சாதே ஏந்திழையேயென்றுரைத்தாள்
நிலவரமாளிகைக்கு நீதியுடன்நடத்திவந்து
புத்திமதிசொல்லிப் போனார்கள்பெண்களுந்தான்
அப்போதுபல்வரிசை அடைவாயெழுந்திருந்து
கதவைமிகச்சாற்றி கனக்கவேதாள்பூட்டி

### பல்வரிசை சிவனைத் தியானித்து தோத்திரம் செய்தல்

சிவனைமிகநினைத்து நிந்தித்துதானழுது
மாயவனைத்தானினைந்து மனக்கவலையாயழுது
ஆரவல்லிபண்ணிவைத்த அவகேட்டைதானினைந்து
புருஷனைக்கொன்றுவிட்ட பெரும்பாவியானேயென்று
அழுதுபுலம்பி ஆரணங்கு அந்நேரம்
மற்றுமொருக்கால் மகாதேவரைதெண்டனிட்டு
சிந்தித்துநின்று சிவனையடிதொழுது
அர்ச்சித்துநின்றுமவள் ஆயனையடிவணங்கி
வந்தவொருமன்னவனும் வாகானவென்கணவன்
விருதுகெலித்து வெற்றிகொண்டுபோறவனை
சத்ராதிஆரவல்லி சதிபண்ணிக்கொன்றுவிட்டாள்
அப்படிச்செய்தவொரு ஆரணங்குபெண்டுகளை
அக்காளுந்தங்கையரும் ஆ[illegible]டிருந்தபட்டணத்தை
பட்டணத்திலுள்ளதெல்லாம் பாங்காயிறக்கடித்து
எமலோகம்போனவொரு என்கணவன்பிழைத்துவந்து
ஆரவல்லிபட்டணத்தை அழித்துச்சிறைபிடித்து
ஈடழிந்துபோட்டுமவர் என்னைமணம்புரிந்து

கொண்டுபோகவேணுமையா கோதைபங்காவென்றுசொல்லி
அரியுஞ்சிவனையும் அன்பாகத்தான்வணங்கி
பஞ்சணைமெத்தையின்மேல் பைங்கிளியாள் தானிருந்தாள்
அந்தநல்லவேளையிலே அல்லிராஜனருகாக
இருந்ததொருஅசுவ மிதமானநற்புரவி
மாண்டவரைப்பார்த்து வல்லூருபுரவியுமாய்
நாமிரண்டுபேரும் இங்கிருந்தோமானாலே
ஐவருக்குஞ்சேதிதன்னை அறிக்கையிடவேணுமேதான்
பஞ்சவர்க்குச்சேதி பரிவாகநான்சென்று
சொல்லிவருகிறேன் தொல்புவியிலின்னேரம்
பூச்சுபுழுக்களது பிணத்தைத்தொடாதபடி
காருமென்றுசொல்லியது கார்மேகநற்புரவி
அப்படியேகார்ப்போமென்று அன்பாகத்தானுரைக்க
பாவிகள்வந்தாலும் பத்திரமாய்நான்கார்ப்பேன்
என்றுசொல்லிவல்லூரு இதமாகத்தானுரைக்க

### அசுவம் பஞ்சவர்க்குச் சேதி சொல்வது

அப்போதுஅசுவமது அன்பாகப்பறந்துதையா
தர்மாபுரம்நோக்கி தடம்வழிபோகுதையா
வனமாய்வனந்தாண்டி வாகனநற்புரவி
ஐவர்பக்கம்வந்துதையா அசுவமதுஅன்னேரம்
கார்மேகநற்புரவி கடுகியேவருகுதையா
தர்மாபுரம்புகுந்துதையா தார்வேந்தர்நற்புரவி
ஐவர்சபைநடுவே அசுவமதுவந்துதையா
அப்போதுஅசுவமது அன்பாகயேதுரைக்கும்
நெல்லூருதிசைநோக்கி நேராகபோனதுவுஞ்
சூதுகள்வென்றதுவும் சூனியத்தைக்கொன்றதுவும்
விருதுகள்வென்றதுவும் வெற்றிகொண்டுமீண்டதுவும்
வாரவழிதனிலே வல்லுயிருபோனதுவும்
அப்போதுபஞ்சவர்கள் ஆர்ப்பரித்துகொக்கரித்து
ஆயுதங்கள்தானெடுத்து அவரவர்கள்கொக்கரித்து
நெல்லூருதிசைநோக்கி நேரர்கவருகலுற்றார்
ஆரவல்லிபட்டணத்தை அடைவாகதிசைநோக்கி

### பஞ்சவர்கள் படையெடுத்து நெல்லூருக்கு வருதல்

முடுக்கினர்தேரையும் முன்னூற்றுகாதவழி
எதிர்பட்டமரங்களெல்லாம் இலவப்பஞ்சாகுதையா
வனமாய்வனந்தாண்டி வன்மையுள்ளபஞ்சவர்கள்
நெல்லூருபட்டணத்து நேரானயெல்லையிலே
போய்புகுந்தார்பஞ்சவர்கள் போர்வேந்தரப்போது
அப்போது ஆரவல்லி அக்காளுந்தங்கையுமாய்
வருவதைக்கண்டாளே வல்லுவானபெண்களுமே
அப்போதுமந்திரத்தை அடைவாகயுச்சரித்து
கல்லாச்சமைத்தார்கள் காவலருந்தேருகளும்
தேருகள்மலைபோல திரமாகநிற்குதையா
நிற்குமந்தவேளையிலே நேரானபுரவியது
மதகிரிபட்டணத்து மதகிரியான்பக்கலுக்கு
போர்மன்னன்பக்கலுக்கு புதுமைசொல்லவேணுமென்று

### அசவம் சங்கவதியம்மனுக்கு சேதி சொல்லுவது

சங்கதிநாயகிக்குத் தார்வேந்தன்சேதிசொல்ல
அசுவத்தைக்கண்டாளே ஆனதொருசங்கவதி

### சங்கவதி புலம்பல்

முகம்சோர்ந்துமெய்மறந்து முகத்தோடறைந்துகொண்டாள்
மகனேமகனேயென்று மார்மேலறைந்துகொண்டு
என்மகனேயல்லிராஜா எங்கேநீபோனயென்று
காணிக்குப்பிள்ளையென்று கருதிவளர்த்தேனே
குழந்தையென்றுநான்வளர்த்தேன் கொற்றவனேபோனயோ
வெற்றிகெலித்தவும் விருதுகள்பலித்ததுவும்
சூதுகள்கெலித்ததுவும் சூனியத்தைவென்றதுவும்
மீண்டுவந்துசொல்லாமல் வேந்தனேபோனயோ
நடுகாட்டிலிறந்துவிட்டாய் நல்லதொருயென்மகனே
தந்தைதாயறியாமல் தனிவழியேயிறந்தாயோ
என்றுசொல்லிசங்கவதி இயல்பாகஅழுகையிலே
போர்மன்னனுந்தான் புண்ணியனும்வருகலுற்றான்
இதுயேதுயென்று இயல்பாககேட்கலுற்றான்
அப்போதுசங்கவதி அடைவாகச்சொல்லுகிறாள்

ஐவர்கள்வந்ததுவும் ஆலோசனைபண்ணதுவும்
தான்சொன்னவார்த்தைகளைத் தவறாமல்தானுரைத்தாள்
கணவன்தானில்லாமல் கண்மணியைக்கொடுப்பார்களோ
கொடுத்ததினால்தோஷமில்லை கொற்றவனுமடிந்தானே
என்றைக்குநான்காண்பே னேற்றதொருமைந்தனைத்தான்
சங்கதியப்போது தரையில்புரண்டழுதாள்
அழுகிறசத்தம் அபிமன்னன்தான்கேட்டு
இதுயேதுசத்தமென்று எழிலபிமன்கேட்கலுற்றான்
அப்போதுமன்னன் அலறியேஓடிவந்து
உற்றதோர்சேதிதன்னை உரைத்தானேபோர்மன்னன்
அப்போதபிமன்னன் அடைவாகவேதுரைப்பான்
பெற்றபிள்ளைநானிருக்க பேதலித்துநிற்பானேன்
உற்றபிள்ளைநானிருக்க நீங்கள்உருக்கலங்ககாரியமேன்
வளர்த்தபிள்ளைநானிருக்க நீமனங்கலங்கஞாயமென்ன
என்றுசொல்லஅபிமன்னன் ஏதுரைப்பானப்போது
ஐவர்களிருக்குமட்டும் ஆலோசனையென்ன

அபிமன்னன் அத்தையர்க்குத் தேறுதல் சொல்வது

அபிமன்னனிருக்குமட்டும் அதற்குநீயஞ்சாதே
மைந்தனெனுமல்லிராஜன் மகாலோகஞ்சேர்ந்தாலும்
எங்கேயிருந்தாலும் எமலோகம்போனாலும்
பிரமலோகம்போனாலும் விஷ்ணுபக்கஞ்சேர்ந்தாலும்
நாகலோகம்போனாலும் நலமானமைத்துனனை
தெய்வலோகம்போனாலும் திருப்புவேன்கண்டாயோ
போர்மன்னராஜாவே புத்தியுள்ளஎன்மாமா
மதகிரிஎன்மாமா மனதிலொன்றுஞ்சலியாதே
பாண்டவர்கள்என்தகப்பன் பண்பாககொண்டுவந்து
உந்தனுக்குபிள்ளையென்று உபசரித்துதான்கொடுப்பார்
எந்தனுக்குபிள்ளையென்று இறக்கடித்திருப்பேனே
என்றுசொல்லியபிமன்னன் இவ்வார்த்தைதானுரைத்தான்
விலங்கைத்தறியுமையா வெற்றிகொண்டுநான்வாறேன்
கால்விலங்கைத்தரித்து கடுகெனவேவிட்டுவிடும்
என்றுசொல்லியபிமன்னன் எடுத்துரைத்தானந்நேரம்
அப்போதுபோர்மன்னன் அன்பாய்மருமகனை

விலங்கைத்தரித்து வீரியனை வெளிப்படுத்தி
கூட்டிவந்தானப்போது கொற்றவனும்வீதியிலே
வெளியிலேவந்தபின்பு மேலான அபிமன்னன்
சங்கவதிபக்கலுக்குத் தார்வேந்தனோடிவந்து
மாதாவேயென்தாயே மனச்சலிப்புவந்ததென்ன
மனச்சலிப்பைவிட்டுவிடு மாதாவேசிலவுதாரும்
வியாகூலத்தைவிட்டுவிடு வெற்றிகொண்டுநான்வருவேன்
உந்தனிடமைந்தனை இப்போதழைத்துவாரேன்
இதுவேபயணம்மா என்மாதாவேயென்றுரைத்தான்
அப்போதுசங்குவதி அதுகேட்டுசலிப்பாறி
துக்கமதுதான்மறந்தாள் துயரமதை ஆறிவிட்டாள்
போய்வாமகனேயென்று புகழ்ந்துவிடைகொடுத்தாள்
போர்மன்னராசனும் புகழ்பெறவேதான்கூடி
போர்புரவிமுன்னாக புகழ்வீரன்பின்னாக
பயணமதுதான்கூட பார்மன்னரிருவருமாய்
குதிரைமுன்னடக்க கொற்றவர்கள்பின்னடக்க
அல்லிராஜாதானிருக்கும் அசோகவனந்தாண்டி
வாறார்களப்போது வாய்த்ததொருமன்னவர்கள்
வனமாய்வனங்கடந்து வாறார்களப்போது
புன்னைமரத்தருகே புண்ணியர்கள்வந்துநின்று
கண்டவர்களெல்லோரும் கட்டழகரேதுசொல்வார்
வந்ததொருமன்னவர்கள் வகையாகப்பந்தலிட்டு
பந்தலிட்டுப்பின்பாக பார்மன்னரிருவருந்தான்
சவத்தைமெல்லத்தானெடுத்து தயவாககொண்டுவந்து
பந்தலின்கீழே பாங்காயெடுத்துவைத்தார்
வைத்தபின்பாக வாளபிமன்னனுந்தான்
வாருமையாஎன்மாமா வண்மையுள்ளராஜாவே
என்னுடையமைத்துனனே இதமாகக்கூட்டையிப்போ
ஒன்றுந்தொடாதபடி உத்தமாகாருமையா
என்றுசொல்லிபோட்டு இமயகிரிவாளபிமன்
வகையாகச்சொல்லி வாளபிமன்னப்போது

**அல்லிராஜனை அபிமன்னன் பிழைப்பித்தல்**

வானுலகம்புகுந்து மைத்துனனார்தன்னுயிரை
தேடிப்பிடித்து சீக்கிரமாய்கொண்டுவாறேன்

கொண்டுவருகிறேன் கொற்றவனேயென்றுசொல்லி
கூடுகலையாமல் கொற்றவரேபாருமையா
என்றுசொல்லிஅபிமன்ன னிதமாகத்தானுரைத்தார்
தெய்வலோகந்தான்புகுந்து தென்னவனும்தான்பார்த்து
நாகலோகத்திலும் நாகரீகமாய்த்தான்தேடி
தென்னவனுமப்போது தேடித்திரிந்தலைந்து
மாயன்மருமகனும் வானுலகம்தேடிப்போக
மாயன்பெருமாளும் மனதில்கபடுவைத்து
அந்தநல்லவேளையிலே ஆதிநாராயணரும்
என்னவடிவெடுத்தார் எம்பெருமளாப்போது
நந்தகோபாலன் நாராயணமூர்த்தியுந்தான்
தன்னுடையமருமகனைத் தைரியத்தைக்காணவென்று
அபிமன்னன்தானறிய ஆதிகிருஷ்ண்நாராயணரும்
ஏழைபிராமணன்போல் எடுத்தாரேவடிவுதனை
புன்னமரத்தடியே போயிருந்துவேதியரும்
போர்மன்னராசருந்தான் புண்ணியனைக்கண்டானே
கண்டதொருவேதியரும் காவலனும்தெண்டனிட்டு
தெண்டனிட்டுநின்று சிறப்பாகத்தான்புகுந்து
அப்போதுபோர்மன்னன் அடைவாகக்கேட்கையிலே
வாய்மூடிகைகட்டி மன்னவனும்வந்துநின்றான்
மார்பிலேநூலும் வலதுகையில்புஸ்தகமும்
காதில்கவசகுண்டலமும் கடுகெனவேதானணிந்து
குல்லாவுந்தலையில்வைத்து கூனிநடைநடந்து
பீதாம்பரப்பட்டுதனைப் பிரபலமாய்த்தானணிந்தார்
தொப்பைவயிறுடைய துவண்டகிழவனுமாய்
நாணற்பூபோலே நரைத்தகிழவனுமாய்
பண்ணப்பூபோலே பழுத்தகிழவனுமாய்
வலதுகையில்தண்டும் இடதுகையிற்புஸ்தகமும்
கோலூணித்தானடந்தார் கோவிந்தாவென்றுசொல்லி
நடக்கத்தடுமாறி நாராயணாவென்றுசொல்லி
போனார்வனம்புகுந்தார் போர்மன்னன்பக்கலுக்கு
நடந்திங்கேவந்தாரே நல்லதொருவேதியரும்
எங்குவந்தீர்சுவாமி எனக்கறியச்சொல்லுமென்று
அப்போதுபோர்மன்னன் அடைவாகக்கேட்கையிலே

மற்றுமொருக்கால் மன்னவனும்வாய்புதைத்து
கேட்டதேசத்தம் கிருஷ்ணநாராயணரும்
காதிலேதான்கேட்டு கனகமணிவாய்திறந்து
உலகம்பதினுலும் உண்டதொருமாயவரும்
பேசினுரப்போது பேரானமாயவரும்
வாரும்பிள்ளாய்ராஜாவே வாய்த்ததொருமன்னவனே
காதையடைக்குதடா கண்ணைமூடிவருகுதடா
பொசித்துமூன்றுநாளாச்சு போஜனமுமில்லையென்றுர்
ஆனபடியால்நமக்கு ஆரோக்கியமாய்ப்பசிக்குதடா
காசிப்பிராமணன்தான் காவலனேநானுமென்றுர்
தடம்தப்பிவந்தேனடா தார்வேந்தாகேட்டருளும்
புன்னைமரத்தடியே புஷ்பமதுதானெடுத்து
சிவபூசைதான்முடித்து தென்னவனும்நானுமிப்போ
ஆயனைத்தானினைந்து அரிபூசைதான்முடித்து
சாதம்சமைத்து சாப்பாடுபண்ணவேணும்
என்றுசொன்னுரப்போது எம்பெருமாள்மேகவர்ணன்
மன்னவனைப்பார்த்து மாயவரும்ஏதுசொல்வார்
இந்தவனந்தனிலே எங்கேவந்தாய்மகனே
மனஞ்சலித்துமுகம்சோர்ந்து வாடியிருப்பதென்ன
மன்னவனையிவ்வார்த்தை மாயவனுங்கேட்கையிலே
அப்போதுமன்னவனும் அடிபணிந்துதெண்டனிட்டு
ஐயாநான்குருசாமி ஒருஅபகேடுவந்ததையா
ஆரவல்லிபட்டணத்தை ஆணழகனிப்போது
வெற்றிகொண்டுமீண்டுவந்தான் வேந்தனுமிப்போது
வந்தவழியிலே வல்லுயிருமடிந்ததையா
என்னுடையமைந்தனைத்தா னிறக்கடித்துவிட்டு
ஏங்கிமுகம்வாடி இருக்கிறேன்சுவாமியென்றுர்
அப்போதுமாயவரும் அன்பாகயேதுசொல்வார்
மைந்தனிறந்துவிட்டால் மன்னவனேநீர்தானும்
இங்குவந்தகாரியமேன் எனக்கறியச்சொல்லுமென்றுர்
அப்போதுபோர்மன்னன் அடைவாகச்சொல்லுகிறுன்
என்னுடையமைந்தன்தானு மிதமாகப்போனபின்பு
அவனுடையகூடதுவு மடைவுடனேயிருக்குதையா
பச்சைப்பந்தலின்கீழே பாங்காயிருக்குதையா

இருக்குமந்தகட்டை இடையூறுவாராதபடி
காவலாய்நானிருந்து காக்கிறேன்சுவாமியென்முன்
அப்போதுவேதியனும் அன்பாகத்தான்கேட்டு
ஏதடாமன்னவனே ஏற்றதொருப்பொய்க்கட்டை
சீவனிறந்தபின்பு செத்தகட்டைதானல்லோ
சுட்டுத்தான்போட்டால் சுகமாயிருக்கலாமே
சவத்தைத்தான்காப்பார்களோ தரணியில்மன்னவர்கள்
மற்றுமொருக்கால் மாயவருமேது சொல்வார்
வாருமடாமன்னவனே வாய்த்ததொருசீவனைத்தான்
அபிமன்னன்கையிலேதான் அகப்படபோகுதோகாண்
உலகத்திலுண்டோபின் னுயிர்கொண்டுவந்தார்கள்
ஆகாயம்போனவுயிர் ஆர்கொண்டுவந்தார்கள்
உயிர்போனகாயமிது உற்றதுணையாகுமோதான்
சீவன்போனகாயமிது செத்தமண்ணுதானல்லோ
சவத்தைநான்கண்டபின்பு சாப்பாடுபண்ணுவேனே
எடுத்துமிகச்சுட்டுவிட்டா லேற்றதொருமன்னவனே
பூசையும்நான்முடிப்பேன் போஜனமும்பண்ணுவேன்
இல்லாதபோனுக்கா லென்னுயிருந்தான்போகும்
சாப்பாடுமில்லாமல் தலைசுத்திவருகுதுகாண்
போஜனமுமில்லாமல் போகுதுகாணென்னுயிரு
சவத்தையெடுத்துநீ தப்பாமல்சுட்டாலே
சுட்டதின்பிறகேதான் சுத்தம்பண்ணவேணுங்கண்டாய்
போர்மன்னராஜனுந்தான் புண்ணியனுமேதுரைப்பான்
வாருமையாசுவாமி வண்மையுள்ளவேதியரே
வாளாவபிமன்னன் வகையாகச்சீவனைத்தான்
கொண்டுவரப்போனவன் கொற்றவனும்வந்தாரென்றால்
என்னென்றுசொல்லுவே னேதென்றுநானுரைப்பேன்
மன்னவனுமிவ்வார்த்தை மதிமயங்கியுரைக்கலுற்றான்
அப்போதுமாயவரும் அன்பாகவெடுத்துரைப்பார்
காசிப்பிராமணர்தான் காவலனேகேட்டருளும்
விருத்தக்கிழவனுந்தான் வேதியருமல்லவே
என்னபழிவைத்துக்கொண்டாய் இப்படியாகயிப்போ
சுட்டுதான்போட்டாலே சுகம்பெற்றுவாழ்ந்திருப்பீர்
பாவமும்வாரதில்லை பழியுனக்குவாரதில்லை

என்றுதான்சொன்னரே எம்பெருமாள்மேகவர்னம்
இந்தவிசேஷம் எடுத்துரைத்தார்வேதியரும்
அப்போதுபோர்மன்னன் அடைவாயெடுத்துரைப்பான்
வாருமையாசுவாமி வண்மையுள்ளவேதியரே
சொன்னபடிநான்கேட்டேன் நீர்சொல்லுமன்னவனே
அபிமன்றனக்குத்தாரம் அடைவாகச்சொல்லமாட்டேன்
நீர்சொன்னவார்த்தையை தடுப்பேனேயிந்தமட்டும்
என்றுசொல்லபோர்மன்னன் ஏதுசொன்னர்தேதியரும்
அல்லடாமன்னவனே அபிமன்னன்வந்தாலென்ன
விருதுமந்ததோஷம் வேந்தனேபொல்லாது
தோஷங்கள்வருகாமல் சுட்டுவிட்டேனென்றுசொல்ல
அந்தமொழிகேட்டு ஆனதொருபோர்மன்னன்
உற்றுஉற்றுநின்று யோசித்துத்தான்பார்த்து
இறந்துபோனசீவன் இனிவரப்போகுதோதான்
என்றுசொல்லிப்போர்மன்னன் இயல்பாகத்தான்பார்த்து
வேதியருஞ்சொல்ல வேந்தனுஞ்சம்மதித்து
கட்டைமுட்டைதானெடுத்துக் காவலனுமந்நேரம்
அடுக்கினனப்போது அழகானமன்னவனும்
அப்போதுமாயவரும் அன்பாகயேதுரைப்பார்
கட்டைமுட்டையைப்பார்த்துக் காவலனைப்பார்த்தாரையா
நெடுந்தூரம்போயி நஞ்சுகட்டைகொண்டாவென்றார்
போர்மன்னன்தானடக்க புண்ணியருமன்னேரம்
சவத்தைமெள்ளத்தானெடுத்து தாரணியிலப்போது
பூமியையிருபிளவாய் புண்ணியருந்தான்பிளந்தார்
அப்போதுசவத்தைமெள்ள அன்பாகயெடுத்துவைத்து
வைத்ததில்பிறகு வண்ணமையுள்ளமாயவரும்
பூமிதேவியம்மனையும் போதவேதானினைந்து
சவத்தைமெள்ளபத்திரமாய் தான்கார்க்கவேணுமென்று
ஒன்றுந்தொடாதபடி உண்மையாய்க்கார்க்கவென்றார்
மாயவருந்தானுரைக்க மனமகிழ்ந்துபூமிதேவி
நல்லதென்றுதானுரைத்து நலமாகக்காக்கலுற்றாள்
அப்போதுமாயவரும் அல்லிராஜாபாவனையாய்
அடுக்குக்கட்டையைப்போல் அழகாகவுண்டுபண்ணி
மேல்கட்டைதான்வைத்து வேதியனுமிற்கையிலே


நஞ்சுக்கட்டைதான்வெட்ட நெடுந்தூரம்போனமன்னன்
ஓடியேவந்தானே உண்மையுள்ளமன்னவனும்
நஞ்சுக்கட்டை தானும் நேராகநெருப்பையிட்டார்
இருவருங்கூடி ஏற்றதொருகட்டையிலே
சுற்றிநெருப்பையிட சூழ்ந்துதேகட்டையெல்லாம்
எள்ளளவுமில்லாமல் எரிந்துதையா அந்நேரம்
அப்போதுவல்லூரு ஆயனுர்சூதுகளை
கண்டுமனமகிழ்ந்து கானகத்திலிருந்துதையா
மாயவருமப்போது மன்னனுடனேதுரைப்பார்
மனதில்கிலேசம் மன்னவனே வேண்டாங்காண்
நான்போய்வாரேனென்று எம்பெருமாளப்போது
கானகத்தினுட்புகுந்து கடுகிநடக்கலுற்றூர்
நடந்தங்கேபோயி நலமானவடதிசையில்
வந்தங்கேநின்று வருணனைத்தானினைந்து
மின்னலுடனிடியுமாய் பெருமழைபொழியுமென்றூர்
அப்போதுவருணராஜன் ஆகாசமாயிறங்கி
பொழிந்தானேவருணராஜன் பூமியெங்குந்தான்குளிர
மழைபொழியவெள்ளமது வருகுதேயப்போது
வெள்ளமதுவந்து வேந்தனதுசுடலைதன்னை
கண்ணிலையுங்காணமல் கரைந்துதேசாம்பலுந்தான்
அப்போதபிமன்னன் அண்டர்கோமான்பக்கலிலே
மைத்துனனல்லிராஜன் மாண்டதொருவல்லுயிரை
எங்கேயிருக்குதென்று எதிராகத்தான்கேட்டு
இந்திரனுப்போது ஏதுரைப்பான்மன்னனுடன்
ஏதோதெரியாது ஏற்றதொருபுத்திரனே
தெரியுதென்றுசொல்லி தேவேந்திரன்தானுரைத்தார்
தேடியிங்கேபாருமென்று தேவர்களுந்தானுரைத்தார்
பாருமையாபாரும் பார்மன்னுவென்றுரைத்தார்
அப்போதபிமன்னன் ஆராய்ந்துதேடலுற்றூன்
தேடியங்கேபோகையிலே சீர்வேந்தனல்லிராஜன்
தேவாதிமக்களுடன் சேர்ந்துவிளையாடலுற்றூன்
அப்போதபிமன்னன் கண்டானேராஜனுந்தான்
கண்டபோதல்லவோ காவலனும்போய்பிடித்தான்
பிடிக்குமந்தவேளையிலே புண்ணியனுர்சிக்கவில்லை

அபிமன்னப்போது அடைவாகத்தானுரைத்தான்
மைத்துனனேயென்று வகையாகத்தானுரைத்தான்
அப்போது அல்லிராஜன் ஆரென்றுகேட்கலுற்ருன்
வாளாலபிமன்னன் வகையாகத்தான்பார்த்து
கூடிவிளையாடி கொற்றவனுப்போது
இந்திரன்பக்கலுக்கு இதமாகக்கூட்டிவந்து
அப்போதுஇந்திரனும் அடைவாகத்தான்பார்த்து
அல்லிராஜாவை அன்புடனேதான்பிடித்து
சிமிழிலடைத்துக்கொண்டு தென்னவனுமப்போது
அடைத்ததின்பின்பாக அபிமன்னன் கைகொடுத்தான்
போவென்றனுப்பினுர் புகழ்பெரியதேவந்திரன்
வரம்வாங்கிக்கொண்டு மதியுள்ளஅபிமன்னனுமே
தேவேந்திரனுக்குச் சீராகதெண்டனிட்டு
நான்போய்வாறேனென்று நலமாகத்தானுரைத்தான்
பூலோகந்தானிறங்கி புன்னைமரத்தடியில்
வந்தானேமன்னவனும் வாய்ந்ததொருமாமன்பக்கம்
வந்தவுடனே வகையானமைத்துனனை
எங்கேயென்றுகேட்டானே ஏற்றதொருமன்னவனை
அப்போதுமன்னவனும் அழகுமுகம்சோர்ந்து
கண்ணீருந்தானுதிர காவலனுமேதுரைப்பான்
மன்னவனேஎன்மருகா வார்த்தைசொல்லக்கேட்டருள்வீர்
ஒருவேதியன்தானும் விருத்தக்கிழவனைப்போல்
தடந்தப்பிவந்தல்லவோ சாப்பாடுமில்லாமல்
புன்னைமரத்தடியில் புண்ணியனும்வீற்றிருந்தான்
வந்திருந்தவேதியனும் வாகானபொய்க்கூட்டை
கண்டானேவேதியனும் காவலுடபொய்க்கூட்டை
தகணப்பண்ணச்சொல்லி தார்வேந்தனப்போது
ஒருபிடியாய்ப்பிடித்தாரே உற்றதொருவேதியரும்
நல்லதென்றுநானும் நயந்ததொருசுடலையிலே
கட்டைமுட்டைதானடுக்கி சுட்டுவிட்டேனென்றுரைத்தார்
இவரிரண்டுபேரும் இன்பமுடனெரித்துவிட்டோம்
என்றுரைத்தானப்போது ஏற்றதொருமன்னவனும்
அப்போதபிமன்னன் அம்மானைத்தான்பார்த்து
சுட்டவிடமெங்கே சுடலையெங்கேகாட்டுமென்று

அப்போதுபோர்மன்னன் அம்மானைத்தான்பார்த்து
எங்கெங்குந்தேடி இதமாகப்பார்க்கலுற்றார்
சுட்டயிடந்தெரிவவில்லை சுடலையுங்காணவில்லை
பார்த்தவிடமெல்லாம் பசும்பூண்டிருக்குதையா
புல்லுமுளைத்து பூமியெல்லாமறைந்துதையா
வாளபிமன்னனுடனே வாடாமருமகனே
வனங்களெல்லாந்தேடிவந்தேன் தெரியவில்லையிப்போது
தென்னவனேயேதென்று சீராகவேயுரைத்தான்
அப்போதபிமன்னன் ஆர்ப்பரித்துக்கொக்கரித்து
அம்மானைப்பார்த்து அடைவாகயேதுரைப்பான்
மைத்துனனைக்காணுமல் மண்மீதிருப்பதில்லை
என்னுயிரைமாய்ப்பேனென்று எடுத்தானேவாளதனை
அப்போதுராஜாளி அடைவாகவோடிவந்து
வாளாலபிமன்னன் வலதுதோள்தானேறி
இருந்ததொருராஜாளி ஏற்றதொருபூமியிலே
பறந்துபோய்யிருந்துதையா பார்மன்னர்தானறிய
அல்லிராஜாகுடியிருக்கும் அடையாளமென்றுசொல்லி
இருக்குதையாகூடென்று இதமாகராஜாளி
வாளாலபிமன்னன் வகையாகஅவ்விடத்தில்
போய்மிகப்பார்த்துப் புண்ணியனுரப்போது
என்-மைத்துனனுர்கூடு வைத்தவிடமிதுதானே
தெரியவில்லையென்றுசொல்லி தென்னவனுமந்நேரம்
நாட்டினன்வாளை நன்மையுள்ளஅபிமன்னன்
ஊணினுரப்போது உத்தமனுர்வாளதனை
வாளதனைநாட்டி வாளபிமன்னனுந்தான்
மனதில்விசனங்கொண்டு மன்னவனும் போது
சிவனைத்துதிசெய்து துரிதமுடனுக
மைத்துனனைப்போலே மடிந்திடுவோமென்றுசொல்லி
பின்னுமொருதரம் பிரபலமாய்லகுபாய்ந்து
முன்லாகுபின்லாகு முதலாகுதான்பாய்ந்து
கொக்கரித்துலகுபாய்ந்தான் கொற்றவனுமந்நேரம்
மலைகள்மலையுதிர வனங்கள்கொடியதிர
பூமிகள்தானதிர புண்ணியனும்லகுபாய்ந்து
லகுபாய்ந்தாலே நன்ருகக்கைவாளும்

பூமியிலிதங்குதையா புண்ணியனுர்கைவாளும்
அல்லிராஜா கூட்டுக்கு அருகாயிறங்குதையா
இறங்கினபோதே இந்திரனுர்தன்னுயிரும்
அல்லிராஜன் தன்னுயிரும் ஆர்ப்பரித்து அந்நேரம்
மந்திரவாள்படுகுழியில் வகையாக்யிறங்குதையா
இறங்கினபோதே ஏற்றதொருபொய்க்கூட்டில்
புகுந்துதையா அந்நேரம் புண்ணியனுர்தன்கூட்டில்
புகுந்தவுடனே புனிதனல்லிராஜாவும்
மன்னவனுமப்போது மண்ணைப்பிரட்டிவைத்து
புண்ணியனுரப்போது பூமியைப்புரட்டிக்கொண்டு
அதிகவிருப்பமுடன் ஆனந்தவாழ்மார்பன்
பல்வரிசையெங்கேயென்று பாங்குடனேவெளியில்வந்தான்
பல்வரிசைமயக்கமதை பார்மன்னன்மறவாமல்
எங்கேயெங்கேயென்று எடுத்துரைத்தானந்நேரம்
அப்போதுவாளபிமன் ஆர்ப்பரித்தோடிவந்து
மைத்துனனையணைத்து வகையாகத்தான் தழுவி
மாமன்மகனுரை மார்போடுதானணைத்து
அத்தைமகனுரை அபிமன்னன் தான்தழுவி
அப்போதுபோர்மன்னன் அடைவாகவோடிவந்து
மகனுரைக்கட்டி மார்போடணைத்துக்கொண்டு
உச்சிமுகந்து உள்ளங்கால்முத்தமிட்டு
அப்போதுஅல்லிராஜன் அன்பாகயேதுரைப்பான்
மைத்துனனைப்பார்த்து வாய்விசேஷஞ்சொல்லுகிருன்
நெல்லூருபட்டணத்தில் நிறைவானசூதுகளை
இத்யாதிசூதுகள் யாவையுமிகவறிந்து
ஜெயித்துநான்வந்தேனையா கிருபையுள்ளமைத்துனரே
ஆரவல்லிதன்மகளாம் ஆரணங்குபல்வரிசை
வெற்றிப்பெண் கொண்டுவந்தேன் வேந்தனே நானுமிப்போ
வந்ததொருநல்வழியயில் வாகானயென்னுயிரை
மாய்த்தாள்காணுரவல்லி மங்கையவள்மந்திரத்தால்
கற்பனைகள்செய்து சதி செய்தாளாரவல்லி
அவளுடையபட்டணத்தை அழித்துச்சிறைபிடித்து
ஈயடித்துப்போட்டால் என்மனதுக்கொக்குமென்ருன்
அப்போதுபோர்மன்னன் அபிமன்னராஜனுந்தான்

மனதாரக்கேட்டு மன்னவர்கோபமதாய்
வெகுண்டார்சிங்கம்போல் விண்ணுலகந்தானடுங்க
அப்போதுஅல்லிராசனன்ட வாகத்தானெழுந்து
பொய்கையிலேநீராடி புண்ணியனுமப்போது
சிந்தித்துநின்று சிவனையடி தொழுது
அர்ச்சித்துநின்று ஆயனடி தொழுது
தோத்திரங்கள்செய்து துரோபதையைற்றுன்றெழுது
பணிந்துநின்றன்னேரம் பத்திரகாளியைத்தொழுது
பண்டாரவிபூதியைத்தான் பாங்காகத்தானெடுத்து
நெற்றியிலேதான்பூசி நினைவிலேயுச்சரித்து
வந்தானே அல்லிராஜன் வாள்பிமன்பக்கலுக்கு
அப்போதுமூவருமாய் அழகாகத்தான்கூடி
போனார்களப்போது புரவியின் மேலேறி
ராசாளிபறக்குதையா வகையாகப்புரவியுடன்
நெல்லூருபட்டணமாம் நேராகப்பறக்குதையா
பின்னடந்துபோனார்கள் புண்ணியர்களிருவருமாய்
அல்லிராசாவப்போது ஆர்ப்பரித்துநீறெடுத்து
வீருகநீறெடுத்து விட்டெறிந்தான் முன்பாக
ஆலவாய்நீறெடுத்து ஆர்ப்பறித்துவிட்டெறிந்தான்
ஆரவல்லிபட்டணத்தில் ஆர்ப்பரித்துவந்தானையா
அவருடையமந்திரங்கள் அடைவானசூனியங்கள்
எதிர்த்ததேமந்திரங்கள் ஏற்றதொருவில்லிகளும்
ஒட்டிப்பில்லிசூனியங்கள் உருவெடுத்துமந்திரங்கள்
பட்டணத்தைவிட்டகன்று பதின்காதம்ப்றக்குதையா
அல்லிமுத்துயென்றுசொல்லி அலறிபறக்குதையா
தென்னவனும்வாருனென்று சிதைந்துபறக்குதையா
மன்னவன்வாருனென்று மறைந்துப்றக்குதையா
அப்போதுமந்திரிகள் அல்லிராசாவாரரென்று
ஆரவல்லிபட்டணத்தில் அரண்மனையிலிருந்ததெல்லாம்
எல்லையிலிருந்ததெல்லாம் எங்கெங்குமில்லாமல்
பதிங்காதம் பறக்குதையா பாவைபுட சூனியங்கள்
பஞ்சர்கள்தேருகளும் பனிபோலிருந்ததெல்லாம்
பரிதிகண்டபனிபோல் பறந்தோடிப்போச்சுதையா
ஐவருடதேருகளும் அலங்காரமாய்க்கடந்துதையா



பட்டணத்தைநோக்கியே பஞ்சவர்வருகலுற்ருர்
அப்போதுஅல்லிராஜன் அதிகப்பிரியமுடன்
சல்லடந்தட்டிகட்டி சரிகையுருமாலேகட்டி
சகல அலங்காரமும் தனஞ்செயன் செய்துகொண்டு
அதிவிரைவாக அன்போடுமன்னவனும்
அல்லிராஜன் தானும் அழகானபுரவிதனில்
வந்துமேதானறிய மன்னவனுமப்போது
ஓடியேவாரான்காண் உற்றதொருவடதிசையில்
போர்மன்னராசனுந்தான் புண்ணியனுமப்போது
வாலாலபிமன்னன் வகையாயிருவருமாய்
ஆர்ப்பரித்துப்பற்கடித்து அதட்டியேவாருர்கள்
அப்போதுஆரவல்லி அக்காளுந்தங்கையுமாய்
கண்டார்களப்போது காவலர்கள்வருகிறதை
தங்க கயரேசூரவல்லி தாஷ்டீகமாயேழுபேர்கள்
வாருர்கள்மன்னவர்கள் வாழ்வுகுலேந்ததம்மா
மந்திரங்களுள்ளதெல்லாம் வகையாகத்தானெழுப்பி
மன்னவர்கள்தன்னை வழிமறிக்கவேணுமென்று
எங்கெங்கும்பார்த்தார்கள் ஏற்றதொருசூனியத்தை
கண்ணிலேயுங்காணேமடி காரிழையேயென்றுரைத்தாள்
அப்போதுஆரவல்லி அக்காளுந்தங்கையுமாய்
மாற்ருருய்வாருன்காண் வல்லவனுமப்போது
கோட்டையும்கொத்தளமும் கொள்ளாமல்வருகிருர்கள்
ஆரவல்லிபட்டணத்தில் அன்பானபடைத்தலேவர்
கோட்டைநிறைந்தார்கள் கொத்தளங்கள்தெரியாமல்
எங்கேயிருத்துவந்து இதமாகச்சூழ்ந்தார்கள்
அந்தநல்லவேளேயிலே ஐவருமப்போது
தேரைமுடுக்கிவந்தார் திசைகளெங்குந்தானதிர
தென்திசைவீமனுந்தான் தேரைமுடுக்கிவத்தான்
விசயன் நகுலனும் விதமானசகாதேவன்
கீழ்த்திசையில்வந்துநின்ருர் கிருபையுள்ளமன்னவர்கள்
மேலான போர்மன்னன் மேல்திசையில்வந்துநின்ருன்
அல்லிராஜாவும் அன்பானஅபிமன்னன்
இருவருந்தானுமப்போ ஏற்றதொருவடதிசையில்
கொக்கரித்துநின்ருர்கள் கொற்றவர்களன்னேரம்

பத்திரகாளியம்மனுக்கு பாங்குடனேயுத்தாரங்கள்
எழுதினர்ப்போது என்னவென்றுவக்கணைகள்
தாயேநீஈஸ்வரியே சாம்பிராணிவாசகியே
பூலோகநாயகியுன் பொற்பாதம்சரணம்மா
உன்னுடையபேரன்நான் உற்றதொரு அல்லிராஜன்
அடிவணங்கிதெண்டனிட்டு அடியேனெழுதிக்கொண்ட
நெல்லூருபட்டணத்தை நேரானசூதுகளை
கெலித்தேனம்மாவுன்னருளால் கீர்த்தியுள்ளநாயகியே
இப்போ-நெல்லூருபட்டணத்தை ரணக்களம்பண்ணவேணும்
கொலுமுகத்தைவிட்டுக் கொற்றவியேவாருமம்மா
இரணக்களத்தைகாருமம்மா நாயகியேவந்துநின்று
உன்-பூதப்படையை உள்ளதெல்லாமிப்போது
அனுப்பிவைக்கவேணுமம்மா அருமையுள்ளபூதங்களை
பாட்டியரேஎன்தாயே பாரதங்கள்நடக்கவேணும்
என்றுசொல்லிராஜா ஏற்கவேசுருள்காட்டி
உத்தமனும் அல்லிராஜன் ஒளிவான அம்பெடுத்து
ஓலையைத்தான்கொடுத்து ஓட்டிவிட்டானப்போது
அந்தட்சணமே அன்பானஓலைதன்னை

ஓலை பத்திரகாளியம்மனியம் வந்தது

பத்திரகாளியம்மன் பாதத்தில்வந்துதையா
எதிர்த்தார்களப்போது ஏற்றதொருமன்னவர்மேல்
எதிர்த்தவரைக்கண்டானே ஏற்றதொருமதவீதன்
வாளெடுத்துக்கச்சைகட்டி வாகாய்லகுபாய்ந்தான்
இலகுபாய்ந்தெதிர்த்தவரை ரணக்களமாய்வீசலுற்றான்
வீசினனன்னேரம் வீரியனார்அல்லிமுத்து
இருவருங்கூடியே இடமானவடதிசையில்
ஆரவல்லிராணுவங்கள் அணிஅணியாய்நின்றுகொண்டார்
போர்மன்னராசாவு புண்ணியருமப்போது
மேற்றிசையிலெதிர்த்தவரை மேலானசத்திரத்தில்
அந்நேரமறுத்தானே ஆரவல்லிபடையெல்லாம்
தென்றிசையிலெதிர்த்து தேடியடிக்கலுற்றான்
தெண்டாலடித்தானே சிதறுதேமூளையெல்லாம்
அல்லிராசனபிமன்னனும் ஆரவல்லிபட்டணத்தில்

கோட்டைக்குள்புகுந்து கொற்றவர்களிருவருமாய்
அறுத்துக்குவித்தார்கள் ஆரவல்லிப்படையையெல்லாம்
அந்தநல்லவேளையிலே ஆரவல்லிதங்கையவள்
கூடப்பிறந்ததொரு கொம்பனையாள்தங்கையவள்
ஏழுபேர்தங்கையுமே இதமாகவொருதாதியவள்
தப்பினளப்போது தார்வேந்தரைக்காணமல்
ஓடினளப்போது ஒருவருமறியாமல்
தேசம்விட்டுதேசம் தெந்நெல்லிப்போகையிலே
மறைந்தோடிப்போயல்லோ மலையாளந்தான்புகுந்தாள்
மந்திரங்கள்சூனியங்கள் மாயவித்தையானதெல்லாம்
மறைந்தோடிபோனதெல்லாம் மங்கையரைதான்றொடர்ந்து
போயங்கேமலையாளம் புகுந்துதையாசூனியங்கள்
பகவதியம்மனென்று பண்பாகப்பேர்படைத்து
கம்பளத்துதெய்வமென்று கனக்கவேபேர்படைத்து
இருந்தாளேயப்போது ஏற்றதொருபெண்திருவும்
அந்தநல்லவேளையிலே அல்லிமுத்துஅபிமன்னனும்
நேராயிருவருமாய் நெல்லூருபட்டணத்தில்
இருக்குமந்தபடைகளெல்லாம் ஈடழித்தாரந்நேரம்
ஆரவல்லிபெண்டுகளை அன்பாகதேடலுற்றார்
தேடியெங்குபார்த்தார்கள் தெருவீதியுள்ளதெல்லாம்
பார்த்தங்கேவருகையிலே பாவையர்களாறுபேரும்
ஒளித்திருந்தார்நிலவறையில் ஏற்றதொருபெண்களுந்தான்
அப்போதுமன்னவர்க ளரிவையரைக்கண்டவுடன்
கூந்தலிலேகைபோட்டு குலுங்கவேயிழுத்தார்கள்
பிடித்துவந்தவுடனே பெண்களையுமன்னேரம்
ஆறுபேர்பெண்களும் அடைவாகச்சிக்கியபின்
முழிபிதுங்கக்கட்டினார்கள் மூர்க்கமுள்ளபெண்களைத்தான்
கட்டியங்கேயப்போது கன்னியரைப்பார்த்து
இன்னொருத்தி எங்கேயென்று இழுத்தடித்துக்கேட்டார்கள்
அப்போதுபெண்களும் ஆரையாசுவாமியென்று
அறியோமையாயிப்போது ஆரணங்கைக்கண்டதில்லை
ஒளிந்தோடிப்போனாளோ உயிரிழந்துபோனாளோ
நாங்களறிந்ததில்லை நாயகரேயென்றுரைத்தாள்
அப்போதுஅபிமன்னன் ஆர்ப்பரித்துத்தானெழுந்து

காதையறுப்பேனென்று கைவாளைத்தானெடுக்க
அப்போதுஅல்லிராசா அன்பாகசவுக்கெடுத்து
வெட்டவேண்டாமையா வேந்தரேகேளுமையா
என்றுசொன்னானல்லிராசன் ஏதுசொல்வானபிமன்னன்
கொலைசெய்தபாபிகளை குத்தியறியாமல்
கற்பனைசெய்தவரை தலையையறுக்காமல்
சூதுகள்செய்தவரை துணிக்காமல்விடலாமோ
விட்டுவிட்டாலெப்படிதான் இவள்தானேயென்றுரைத்தான்
அப்போதுஅல்லிராஜன் அன்பாகசவுக்கெடுத்து
வீசினாரப்போது வினைசெய்தபெண்டுகளை
சாடினாரப்போது சதிசெய்தபெண்களைத்தான்
முள்ளுசவுக்காலே முட்டினனப்போது
அந்தநல்லவேளையிலே அன்பாகவீமனுந்தான்
அறியாதபிள்ளைதான் ஆனதொருகோட்டையிலே
தனிசண்டைபிடித்தார்கள் தார்வேந்திருவருமாய்
இதுவென்னமாயமோவென் றியலாகநாமறியோம்

*வீமன் வந்து பார்க்கிறது*

பார்த்துவரவேணுமென்று பண்பாகமதவீமன்
ஓடிவந்தாரந்நேர முற்றதொருகோட்டையிலே
அப்பொழுதுயிருவருமாய் ஆரவல்லிதனைப்பிடித்து
சவுக்காலேவீசுவதைக் கண்டானேதார்வேந்தன்
அப்பொழுதுமைந்தர்களை அழைத்தங்கேயேதுசொல்வார்
அடிக்கவேண்டாந்தம்பியரே அன்பானபெண்களை
அடியோடேமூக்கை அறுத்திடவேணுமென்றான்
என்றுசொன்னான்மதவீமன் ஏற்றதொருமைந்தருக்கு
அப்போதுஅபிமன்னன் அழகானஅல்லிராஜன்
இருவருங்கூடி ஏற்றதொருபெண்களைத்தான்
ஆரவல்லிசூரவல்லி அதற்கேற்றவீரவல்லி
அக்காளுந்தங்கையரும் அன்பானபெண்டுகளை
மூக்கோடுகாதை மூர்க்கமுடனறுத்துவிட்டான்
காதோடுமூக்குங் கனிவாயும்மேலுதடும்
அடியோடறுத்துவிட்டா ரானந்தவாழ்மார்பன்
பூதப்படைகளெல்லாம் பொருந்தவேதானிந்து

வெட்டிரணக்களத்தில் விருந்துகளருந்துபென்றுன்
அப்போதுபூதமெல்லாம் அன்பாயருந்துதுகாண்
ஆரவல்லிதங்கையரே அலறமயிர்பிடித்து
அவளுடையமூக்கை யறுத்ததெல்லாந்தானெடுத்து
பூதத்தின் கையிலே புகழ்பெறவேதான்கொடுத்து
நிற்குமந்தவேளையிலே நிலவரையிலிருந்தகன்னி
பல்வரிசைப்பெண்ணும் பாவையருந்தாதியர்கள்
ஓடிவந்தாளே யுற்றதொருமன்னன்பக்கல்
மன்னவனைக்கண்டு மனமகிழ்ந்துதானும்நின்று
பல்வரிசைபெண்ணும் பாங்குடனேதெண்டனிட்டு
தெண்டனிட்டபின்பு சீர்வேந்தன்மன்னவனும்
கூடியேநடந்தார்கள் கொற்றவர்கள்பக்கலுக்கு
மதவீமன்பக்கலுக்கு வாருர்கள்மன்னவர்கள்
மேற்றிசையிலிருந்த மதவீமன்பக்கல்வந்தார்
வந்துகண்டார்மைந்தரும் மதவீமனைதெண்டனிட்டார்
வாளாளபிமன்னனும் வகையாகத்தெண்டனிட்டார்
அப்பொழுதுமதவீமன் அன்பாகவேதுரைப்பான்
வாருங்காண்மருமகனே வண்மையுள்ளமன்னவனே
மாண்டுபிழைத்த மன்னவனே அல்லிமு துு
ஆரணங்குபெண்திருவும் ஆரென்றுகேட்கலுற்றுர்
அப்பொழுதுஅல்லிராஜன் அன்பாகவேதுரைப்பான்
வாருமையாஎன்மாமா மதகிரிராசாவே
பளிங்குமாமண்டபத்தில் பாங்கானநிலவரையில்
வாகான ஆரவல்லி வளர்த்தெடுத்தபெண்ணுமவள்
பல்வரிசையென்று பாங்கானபெயருமிட்டு
வளர்த்துஇருந்தார்கள் வண்மையுள்ளநிலவரையில்
வெற்றிகொண்டமன்னர்க்கு வெற்றிபெண்கொடுப்பேனென
வைத்திருந்தாளாரவல்லி வண்மையுள்ளபெண்திருவை
வெற்றிகொண்டேன்தப்பாமல் வேந்தர்சபையறிய
அப்பொழுதுயெந்தனுக் கதியப்பிரியமுடன்
கொடுத்தாளே ஆரவல்லி சொம்பனையாள்சம்மதித்து
நமக்குவிவாகம் முடிக்கவென்றுதானுரைத்தாள்
சம்மதித்தாள்பெண்ணுமவள் தாய்மாரேஎன்றுரைத்தார்
மதவீமனப்பொழுது மனமகிழ்ந்தேதுரைப்பான்

தங்கையவள்மகனே தாஷ்டிகனேகேட்டருள்வாய்
பல்வரிசைப்பெண்ணை பசுங்கிளியைநாமுந்தான்
கூட்டிப்போய்தர்மாபுரம் கொற்றவனேயுந்தனுக்கு
தேசமன்னர்தானறிய தொல்லுலகோர்தானறிய
திரௌபதியாள்தானறிய தொல்லுலகோர்தானறிய
விவாகமுடித்து வேந்தனேயுந்தனுக்கு
தர்மாயிருவரையும் தானறியச்செய்வோமென்முன்
என்றுசொல்லிமதவீம னிதமாகத்தானுரைத்தான்
அப்போது அல்லிமுத்து அன்பாய்மனமகிழ்ந்து
சந்தோஷமாகத் தயவாகஅல்லிமுத்து
மதகிரிவீமனைத்தான் மற்றொருகால்தெண்டனிட்டு
நெல்லூருபட்டணம் நிர்த்தூளிபண்ணவேணும்
கோட்டையும்கொத்தளமும் கொம்பனையாளரண்மனையும்
இடிக்கவேணுமென் றிதமாகத்தானுரைத்தார்
தேரைநடத்தினன்காண் தென்னவனுமப்போது
கோட்டையின் மேலே கொற்றவனுந்தானடந்தான்
எழுபேர்தானுண் டேற்றதொருபெண்களுந்தான்
ஒருத்திதப்பிஞளேயா உற்றதொருபெண்களிலே
அவளை-கண்ணிலுங்காணேமையா கன்னியிவள்பெண்திரு
ஆறுபேர்மூக்கை அம்மனிடசந்நிதியில் [வை
காளியம்மன்சந்நிதியில் காணிக்கைதானாக
சாமுண்டிசந்நிதியில் தனித்தோரணமாக
கட்டவேணுமென்று காவலனுந்தானுரைத்தான்
அல்லிராஜன்பின்னும் அன்புடனேதானுரைத்தான்
அவர்களுக்காக்கினை என்னவென்றுகேட்கலுற்றார்
ஆரவல்லிப்பெண்களைத்தான் அடைவாகக்கொண்டுவந்தோம்
அப்போதுபஞ்சவர்கள் அன்பாகந்தானுரைத்தார்
ஆரடாதம்பியரே அன்பானஅல்லிமுத்து
மூர்க்கமுள்ளபெண்ணணங்கை மூக்கையறுத்தபின்பு
ஆக்கினைகள்செய்தோமே ஆரணங்கைவிட்டுவிடு
என்றுசொல்லிஅல்லிராஜன் இதமாகத்தான்கேட்டு
பூதத்தைதானழைத்து போய்விட்டாரந்நேரம்

### பூதங்கள் கட்டவிழ்ப்பது

ஆரவல்லிசட்டுகளை அவிழ்த்துவிட்டுவாருமென்ன
பூதங்கள் தான்போய் பெண்ணங்கைத்தானழைத்து
பின்கட்டவிழ்த்துவிட்டு பிரபலமாய்வந்ததுகாண்
அப்போதுஅல்லிராஜன் அன்பானமூக்குகளை
பூதத்தின்கையில் புண்ணியந்தான்கொடுத்து
பயணம்பயணமென்று பார்மன்னரெல்லோரும்
ஐவரதுதேரும் அன்பாகப்போகுதுகாண்
தர்மாபுரம்நோக்கித் தரணியில்நடக்குதையா
பல்வரிசைபெண்ணை பாங்குடனேதான்கூட்டி
எல்லோருந்தான்நடந்தார் ஏற்றதொருவனங்கடந்து
பத்திரகாளிபக்கலுக்குப் பாங்குடனேபோகலுற்ருர்
வனமாய்வனங்கடந்து வாரார்கள்பஞ்சவர்கள்
அம்மனிட சந்நிதியில் ஐவரும்வந்தார்கள்
அம்மனிடபாதம் அடிபணிந்துதெண்டனிட்டார்
அப்போதுபத்திரகாளி அடைவாகத்தான்வாழ்த்தி
நீடூழிகாலம் நீணிலத்தில்மாரணங்கள்
பஞ்சவர்கள்பாரதங்கள் பண்பாய்நடக்குமென்று
சந்தோஷவார்த்தை தானுரைத்தாள்காளியம்மன்
அப்போதுபஞ்சவர்கள் அன்பாகநடக்கலுற்ரு
பஞ்சவர்கள்ஐவருந்தான் பயணமெப்போவென்ருர்கள்
வாளாலபிமன்னன் வண்மையுள்ளஅல்லிராஜன்
மூவருந்தான்கூடி முழுக்கமிட்டார்ப்பரித்து
அம்மனிடசந்நதிக் கடைவாகவந்தார்கள்
போனதொருகாரியங்கள் புதுமைகளைச்சொல்லுமென்ருள்

### அல்லிராஜன் வரலாறு கூறுதல்

அவ்வசனங்கேட்டு அன்பானஅல்லிராஜன்
சொல்லுகிருனப்பொழுது ஜோதிமுடிவேந்தன்
நெல்லூருபட்டணத்தை நேராய்திசைநோக்கி
சூதுகளைவென்றதுவும் சூனியத்தைக்கொன்றதுவும்
விருதுகளைக்கெலித்ததுவும் வெற்றிகொண்டுவந்ததுவும்
ஆரவல்லிதானும் அவகேடுசெய்ததுவும்
அவகேடுவந்தபின்பு அபிமன்னராஜனுந்தான்

வாளாலபிமன்னன் வகையாயெழுப்பின்தும்
மற்றுமொருக்கால் மங்கைய்பட்டணத்தை
மைத்துனருந்தானும் வகையாகப்போனதுவும்
ஆரவல்லிபட்டணத்தை அழித்துமிகக்கொன்றதுவும்
பத்திரமாகப் பஞ்சவர்கள்காத்ததுவும்
போர்மன்னராசனுந்தான் புகழ்வேந்தன்வந்ததுவும்
ஆலவாய்நீறும் அடைவாகத்தந்ததுவும்
அக்காளுந்தங்கையுமாய் ஆரவல்லிதனைப்பிடித்து
பின்கட்டாய்கட்டிப் பிரபலமாய்பிடித்ததுவும்
ஒருத்திதனித்து ஓடியேபோனதுவும்
ஆறுபேர்மூக்கை அடியோடறுத்ததுவும்
நெல்லூருபட்டணத்தை நேராகப்பிடித்ததுவும்
ஆரவல்லிபட்டணத்தி லாமணக்குவிற்றதுவும்
விரைத்ததின்பின்பாக மேலானமன்னவர்கள்
கூட்டமிட்டுநின்றதுவும் கொற்றவர்கள்வந்ததுவும்
ஆரணங்குபல்வரிசை அன்பாகவந்ததுவும்
எல்லாப்புசமும் எடுத்துரைத்தானல்லிராஜன்
கண்டகண்டசேதியெல்லாம் காரணமாய்தானுரைத்தான்
போனதுவும்வந்ததுவும் புகழ்பெறவேதானுரைத்தான்
அதுவெல்லாங்குற்றமில்லை அன்பானபேராநீ
எந்தனுடன்நீயுரைத்த ஏற்றதொருமூக்குகளை
சந்நதிக்குமுன்பாக தார்வேந்தனின்னேரம்
கொண்டுவந்துதோரணமாய்க் கொற்றவனேகட்டுமடா
அப்பொழுதல்லிராஜன் அன்பாயெழுந்திருந்து
ஆறுமூக்குத்தானெடுத்து அழகாகத்தோரணமாய்
சந்நதிக்குமுன்பாக தார்வேந்தர்கட்டிவைத்தார்
அப்பொழுதுபத்திரகாளி அன்பாகத்தான்பார்த்து
என்னடாபேராநீ ஏற்றதொருமன்னவனே
இன்னமொருமூக்கெங்கே என்றுளேஈஸ்வரியும்
அப்போதுமன்னர்க ளடிபணிந்துதெண்டனிட்டு
மூவருந்தான்கூடி முடிமன்னரேதுரைப்பார்
ஈஸ்வரியேயென்தாயே எனைவளர்க்கும்பார்வதியே
கொண்டுவருவோமம்மா கொற்றவர்நாங்களுமே
என்றுசொல்லக்காளியம்மன் ஏதுரைப்பாள்மூவருக்கும்

வாருமடாமன்னவனே வண்மையுள்ளசேவகரே
உங்கள்-மனதறியவேணுமென்று உத்தமியும்நான்கேட்டேன்
என்றுசொல்லியீஸ்வரியு மேற்கவேதானுரைத்தாள்
மன்னவரைத்தான்வாழ்த்தி மாதாவும்வீற்றிருந்தாள்
அப்போதுஅல்லிராஜன் அபிமன்னு கைவாளை
வீரவாள்தானெடுத்து விதமாகமுன்னேவைத்தார்
வைத்ததின்பின்பாக மன்னவர்கள்அன்னேரம்
பல்வரிசைப்பெண்ணை பாங்குடனேகூட்டிவந்து
எதிராகவிட்டார்கள் ஏந்திழையையப்போது
அப்போதுபல்வரிசை அம்மனைத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்ட பூவ்வியன்ர திரிபுரையாள்தான்பார்த்து
வாழ்த்திவிடைகொடுத்தாள் மன்னனல்லிராஜனுக்கு
விவாகமுடித்து வீற்றிருக்கஎன்றுசொல்லி
மணவாளனுநீயுமாக வாழ்ந்திருப்பாயென்றுசொல்லி
அனுப்பிவைத்தபின்பு அன்பாய்நடக்கலுற்றார்
பல்வரிசைப்பெண்ணைப் பாங்காகத்தான்கூட்டி
நடந்தார்களப்போது நலமானபாதைகூடி
தர்மாபுரம்நோக்கி தார்வேந்தர்வாருர்கள்
பஞ்சவர்கள்பக்கலுக்கு பாங்காகவாருர்கள்
கூடியேவந்தார்கள் கொற்றவர்களன்னேரம்
பஞ்சவர்கள்தேரு பறந்துவருகுதையா
தருமாபுரத்தருகே தார்வேந்தர்வந்தார்கள்
அல்லிராஜாவால் அலங்காரம்பாருமென்றுர்
ஆரணங்குபெண்திருவும் ஆரோதெரியாது
சூரியனைப்போலே துலங்குதையாமேனியெல்லாம்
வாரவடிதன்னை வகையாகப்பாருமென்றுர்
பட்டணத்துஜனங்கள் பார்த்துமனமகிழ்ந்து
பூரித்துநின்றுர்கள் புண்ணியரைக்கண்டதில்லை
மல்லிகையும்முல்லையும் மணமுள்ளசெண்பகமும்
இருவாட்சிகொன்றையு மின்ன முள்ளமருக்கொழுந்தும்
ஆலித்துநின்றுர்க ளவரைக்கண்டதினல்
பஞ்சவர்கள்வாருரென்று பட்டணத்துஜனங்களெல்லாம்
வீதிகள்தோறும் விதரணமாயலங்கரித்து
பஞ்பவர்கள்வந்து பட்டணமேசேர்ந்தார்கள்

தர்மாபுரம்புகுந்து தார்வேந்தரிருக்கையிலே
நட்டுமுட்டுநாதசுரம் நல்லதொருவீணைகளும்
பாணங்கள்வில்புருசு வான்மட்டுந் தானதிர
பட்டணத்திலுள்ள பாவையர்களந்நேரம்
மஞ்சணீர்கொண்டுவந்து மங்கையர்களந்நேரம்
எதிராகச்சுற்றினார்க ளேற்றதொருமன்னவர்க்கு
தேரைவிட்டுதானிறங்கித் தென்னவர்களந்நேரம்
வந்தாரே தருமர்பக்கல் மன்னவர்களந்நேரம்
மலர்தூவிதெண்டனிட்டு மன்னவர்கள்நால்வருந்தான்
தெண்டனிட்ட பின்பு தென்னவர்கள்கொலுவிருந்தார்
கொலுவிருந்தாரைவருந்தான் கொற்றவர்களன்னேரம்
வீற்றிருக்கும்வேளையிலே வேந்தனும அல்லிராஜன்
அபிமன்னராஜனுந்தா னன்பாயிருவருமாய்
பாண்டவர்கள்பக்கல்வந்து பண்பாகதெண்டனிட
தெண்டனிட்ட பிள்ளைகளைச் சேரவேதானெடுத்து
இருவரையும்பக்கலிலே யிருமென்றாரப்போது
அப்போதுபல்வரிசை ஆரணங்குமந்நேரம்
தருமரைக்காணத் தாதியர்கள்கூட்டிவந்தார்
கூட்டிவந்துவிட்டார்கள் கொம்பனையையப்போது
விட்டதொருவேளையிலே மெல்லிநல்லாள்பல்வரிசை
அடிபணிந்துதெண்டனிட்டா ளாரணங்குபல்வரிசை
கொம்பனையைத்தான்வாழ்த்தி கொற்றவர்கள்வீற்றிருந்தார்
குருகுலத்துராஜமன்னன் கொற்றவர்கள்வெற்றியென்று
பூலோகமுள்ளமட்டும் போர்நடக்கும்புண்ணியனே
நீணிலத்தில்கதையாகும் நீடூழிகாலமெல்லாம்
என்றுசொல்லிதருமர் இதமாகத்தானுரைத்தார்
சந்தோஷமாகத் தயவாகஅந்நேரம்
வீற்றிருந்தார்பாண்டவர்கள் வீருகஅப்போது
அப்பொழுதபிமன்னனு மன்பான அல்லிராஜன்
இருவருமந்நேரம் இன்பமுடன்மனமகிழ்ந்து
ஆசனத்தைவிட்டிறங்கி ஐவரையுந்தெண்டனிட்டு
மலர்தூவிதெண்டனிட்டு மன்னவர்களிருவருமாய்
திரௌபதியாள்பக்கலுக்கு துரைமார்கள்வாரார்கள்
பூவும்புதுமலரும் புட்பமதுதானெடுத்து

மல்லிகைமுல்லை மணமுள்ளசெண்பகமும்
இருவாட்சிசெண்பக முல்லைமருக்கொழுந்தும்
புஷ்பங்கள்தானெடுத்து புண்ணியர்களிருவருந்தான்
பத்தினியாள்பாதம் பணிந்துதெண்டனிட்டு
வந்துகண்டுமன்னவர்கள் மலர்தூவிதெண்டனிட்டு
தெண்டனிட்டபிள்ளைகளைச் சேரவேதானெடுத்து
இருவரையும்வாழ்த்தி இன்பமுடன்வீற்றிருந்தாள்
அப்போதுஅல்லிராஜன் ஆனதொருசேதிதன்னை
பாண்டவரைக்காக்கவந்த பத்தியென்னுச்சி
நெல்லூருபட்டணத்தில் நேரானதிசைமுகத்தில்
ஆரவல்லிபட்டணத்தில் அன்பாகப்போனேனம்மா
வந்ததேமந்திரங்கள் வகையாகத்தானுமப்போ
பண்டாரவிபூதியைத்தான் பாங்காகவெடுத்தெரிந்தேன்
அதுகளுமாண்டு அன்பாயெரிந்ததம்மா
அனலெரியச்சூனியங்கள் ஆரவல்லிபட்டணத்தை
விட்டகன்றுபோச்சுதம்மா வெற்றியுள்ளசூனியங்கள்
அப்போதுநான்போய் ஆரவல்லிபட்டணத்தில்
கோட்டைக்குமுன்னுகக் கூடாரம்போட்டேனம்மா
கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனையாள்சூதுகளை
விருதுகெலித்தேனம்மா வெற்றிகொண்டுவந்தேனம்மா.
கற்பனைகள்செய்து தனிவழியில்யடித்துவிட்டாள்
அபிமன்னராஜன்வந்து அன்பாயெழுப்பினதும்
மற்றுமொருக்கால் மன்னவர்கள்தான்கூடி
ஆரவல்லிபட்டணத்தை அழித்துமிகமீண்டதுவும்
எல்லாவிபரமும் எடுத்துரைத்தானல்லிமுத்து
மற்றுமொருக்கால் மன்னவனைத்தான்வாழ்த்தி
மண்ணூழிகாலம் மண்டலத்தில்வாழ்ந்திருப்பாய்
கதையுங்கதைநடக்கும் கலியுகமுள்ளமட்டும்
பாரதமாகவேதான் பாருலகமுள்ளமட்டும்
என்றுசொல்லிமன்னவர்க்கு எடுத்துரைத்தாளப்போது
அப்போதுஅல்லிராஜன் அபிமன்னரிருவருமாய்
பத்தினியாள்திரௌபதியை பண்பாகத்தான்பணிந்து
இருவருங்கூடி இருந்தார்களாசனத்தில்
அப்போதுதாதியர்கள் அன்பானபெண்திருவை

பல்வரிசைபெண் திருவைப் பாங்குடனேயழைத்துவந்து
தெண்டனிட்டாள் பல்வரிசை சீராகவடிதொழுதாள்
அப்போதுதிரௌபதியும் அன்பாகத்தான்வாழ்த்தி
பத்தினியேயென்னுச்சி பார்வதியேகேளுமம்மா
ஆரவல்லிபட்டணத்தில் அழகானநிலவரையில்
பளிங்குமாமண்டபத்தில் பாங்கானநிலவறையில்
வளர்த்தெடுத்தபெண் திருவும் மாதாவேயென்றுரைத்தாள்
ஆணலழகன் அல்லிராஜன்தானுரைக்க
திரௌபதிநாயகியும் சொல்லுகிறாள்மைந்தனுக்கு
வாருயோமருமகனே வண்மையுள்ள அல்லிமுத்து
மஞ்சள்நீர்தான்குடித்து நான் வளர்த்தபிள்ளையென்று
பூலோகமெங்கும் பேருமிகவுண்டாச்சு
மைந்தனுக்குபிள்ளையென்று மருமகனுக்குமருமகனாய்
எந்தனுக்குபிள்ளையென்று எல்லோருந்தானறிந்தார்
உந்தனுக்குகலியாணம் உத்தமனேநான்முடிப்பேன்
என்றுரைத்தாளுத்தமியும் இயல்பாகமனமகிழ்ந்து
அப்போது அல்லிராஜன் அன்பாகத்தெண்டனிட்டார்
பாண்டவர்கள்யாவரும் பத்தினியாள்திரௌபதையும்
படைத்தலைமன்னவரும் பார்மன்னரெல்லோரும்
எல்லோருங்கூடி இருக்குமந்தவேளையிலே
ஐவருங்கூடி ஆலோசனைசெய்தார்கள்
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பார்பஞ்சவர்கள்
சங்கவதியீன்றெடுத்த தார்வேந்தனல்லிராஜன்
அல்லிராஜன் தனக்கு ஆரணங்குபெண்திருவும்
கலியாணம முடிக்கவென்று காவலர்கள்தானுரைத்தார்
அப்போது மதவீமன் அந்நேரமேதுசொல்வான்
அல்லிமுத்துராஜனுக்கு ஆரவல்லிதன்மகளை
கலியாணமென்கிறீர்கள் காவலருக்கன்னேரம்
ஆரவல்லிகற்றதொரு ஆரணங்குவித்தையெல்லாம்
கற்றிருப்பாள்பெண்திருவும் கன்னியவள்பல்வரிசை
மனதறியப்போகாது வஞ்சனைகள்மெத்தவுண்டு
என்றுதான்மதவீமன் ஏற்றதொருசபையறிய
அந்தவிசேஷ மன்பாயுரைத்தபின்பு
தாரார்தனஞ்செயனும் தருமரங்குதான்கேட்டு

சாஸ்திரத்தில்வல்லவர் சகாதேவனைத்தானழைத்து
நீசொன்னசாஸ்திரம் நிலையிந்தபூமியிலே
சாஸ்திரமும்பார்த்து தாரணியோர்தாமறிய
வெற்றிகொண்டானல்லிராஜன் வேந்தனுமப்போது
பல்வரிசைபெண்திருவும் பண்பாகநாமுந்தான்
மனதறியப்போகாது மங்கையிடதன்நினைவை
சாஸ்திரத்தினுலேயிப்போ தரர்குழலாள்தன்மனதை
அறியவேணுமிப்போ ஆரணங்குதன்மனதை

சகாதேவர் சாஸ்திரம் பார்க்கிறது

சாஸ்திரத்தைதானெடுத்துச் சதிராகப்பாருமடா
அப்போதுசகாதேவன் ஆனந்தவாழ்மார்பன்
சாஸ்திரத்தைதானெடுத்து தப்பாமல்பார்க்கலுற்ருன்
உள்ளங்கைசாஸ்திரத்தை உள்ளபடி பார்க்கலுற்ருன்
சாஸ்திரத்தைபார்த்தல்லோ சகாதேவனேதுரைப்பான்
தர்மர்முகம்நோக்கி சாஸ்திரர் கொடிவேந்தன்
அண்ணன்முகம்நோக்கி ஆனந்தவாழ்மார்பன்
சொல்லுகிருனுள்ளதெல்லாம் சோதனைகண்டதெல்லாம்
ஆரவல்லிகற்றதொரு அன்பானமந்திரங்கள்
சூரவல்லிகற்றதொரு அன்பானமந்திரங்கள்
கன்னியவள்கற்றதில்லை காவலரேயென்றுரைத்தார்
ஆரணங்குதானறியாள் ஆனதொருமந்திரத்தை
வித்தையொன்றுங்கற்றதில்லை விதமானபல்வரிசை
சூதுகளறிந்ததில்லை தோகையவள்பல்வரிசை
எவ்வளவுமனக்கவலை இல்லையென்றுதானுரைத்தார்
அப்போதுதருமர் அழகானதம்பியரே
கலியாணமுகூர்த்தம் கடுகெனவேமுடியுமென்ருர்
அப்போதுமன்னவனும் அன்பாகவேதுரைப்பான்
அல்லிமகாராஜாவுக்கு அழகுள்ளபல்வரிசை
இருவருக்கும்பொருத்தம் இதமாகஅறியவேணும்
மன்னவனுட பேரும் மங்கையுடதன்பேரும்
பொருத்தம்அறியவேணும் புண்ணியனேதம்பியென்ருர்
வேதியரையழையுமென்ருர் வேந்தனும்தர்மராஜன்
அப்போதுமாயவரும் ஆனதொருவேதியராய்

தொண்ணூறுபிராயஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
நரைத்தகிழவனைப்போல் நாராயணரும்தோன்றினர்
காதிலேகுண்டலமும் கையிலேபுத்தகமும்
ஆபரணம்பூண்டு அழகானமாயவரும்
தள்ளாடிநடைநடந்து தாமோதரரும்வந்தார்
வந்ததோர்மாயவரை வணக்கமுடனுக
நமஸ்காரஞ்செய்தார் நலமானபஞ்சவர்கள்
இருக்குந்தலமெங்கே ஏகாந்தவேதியரே
நான் காசிப்பிராமணன் காவலரேகேட்டருளும்
உலகளந்தமாயவர்க்கு உற்றதொருவேதியர்காண்
அப்போ-மனமகிழ்ந்துபஞ்சவர்கள் மாயவனைத்தானினைந்து
ஆயனருளாலே அன்பாகவுங்களுக்கு
மாயனருளாலே மனமகிழ்ச்சியெங்களுக்கு
ஒரு-பஞ்சாங்கம்சொல்லுமையா பாருலகந்தானறிய
பஞ்சவர்கள் தானுரைக்க பாங்குடனே தானுரைப்பார்
பிள்ளையார்பிடித்து பிரியமுடன்வையுமென்ருர்
லட்சம்பொன் தட்சணைகள் நாயகனுர்வையுமென்ருர்
வேதியனுர்சொற்படிக்கு வேந்தர்களந்நேரம்
வைத்தார்கள்விநாயகனை வையகத்துராஜமன்னர்
வேதியருமந்நேரம் விநாயகர்பூசைபண்ண
கண்டகண்டசேதியெல்லாம் காரணமாய்த்தானுரைத்தார்
உண்டுண்டுசுவாமி உண்மையிது வென்றுரைத்தார்
அல்லிராசாவுக்கு அருமையுள்ளபல்வரிசை
இருவருக்கும்பொருத்தமென்ன வென்றுதான்கேட்டார்
அப்போதுவேதியனும் அன்பாயுரைக்கலுற்ருர்
பொருத்தமதுபார்த்து பெரியதொருவேதியனும்
பல்வரிசையென்றசொல்லை பஞ்சவரேவிட்டுவிடும்
பூவையர்க்குத்தான்பேரும் புவனமெங்குந்தானறிய
வேறேயொருபேரும் வேந்தர்கள்தானறிய
வாலாம்பாளென்றுசொல்லி வையகந்தானறிய

எல்லோருந்தானிருக்க எடுத்துரைத்தார்மாயவரும்
கூட்டிவந்தார்கன்னிகையும் மாயருடசீர்பார்பாதம்
மங்கையவள்கன்னிகையும் மாயனுடசீர்பாதம்
அடிபணிந்துதெண்டனிட்டா ளாரணங்குபெண்திருவும்
வாழ்த்தியெடுத்து வாலாம்பாவென்றுரைத்தார்
அப்போதுபஞ்சவர்கள் அனைவருந்தானுரைத்தார்
கலியாணமுகூர்த்தம் கடுகெனவேமுடியுமென்றார்
பொருத்தமும்நன்றாக போதவேயிருக்குதையா
அப்போதுவேதியரை அனுப்பிவைத்தார்ரைவர்களும்
பார்ப்பானும்போனபின்பு பார்மன்னரைவருந்தான்
இன்றைக்குப்பார்த்தார்கள் என்றேகலியாணம்
சோபன்வோலை சுருக்காயெழுதிவிட்டார்
தேவாதிதேவரெல்லாஞ் சேரவே வாருமென்றார்
சங்கவதிநாயகிக்குத் தனியோலையனுப்பலுற்றார்
வந்தாளேசங்கவதி மன்னவர்களைவரைத்தான்
அடிபணிந்துதெண்டனிட்டாள் அன்பானதங்கையரும்
கலியாணமுகூர்த்தம் கடுகெனவேசெய்யவென்று
அழைத்தேனம்மாவென்று ஐவருமேதானுரைத்தார்
பட்டணமெங்கும் பாவனையாயலங்கரித்து
அலங்கரித்துக்கூட்டியமைத்தார் அல்லிமகாராசாவை
அப்போதுஅல்லிராசன் ஆனையின்மேலேறினன்
திரௌபதிநாயகியுந் தோகையர்கள்தான்பார்த்து
தாதியரைப்பார்த்து தாயாருமேதுரைப்பாள்
வாலாம்பாள்தன்னை வகையாயலங்கரிப்பாள்
அப்போதுதாதியர்கள் ஆரணங்குபெண்திருவை
மன்னவர்கள்தான்மெச்ச மங்கையர்களலங்கரித்து
தேரின்மேலேறுமென்றாள் தேன்மொழியாளந்நேரம்
ஏறினாள்தேர்மேலே யெனக்கானரம்பையைப்போல்
மாணிக்கமாலையை வகையாககைகொடுத்தார்
கொடுத்தவொருமாலைதன்னை கொம்பனையாளப்போது

சுழற்றியெறிந்தாளே சுந்திரபூஞ்சாயநல்லாள்
அப்போதுமாலை அல்லிராஜன் தன்கழுத்தில்
மாணிக்கமாலை மன்னனிடதிருத்தோளில்
ஆணிக்கையாக வருள்பெற்றிருந்ததுகாண்
அல்லிநல்லராசனுக்கு ஆரணங்குமாலையிட்டாள்
பேரரசன்மைந்தனுக்குப் பூவையரும்மாலையிட்டாள்
சங்குவதிமைந்தனுக்குத் தார்குழழுலுமாலையிட்டாள்
யானைமேல்பேரிகை யதிரமுழங்குதையா
கொட்டிமுழங்கி கோலவண்ணமணவரையில்
மணவரையில்வைத்து மன்னவர்க்கும்மங்கையற்கும்
சீருகள்செய்தார்கள் தென்னவர்களெல்லோரும்
மஞ்சள்நீராடி மன்னவர்களெல்லோரும்
மேலானதேவர்களும் விடைபெற்றுப்போனார்கள்
போர்மன்னராஜனுந்தான் புகழ்பெறவேயன்னேரம்
சங்கவதிநாயகியும் தார்வேந்தனல்லிராஜன்
வாலாம்பாள்தானும் மற்றுமுள்ளமன்னவரும்
மதகரியாள்பட்டணத்தே மன்னவர்களெல்லோரும்
பயணம்பயணமென்று பாலகருந்தாமறிய
அப்போதுஅல்லிராஜன் அனைவரையும்தெண்டனிட்டு
அடிபணிந்துபெற்ற ஆண்மையுள்ளஅல்லிராஜன்
வாழ்த்தியெடுத்தார்கள் மன்னவர்களனைவருந்தான்
பெண்ணணங்குவாலாம்பாள் பூவையரும்தெண்டனிட்டாள்
பாண்டவர்களப்போது பண்பாகத்தான்வாழ்த்தி
போவென்றனுப்பிவைத்தார் புண்ணியர்களனைவருந்தான்
தையல்திரௌபதிபாதம் தரிசித்துதெண்டனிட்டாள்
வாழ்த்தினளப்போது வகையாயிருவரையும்
விடைகொடுத்தாளுத்தமியும் வீராகத்தானுமிட்டு
நடந்தார்பயணமதாய் நாணயமாய்ப்போது
சங்கவதிதானுந் தன்னரண்மனைக்குப்போய்புகுந்தார்
அல்லிராஜாதானும் அரண்மனையுட்புகுந்து

வாலாம்பாள்தானு மாளிகையுட்புகுந்தாள்
மாதரிடபட்டணத்தில் மன்னவர்களெல்லோரும்
அவரவர்கள்தன்பதியில் அரசர்களெல்லோரும்
தர்மாபுரமாளும் தார்வேந்தர்பஞ்சவர்கள்
ஆயனருளாலே அல்லவரும்வீற்றிருந்தார்கள்
முப்பத்துமுக்கோடி முனிவர்கட்கு தெண்டனிட்டேன்
ஈசுரர்க்கும்பார்வதிக்கு மின்பமுடன்வணங்கினேன்
எல்லோருங்கூடி யெனைக்காக்கவேணுமையா
காலுந்தலைநோகாமல் காப்பீர்களெந்தனைதான்
திரௌபதையருளாலே திறம்பெற்றுவாழ்ந்திருப்பார்
பத்திரகாளியருளாலே பாக்கியங்கள்பெற்றிருப்பார்
வாழ்வார்கள்வாழ்ந்திருப்பார் மருமண்டலம்பெற்றிருப்பார்
பொன்னுலகம்வாழி பூவையர்கள்தான்வாழி
அந்தணர்கள்தாம்வாழி அரசர்களுந்தான்வாழி
படிப்போரும்கேட்போரும் பாருலகில்வாழ்ந்திருப்பார்
மக்கள்சம்பத்துண்டாய் மானிலத்தில்வாழ்ந்திருப்பார்

ஆரவல்லி சூரவல்லி கதை
முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சகம். சென்னை-1 (1976)

# மாயாஜால மர்மங்கள்

[நான்கு பாகங்கள் அடங்கியது]

## விலை ரூபாய். 4-50.

இந் நூலில் வேண்டிய அநர்வன வித்தைகளும், மோடி வித்தைகளின் இரகசியங்களும், மற்றும் யாவரும் பிரமிக்கத் தக்க பல ஜாலங்கள், பல சித்துக்கள் விளையாடும் மை வகைகளும், அஞ்சன மைகளும், செப்பிடிவித்தை, சொக்குப்பொடிகள் தூவி, அஷ்டகர்ம கரு மை, மற்றும் முனிவர்கள், வாசி, ஜாலக்கள், குட்டிச்சாத்தான், பக்ஷணி, அநுமான், நாடன், பகவதி, இருளிகாட்டேரி வசியங்களும், அதற்கு வேண்டிய மந்திரங்களும் மற்றும் கோகர்ண ஜுகர்ண இந்திர குபேந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதிபிடித்தல், வேப்பிலை அடித்தல், பேய்பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சநிபதிகள் பிரியா நிருத்தல், சடுமருந்தை முறித்தல், மற்றும் பாம்பு, தேள், சாப், பூனை, எலி இது போன்ற பல விஷஜெந்துக்களின் கடி விஷங்களைபொழித்தல், இன்னும் ஜாலக்காரரின் ஜெகஜால வித்தைகள், முள்ளின்மீது படுத்தல், நெருப்பை கையிலள்ளுதல், நெருப்பு மிதித்தல், நெருப்புசட்டி ஏந்தும் குஷ்டம், நெருப்பை மடியில் கட்டுதல், ஊசியின்மீது படுத்தல் ஜலத்தில் உட்காருதல், வயிற்றில் சட்டிபாய்ச்சுதல், மோடியின் மூலம், மூசமான வித்தைகள், வனவிலங்குகளை அடக்கி ஆளுதல் உடுக்கையை உடைத்தல், கன்றுகுட்டியின் தலை கத்துதல் உள்ளுயிர் தரித்திருத்தல், ஆட்டுமந்தையை மாட்டுமந்தை யாக்குதல், அந்தரமாகநிற்குதல், குளத்தினுள் சென்று விடும் சமுத்தல், பந்தயம் ஜெயித்தல், பாகுகொம்பு பாட்டு பாடுதல், இதுபோன்ற எண்ணிலடங்காத ஏராளமான ஜால வித்தைகள் இதில் அடங்கியுள்ளது.

எமது விலாசம் :—

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
மின்ட் போஸ்ட் சென்னை-1.